மாவிலி மைந்தன் கவிதைகள்

# வைகறை வானம்

சி. சண்முகராஜா
(மாவிலி மைந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவிலி மைந்தன் கவிதைகள்

# வைகறை வானம்

சி. சண்முகராஜா
(மாவிலி மைந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

நூல்: வைகறை வானம்

ஆசிரியர்: சி.சண்முகராஜா (மாவிலி மைந்தன்)

மொழி: தமிழ்

உரிமை: ஆசிரியருக்கு

முதற் பதிப்பு: செப்ரெம்பர் 2012

அட்டைப்பட வடிவமைப்பு: சாலினி சண்முகராஜா

Title: Vaikarai Vaanam

Author: S.Shanmugarajah (Maavili Mainthan)

Language: Tamil

Copyright: Author

First Edition: September 2012

Cover Design: Shalini Shanmugarajah

Printers: MultiSmart Solution
Canada.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கை

என்னைத் தமிழுக்காய்த் தந்து மறைந்த எனது தாய், தந்தை இருவருக்கும், தாய் மண்ணில், தம்மைத் தமிழுக்காய்த் தந்த அனைத்து மாவீரர்கள், தியாகிகள், பொதுமக்கள் அனைவருக்கும் இந்நூலைக் காணிக்கையாக்குகிறேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகறை வானத்து ஒளிக் கீற்றுகள்

அணிந்துரை 7
பாயிரம் 13
பதிப்புரை 19
வாழ்த்துக்கள் 23
வாழ்த்துரை 25
வாழ்த்துரை 33
வாழ்த்துப்பா 35
அறிமுக உரை 37
என்னுரை 43

**பகுதி 1**

**மரபுக் கவிதைகள்**

சுமைதாங்கி 51
இறைவனைத் தேடி 52
தாயே தெய்வம் 53
அவள் 55
அர்ச்சனை 57
நினைவெல்லாம் நீயே 59
(உளம்) புகுந்த மண் 63
பொங்குக இன்பம் 66
சிந்தையில் தீட்டிய சித்திரம் 68
புதிய சபதம் 69



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| புறப்படுங்கள் புதுமைகள் படைக்க | 71 |
| இந்நிலத்துக் காதல் | 74 |
| கரைதாண்டி வந்த கடலே | 75 |
| வருக புத்தாண்டே | 77 |
| சோதிடப் புரட்டு | 79 |
| வீழ்வது மீண்டும் எழுவதற்கே | 83 |
| ஒன்றாகி உயர்வோம் | 85 |
| அந்த நாள் | 89 |
| நலவெண்பா | 91 |
| வெண்பாச் சரம் | 92 |
| வைகறை வானம் | 93 |
| தவிப்பு | 94 |
| அழகின் பரிசு | 95 |

## பகுதி 2

## கவியரங்கக் கவிதைகள்

| | |
|---|---|
| வசந்தம் | 99 |
| எழுகின்ற தேசம் | 108 |
| மலரட்டும் மனித நேயம் | 112 |
| கம்பன் கண்ட கற்பு நெறி | 117 |
| காலத்தை வென்ற கவிஞன் | 124 |
| பொங்கல் நாள் | 134 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி 3

## விடுதலைக் காற்றில் விரிந்த மொட்டுக்கள்


| | |
|---|---|
| தேசியத் தலைவன் | 143 |
| பல்லாண்டு நீ வாழ்க | 145 |
| வாழ்க பல்லாண்டு | 147 |
| பொங்கு தமிழ் | 149 |
| நீள்துயிலில் நித்திலப் புன்னகை | 152 |
| தேசத்தின் குரல் | 154 |
| உரிமைக் குரல் | 157 |
| நாங்களும் நீங்களும் | 160 |
| நாளை நமதே | 162 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

கவிஞர் மாவிலி மைந்தன் அவர்களின் வைகறை வானம் என்ற கவிதைத் தொகுதிக்கு அணிந்துரை எழுதக் கிடைத்த வாய்ப்பை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன். மகிழ்ச்சி நன்கு அறிந்த நண்பரின் தொகுதியில் உள்ள கவிதைகளை முதலாவதாகச் சுவைக்கும் முன்னுரிமையால் வந்தது. அதுமட்டுமன்றி இது நண்பரின் கவிதைகளின் முதலாவது தொகுதியுமாகும்.

மாவிலி மைந்தனைக் கவியரங்கங்கள் வாயிலாகவும், பத்திரிகைகளில் அவ்வப்போது வெளிவந்த கவிதைகள் மூலமாகவும் நான் நன்கு அறிவேன். பண்டிதர் அலெக்ஸ்சாந்தர் அவர்களும் யானும் நடத்திய தமிழ்க் கவிதை மரபு வகுப்பில் மாணவராக இருந்து தமிழ்க்கவிதை வளர்ந்து வந்த வரலாற்றையும் செய்யுள் இலக்கணத்தையும் கற்ற மாணவர்களில் மாவிலி மைந்தனும் ஒருவர். கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் தலைவர்.

மாவிலி மைந்தனின் இயற்பெயர் சி. சண்முகராஜா என்பது. புனைபெயருக்குக் காரணம் நெடுந்தீவில் இவர் பிறந்த மாவிலிப்பிட்டிதான். இக்காலத்தில் சண்முகராஜாவிலும் மாவிலி மைந்தன் இலக்கிய உலகில் மிகவும் பிரபல்யம். கனடிய இதழ்களில் இவரது கவிதைகள் அடிக்கடி வெளிவருவதுண்டு. வெளிவந்ததும் வெளிவராதவையுமான 38 கவிதைகளை 'வைகறை வானம் ' என்ற மகுடத்தில் தொகுத்துத் தந்திருக்கின்றார்.

தொகுதி மூன்று பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளன. முதலாவது பகுதியில் மரபுக் கவிதைகளும் இரண்டாவது பகுதியில் கவியரங்கக் கவிதைகளும் மூன்றாவது பகுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைக் காற்றில் விரிந்த மொட்டுக்களும் இடம்பெற்றுள்ளன. முதலாவது பகுதியில் இருபத்திரண்டு மரபுக் கவிதைகள் உள்ளன.

இக்கவிதைகள் தமிழ்ச்செய்யுள் மரபில் மாவிலி மைந்தனுக்குள்ள அறிவையும் அனுபவத்தையும் நன்கு எடுத்துக் காட்டுவனவாக இருக்கின்றன. கீர்த்தனை, வெண்பா, விருத்தம், கட்டளைக் கலித்துறை, ஆசிரியப்பா, சிந்து ஆகிய செய்யுள் வடிவங்களில் கற்பனைத் திறத்தால் நல்ல கவிதைகளைப் படைத்திருக்கின்றார். கற்பனை இன்றிக் கவிதை இல்லை. கவிதைக்குப் பொய் அழகு என்று கவியரசு வைரமுத்து பாடியிருப்பது இந்தக் கற்பனையைத்தான்.

மாவிலி மைந்தனின் கற்பனை வளத்துக்கு உதாரணங்களாக அர்ச்சனை என்ற பாடலில் வரும்,

**"காலையிளங் கதிர்வீச்சின் சுகத்தை உந்தன்**
**கையணைப்பில் அனுபவித்துக் களித்த துண்டு**
**மாலையிலே வருடுகின்ற தென்றல் காற்றின்**
**மயக்கத்தைத் தாலாட்டில் உணர்ந்த துண்டு**
**சேலைபற்றி உன்பின்னே சென்ற நாட்கள்**
**தீராத சுகமாக நெஞ்சில் உண்டு**
**பாலைசுடப் பசுமைபெறும் பாதம் பட்டால்**
**பாசமழை சொரியும்நீ பரிவின் ஊற்றே"**

என்ற செய்யுளையும் விழுவது மீண்டும் எழுவதற்கே என்ற பாடலில் வரும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**“போர்மேகம் பொழிந்தே ஓயப்**
**பொறுக்காத வானம் மீண்டும்**
**கார்மேகம் கூட்டி வந்து**
**கடலாகக் கொட்டித் தீர்க்க**
**ஊர்மனை யெல்லாம் வெள்ளம்**
**உறவுகள் வாழ்விற் கண்ணீர்**
**வேர்விழு தறுந்து சாய்ந்த**
**விருட்சமாய் ஆனார் மக்கள்”**

என்ற முதலாவது செய்யுளையும் காட்டலாம்.

வெண்பா இவருக்கு நன்கு வருகின்றது. பொங்குக இன்பம், இந்நிலத்துக் காதல், வெண்பாச் சரம் ஆகிய யாவுமே நேரிசை வெண்பாக்களாக உள்ளமை, பலருக்குப் பாகற்காயாக இருக்கும் வெண்பா, மாவிலி மைந்தனுக்கு வாழைப்பழமாக இருப்பதைக் காட்டுகின்றது.

இரண்டாவது பகுதியில் கவியரங்கங்களிற் பாடிய ஆறு கவிதைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவையும் மரபுச் செய்யுளாக்கங்களாயினும் அரங்கத்துக்கேற்ற வகையில் நடைகளும் சந்தங்களும் பின்பற்றப்பட்டுள்ளன. மேலும் வலுவான கருத்துக்களை மக்கள்முன் வைக்க வேண்டும் என்பதில் கவிஞர் கொண்டுள்ள ஆர்வமும் முகிலைக் கிழித்துவரும் கதிரொளிபோன்று வெளிப்படுவதைப் பார்க்க முடிகின்றது.

**“ஒருவனுக் கொருத்தி யென்ற**
**உயர்தமிழ் நீதி ஆண்பெண்**
**இருவரும் போற்றி வாழ்ந்தால்**
**இல்லறம் சிறக்கும் அன்றோ”**

**– கம்பன் கண்ட கற்புநெறி .**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"தினமுமொரு கையளவு சோற்றுக் காகத்**
**திசைதெரியா திருப்போரின் விதியை மாற்றத்**
**தினவெடுக்கும் இளைஞர்தோள் சேர வேண்டும்**
**தீமைகளைத் தீயிலிட்டுப் பொசுக்க வேண்டும்"**

**– மனிதநேயம் மலரட்டும்**

என்பன போன்ற சமூகநலச் செய்திகளைக் கவிஞர் துணிந்து சொல்கின்றபோது கவியரங்கத்தின் பயன்பாடும் வலியுறுத்தப்படுகின்றது.

கவிஞரின் விடுதலையுணர்வு இப்பகுதியில் மட்டுமன்றி மூன்றாவது பகுதியிலும் வீச்சாக மூச்செடுக்கின்றது. பகுதி மூன்றில் ஒன்பது கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. தனது நாட்டுப் பற்றை முன்னிலைப்படுத்துவதுபோல 'விடுதலைக் காற்றில் விரிந்த மொட்டுக்கள்' என்றே இப்பகுதிக்குப் பெயரும் வைத்திருக்கின்றார். இப்பகுதிக் கவிதைகள் மரபும், மரபு சாராக் கவிதைகளையும் கொண்டிருக்கின்றன.

கவிதை இக்காலத்தில் மரபுக் கவிதை, வரிக்கவிதை(புதுக்கவிதை) என இருவகை ஆறுகளாகப் பாய்ந்து கொண்டிருக்கின்றது. மரபுக் கவிதை ஆற்றுக்கு வரம்புகள் உள்ளன. வரிக்கவிதைக்கு வரம்புகள் இல்லை. எந்தவகைக் கவிதை என்றாலும் சொல்லவரும் பொருளுக்கு அழகானதும் அளவானதுமான சொற்களால் கற்பனையும் விற்பன்னமும் கலந்த வடிவம் கொடுப்பவனே கவிஞன் என்ற தகுதிக்கு உரியவனாகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தொகுதிக் கவிதைகளிலுள்ள உணர்வோட்டமும் கற்பனை வளமும் சொற்சுவையும் பொருள் நயமும் மாவிலி மைந்தனை ஒரு நல்ல கவிஞனாகக் காட்டுகின்றன என்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

வாசகரும் இவ்வித மகிழ்ச்சியைப் பெறுவர் என்று உறுதியாகச் சொல்வேன். எனது வாக்குமூலத்தைச் சோதிக்க விரும்புகின்றவர் கட்டாயம் வைகறை வானத்தை வாங்கிப் படிப்பார்கள் என்பதும் எனக்குத் தெரியும். அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்!

கவிஞரை வாழ்த்தமுன் வாசகரை-சுவைஞரை வாழ்த்துவது என்பது அவ்வைப் பிராட்டியார் சோழ மன்னனை "வரப்புயர" என்று வாழ்த்தியதைப் போன்றது.

கவிதை வளர்ச்சிக்கு - கவிஞர்களை ஊக்குவிப்பதற்குக் கவிதைகளை வாசித்துச் சுவைத்து கவிஞர்களைப் பாராட்டத்தக்க வாசகர் தேவை. எந்த வாசகரும் இந்தக் கவிதையை இரசிக்காமல் இருக்க முடியாது.

**"பூம்புன லாடிப் புதுப்பொலி வேறிய**
**மாம்பழ வதனம் மயக்கிடக் காந்தள்**
**விரல்களால் கோதி விரிந்த குழலைப்**
**பரல்கள் ஒலிக்கப் பாங்காய் முடித்தே**
**கரைதனில் மெதுவாய் கால்பதித் தேறத்**
**திரைவில கிடவே தேசென ஒளிரும்**
**பேரெழிற் பருவப் பெண்ணவள் போலக்**
**காரிருள் அகலக் கதிரொளி பரவ**
**வைகறை வானம் வனப்புடன் விரியப்**
**பொய்யகல் புனிதம் பொலிவது அழகே!"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதமான ஒரு கவிதை இது. சங்ககாலக் கவிதைகளோடு வைத்து எண்ணத்தக்க தகுதியுடையது.

கவியரங்கங்கள் மூலம் மாவிலி மைந்தன் தனக்கென ஒரு கூட்டத்தைச் சேர்த்திருக்கின்றார் என்பதை நான் நன்கு அறிவேன். அவர்களின் ஆதரவோடு வைகறையை அடுத்து வரும் விடியலையும் வடிவுறவே கண்டு வளர்ந்து. தொடர்ந்து கவிதை உலகத்து நண்பகலாக விளங்க வாழ்த்துகின்றேன்.

**கவிஞர் வி. கந்தவனம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாயிரம்

"வைகறை வானம்" என்ற இக்கவிதை நூலை ஆக்கியவர் திரு. சின்னத்தம்பி சண்முகராஜா அவர்கள். இவர் 'மாவிலி மைந்தன்' என்ற புனைபெயரில் கவிதைகள் கட்டுரைகள் எழுதி வருகிறார். 'மாவிலித்துறை' பசுந்தீவாகிய நெடுந்தீவில் உள்ள ஒரு இறங்கு துறைமுகம். திரு. சண்முகராஜா தான் பிறந்த பொன்னாட்டையும் தாயையும் அதிகம் நேசித்தபடியால் 'மாவிலி மைந்தன்' என்ற புனைபெயரில் எழுதுகிறார் போலும். இக்கவிஞர் பல்வேறு காலங்களில் எழுதிய கவிதைகளையும், தங்கப்பதக்கங்கள் பெற்ற கவிதைகளையும், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் கற்ற பின் எழுதிய கவிதைகளையும் வாசிக்கும்போது உயர்நிலை அடைந்த கவிஞனின் வளர்ச்சிப்படிகளை அறிய முடிகிறது. இவர் தமிழ் மொழியையும், கவிதை இலக்கணத்தையும் ஆர்வமாய்க் கற்கிறார். அதன் வழி உச்சமடைகிறார் என்பதை யானும் கவிநாயகர் கந்தவனம் ஐயா அவர்களும் நடத்துகின்ற இலக்கண இலக்கியக் கலந்துரையாடல்களில் இவர் கடந்த நாலாண்டு காலமாகப் பங்கு பற்றி வருவதால் அறிய முடிகிறது. இன்றைய கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத் தலைவராகவும் இருந்து திறம்பட மொழிக்கும் இலக்கியத்திற்கும் வளர்பணி செய்கிறார்.

புலப்பெயர்விலும், "இலக்கியம் காலத்தின் கண்ணாடி" என்பதை அவ்வவ் நிகழ்ச்சிகள் நடக்கும் காலத்தே, பல்வேறு மெய்ப்பாடுகள் தோன்றக் கவிதை புனைகிறார். இதனாற் போலும் கவிதைப் போட்டிகளில் தங்கப் பதக்கங்கள் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வைகறை வானம்' என்ற கவிதை நூல் தமிழர் புலம் பெயர்ந்து வாழும் இடங்களிலும், ஈழத்திலும் பயன்படும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. 'வைகறை வானம்' விடிவிற்கு முந்திய நிலையை மட்டுமல்லாது, விடிவும் ஏற்படும் என்பதையும் உறுதிப்படுத்தும் காரணப் பெயராகவும் இக்கவிஞர் பயன் படுத்தியுள்ளார். 'வைகறை வானம்' என்ற இக்கவிதை நூல் மூன்று பகுப்புகளாயுள்ளன.

அவை மரபுக் கவிதைகளாகவும், பாவினத்தில் அடங்கும் கவிதைகளாகவும், பரிசில் பெற்ற கவிதைகளாகவும் எழுதப்பட்டுள்ளன. வெண்பாக்கள் வழுவின்றி வெண்டளையால் எதுகை, மோனை சிறக்க எழுதப்படல் வேண்டும். இவர் எழுதிய நேரிசை வெண்பாக்கள் அற்புதமானவை. செம்பொருள் விஞ்சி வருவன. பாவினப் பாடல்களும் மிகச் செறிந்த சொல்லின்பமும், ஓசையின்பமும் ஓங்க எழுதப்பட்டுள்ளன. பதினான்கு சீர்க் கழிநெடிலடி விருத்தமும் தன் வித்துவம் விளங்க எழுதியது வியப்பிற்குரியதே!

இந்நூல் நுதலும் பொருள், சமகால நிகழ்ச்சிகளும், சால்புசார் அன்னை, தாய் நாடு, தத்துவம் போல்வனவாகவும், கவியரங்கப் பாடல்களாகவும், விடுதலை வேட்கைப் பாடல்களாகவும் உள்ளன. இவர் எழுதிய கவிதைகள் நுதலும் பொருளையும் கையாண்ட உத்திகளையும் உவமை உருவக அணிகளையும் தொட்டுக்காட்டல் வாசகர்களாகிய எமக்கெல்லாம் நயப்பாகும் என்பதென் எண்ணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அம்மாவே தெய்வம் உலகினிலே' என்பதை இவர் பாடல்களில் பல்வேறு இடங்களில் பார்க்கலாம். இவர் மதிப்புரைக்காகத் தந்த கைந்நூல் எனது மேசையிலிருக்கும்போது "அம்மா" பற்றிய பாடல் சிலவற்றை வாசித்த கவிஞர் ஒருவர். "இப்பாடலை எவ்வாறு சண்முகராஜா(மாவிலி மைந்தன்) பொருளில் உவப்பும். உள்ள நெகிழ்வுறும் வகையிலும் பாடினார்?" என்று கேட்டார்.

அதற்கான காரணத்தைக் கவிதை ஆக்கியோனிடமே கேட்டேன். தனது தந்தையைத் தான் சிறுவயதிலேயே இழந்துவிட்டார் என்றும் தனது தாயே தனக்கு எல்லாமாக இருந்து வளர்த்த முறையை இன்றும் எண்ணவெண்ண உள்ளத்தில் ஏற்படும் உணர்வுகளின் வெளிப்பாடே தாய் பற்றிய பல்வேறு கவிதைகள் என்று கூறினார். நல்ல கவிஞனுக்குக் கவிதை. "உள்ளது. நல்லது. புலவனாலே யாக்கப்படுவது" என்ற கூற்றுப் பொருந்தும்.

**"அன்னையோர் ஆலயம் ஆங்கவளே தெய்வமுமாம்**
**தன்னையே சோதியெனத் தந்தபெரும் – பொன்மனத்தாள்**
**பெற்றவளைப் பற்றிவெண் பாமாலை சூட்டியவள்**
**பொற்பாதம் போற்றுவதென் பேறு."**

மேற்படி நேரிசை வெண்பா பழந்தமிழ் இலக்கியத்தை நினைவூட்டுகிறது. அன்னையை ஆலயமாய். தெய்வமாய். பாசத்தின் பிணைப்பாய்ப் பாடிப் பரவசமடையும் மாவிலி மைந்தன் கவிதைகள் இலக்கியத் தேன் துளிகள். இவர் மனைவியை மனையாளாக மட்டும் காணாது. தாயாய். தோழியாய். ஆலோசகியாய். சேவகியாய். அவள் வகிக்கும் பல்வேறு பாத்திரங்களைக் கூறி மகிமைப்படுத்திப் பாடிய பாடல்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"மங்கையராகப் பிறப்பதற்கே – நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்ற கவிமணியின் அடிகளுக்கு வாழ்க்கைத் தத்துவத்தைத் தந்து புகழோங்கச் செய்கின்றன.**

'வைகறை வானம்' தருகின்ற பாடல்களில் இறையின் தத்துவ இயல்புநிலை, வாழ்க்கைப் புரிந்துணர்வு, இறையில் சரணடைதல் என்ற பகவத் கீதையின் கருத்தையும் காண-முடிகிறது. இறைவனே எம்சுமைதாங்கி, அவனிடமே சரண-டைவோம், சர்வமதக் கருத்தும் ஒன்றே, சால்பும் மனிதமும் ஒன்றே என்ற பாவிக அணிப்பொருளாய் 'வைகறை வானம்' விளக்குவது யதார்த்தமும் தத்துவமும் ஆக்கும் செம்பொருளாம்.

**"இயற்கையின் இருப்பும் இயக்கமும் நீயே**
**இல்லா(து) இருக்கும் புதுமையும் நீயே**
**வியத்தகு விந்தைக் காட்சியின் பொதியே**
**விளங்கிட முடியாத் தத்துவ நீதியே"**

என்றும்,

**"அரிஅரன் அல்லா இயேசு வென்றோதும்**
**ஆயிரம் மதமிங் கிருந்திட்ட போதும்**
**நெஞ்சினில் நிறைவது ஒருபரம் பொருளே**
**நிலமெங்கும் மானிடம் ஓங்கிட அருளே"**

என்றும் மொழியும் இவரது பாடல்கள் சிந்தனைப் பூக்களின் நிறைதரு வாசம் என்றும் வீசச்செய்து விழுமிய வாழ்வு வாழச் செய்யும். இவர் பயன்படுத்திய உவமைகளும், உருவக அணிகளும் எடுத்த பொருளை இலகுவாய் விளங்க, விளக்க உதவுகின்றன. "மனித நேயம் மலரட்டும்" என்ற கவிதையில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"கனிகொடுக்கும் மரங்கள்போல் மனங்கள் வேண்டும் காற்றுப்போல் கலக்கின்ற உள்ளம் வேண்டும்"** எனத் தன் வேட்கையைக் கூறுகிறார்.

நாட்டுப் பற்றைப் பல இடங்களில் எடுத்துக்காட்டுவமை அணிசிறக்க வாழ்த்தியது எம்மினத்தையும், எம்நாட்டையும் ஓவியமாகக் காண வழிவகுக்கின்றது.

**"சிறகடித்துத் திசையெங்கும் சிதறிப் பறந்தாலும்**
**பறவையினம் தன்கூடு பற்றித் திரும்புதல்போல்"**

என்ற அடிகளும் மேலும் இவைபோல் பல பாடல்களில் உவமை, உருவகம், இதரவிதர உவமை கூறிப் பல்வேறு மெய்ப்பாடுகளை வாசகர்களுக்கு ஏற்படுத்துகிறார்.

'வைகறை வானம்' கனடிய மண்ணையும், ஈழத்து மண்ணையும் அங்குமிங்கும் காணும் சுகதுக்கங்களையும் இணைக்கிறது. இலக்கியம் காட்சி என்பதை வசந்தகாலக் கனடியத் தமிழர் திருவிழாக்களும், பல்வேறு சடங்குகளும் காட்டுவனபோல், ஈழநாட்டின் மனிதமும், இனிதான உறவுகளும், பறவைகளும், ஆலயங்களும், ஊர்களின் பெயர்களும் ஒன்றிணைப்பாக்கத்தைக் காட்டி நிற்கின்றன.

'வைகறை வானம்' என்ற இக்கவிதை நூலை வாசிக்கும் ஆர்வலர்கள் தொடர்ந்து வாசிப்பர். கவிஞர்கள் அவர் கூறும் உத்திகளையும் அணிகளையும் இரசிப்பர். புறநானூற்றின் இயற்கைக் கொள்கையும் வீரமும் செறிந்த இந்நூல் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு நல்ல தமிழ் விருந்தாகும். கனடியத் தமிழ்ச் சமூகமும், புலம் பெயர் தமிழ் பேசும் மக்களும் "யாதும்ஊரே யாவரும் கேளிர்" என்பதை விதந்தோதும் நற்கவிதை, உணர்வு வெளிப்பாட்டு நூலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க கவிஞர் சண்முகராஜா! வளர்க அவர்தம் கவியாற்றல்! இறையருளால் நீள்க அவர் ஆயுளும் அன்பு மனையும்! வாழும் இலக்கியம் அவர் மேன்மேலும் படைக்க என் ஆசிகளும் கூறி இறையருளால் மேன்மேலும் ஓங்குக என வாழ்த்துகிறேன்.

**நேரிசை வெண்பா**

செம்பொருள் பாட்டிலே சேர்க்கும் கவிவானம்
தம்மிதயம் சாருணர்வு தந்தகவி - செம்மனத்தான்
சண்முகராஜ் சாற்றும் சமகாலச் செய்திகளே!
எண்ணத்தைப் பாதிக்கும் ஈர்ப்பு. (1)

வைகறை வானம் விடிவெள்ளி ஆகிவிடும்
ஐங்கணை வாசம் அருளும் - அகம்மகிழும்
ஐக்கிய நாடுகள் ஆர்த்து அறம்பெருக்கும்
தக்கதீர்வு தானடையும் தான். (2)

தாய்நாடு தாய்ப்பற்று தார்மீகத் தண்டமிழில்
ஆய்ந்து பதக்கம் பெறுகவிகள் - மெய்ம்மை
விளங்கவே சண்முகராஜ் வேண்டுகவி ஆசி
வளம்பெறவே ஈசா வழங்கு. (3)

**பண்டிதர் ம. செல்வராசா அலெக்ஸ்சாந்தர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

கற்பனைத் திறனும், கவிதை புனையும் விற்பன்னமும் தன்னகத்தே கொண்டு விளங்கும் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் தலைவரான கவிஞர் மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா அவர்களின், முதற் கவிதைத் தொகுப்பான 'வைகறை வானம்' என்னும் நூலை வெளியிட்டு வைப்பதில் எமது அமைப்பானது மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறது. இவ்வெளியீடானது எமக்குக் கிடைத்த இரண்டாவது அரும்பெரும் வாய்ப்பாகும்.

தமிழ் மரபுக்கவிதைகளை இலக்கண விதிகளுக்குட்பட முறையாகப் பயின்ற கவிஞர்களால் 2011ம் ஆண்டு நவம்பர் மாதம் தோற்றம் பெற்ற மேற்படி கழகமானது, அண்மையில் எமது முதலாவது வெளியீடாகக் கவிநாயகர் வி.கந்தவனம் அவர்களின் நற்பொருள் நாற்பது, புதுவாழ்வுப் பூவண்டு எனும் இரு நூல்களைக் கனடியத் தமிழ் ஆர்வலர்கள் மத்தியில் முன் வைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கவிஞர் கந்தவனம், பண்டிதர் அலெக்ஸ்சாந்தர் ஆகிய இரு ஆசிரியப் பெருந் தகைகளினாலும் கற்பிக்கப்பட்டுப் புடம் போட்ட தங்கமென உருவாகிய படைப்பாளியின், யாப்பிலக்கண வரம்புகளுக்குக் கட்டுப்பட்ட பல இன்சுவைப் பாடல்களை உள்ளடக்கியதாலும், தாயக மீட்பிற்காகக் களமாடிக் காவியம் படைத்தோர் பற்றிய தரவுகளாலும், மற்றும் சமுதாயத்தை நல்வழிப் படுத்தும் பல பகுத்தறிவு சார்புப் பாடல்களால் அலங்கரிக்கப் பட்டதாலும் இத் தொகுப்பானது நுகர்வோர் நெஞ்சங்களைத் தன் வயப்படுத்தும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழம் நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட மாவிலி மைந்தன் அவர்கள் மிகத் தீவிரமான மொழி, இன, நாட்டுப் பற்றாளனாவார். இதனை அவரது படைப்புக்கள் மூலமாக நாம் அறிய முடிகிறது. பிறந்த பதியிலன்றித் தற்போது தான் வாழ்ந்து கொண்டிருக்கும் கனடிய மண்ணிலும் தனது மக்களுக்கான பெருந் தொண்டினை ஆற்றி வருபவர். யாழ், கொழும்பு ஆகிய இடங்களில் அமைந்த மருத்துவ தாதிகள் பயிற்சிக் கல்லூரிகளில், தாதிகள் கல்வியியல் டிப்ளோமாப் பட்டம் பெற்றவர். வட தமிழீழம், தென் தமிழீழம், மற்றும் மத்திய கிழக்கு நாடான ஓமான் மஸ்கட் ஆகிய இடங்களின் மருத்துவத் தாதிகள் கல்லூரிகளில் தாதிகள் பயிற்சிப் போதனாசிரியராக நீண்ட காலம் கடமை ஆற்றியவர். தற்சமயம் ரொறொன்ரோ கிழக்கு பொது மருத்துவமனை அவசர நோயாளர் பிரிவில் மேற் பார்வையாளராகப் பணியாற்றுகிறார். விஞ்ஞானப் பிரிவிற் கல்வி கற்று, மருத்துவத்துறை சார்ந்த தொழில்முறையில் தனது அதிகப்படியான நேரத்தைச் செலவு செய்தாலும், பள்ளிப்பருவம் தொட்டுத் தமிழ்மீது கொண்ட ஆர்வத்தினாலும், தமிழ் இலக்கியத்திற்குக் கொடுத்த முக்கியத்துவத்தினாலும் கிடைக்கப் பெற்ற பேறே இப் புலமையாகும்.

எளிமையும், இனிமையும், தலைமைத்துவப் பண்புகளும் ஒருங்கே அமையப் பெற்ற கவிஞர் மாவிலி மைந்தன் அவர்கள், எமது அமைப்புக்குத் தலைவராகக் கிடைத்தமை மிகவும் பயனுள்ள, மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். எமது மக்கள் பெறுமதி மிக்க இப் படைப்பினைப் பெற்றுப் பயனடைவர் என்பது எனது திடமான நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தித்திக்கும் தேன் பனுவல்கள் பலவற்றை யாத்தளித்து அதன் சுவையில் நாமெல்லோரும் இன்புற வைத்த இச் செய்யுளாசிரியர், மேன்மேலும் இத்துறையில் வளர்ச்சியடைந்து பல ஆக்கங்களை இயற்றித் தமிழ் நெஞ்சங்களின் போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியவராக விளங்க உளமார வாழ்த்துகிறேன்.

**பவானி தர்மகுலசிங்கம்**
**துணைத் தலைவர், கனடா தமிழ்க் கவிஞர் கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துக்கள்

தமிழ்க் கவியே! தன்னிகரற்ற எங்கள் தந்தையே!
உயிருக்குயிரான உங்களுக்காக எமது உணர்வுகளுக்கு
உருக்கொடுத்து உயர்கின்றன **உயிரெழுத்துக்கள்!**

**அ**ன்பினால் எம்மை அரவணைத்து
**ஆ**ணவத்தை எம்மில் அகற்றிவைத்து
**இ**னிய தமிழை எமக்களித்து
**ஈ**ழவராய் எம்மை வாழ வைத்து
**உ**ழைத்து உழைத்து எமை வளர்த்து
**ஊ**ர் போற்றும் வகை வாழவைத்து
**எ**ளிமையின் பயனை எடுத்துரைத்து
**ஏ**ணியாய் இருந்தெமை ஏற்றிவைத்தீர்
**ஐ**யமில்லைத் துளியளவும்,
**ஒ**ன்றா இரண்டா உம்கவிதை
**ஓ**ரா யிரமோ அத்தனையும்
**ஔ**வியம் போக்கும் ஔடதமே!

என்றே உம்மை வாழ்த்துகிறோம்!

என்றும் உங்கள் பாசமலர்களாம்,

**பிள்ளைகளும் அவர்களுடன் இணைந்து மனைவி,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

சொற்களுக்கு இசை பொருத்திக் கருத்துக்களை வெளிப்படுத்துவது செய்யுள் எனப்படும். இன்று இது பாடல் அல்லது கவிதை என்று அழைக்கப்படுகிறது. சங்க காலத்தில் இலக்கியம் செய்யுள் வடிவிலேயே பயிலப்பட்டு வந்தது. செய்யுள் வடிவத்திலிருந்த இலக்கிய வடிவம் சங்கமருவிய காலத்திலே தோன்றிய சிலப்பதிகாரத்தில் சில பகுதிகள் உரைநடை வடிவம் எடுத்தது. அதனால் சிலப்பதிகாரம் 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என வழங்கப்படுகிறது. தமிழ் இலக்கியப் படைப்பில் கவிச்சுவைக்கு கம்பராமாயணமும், கருத்துச்சுவைக்கு திருக்குறளும், காவிய நடைக்கு சிலப்பதிகாரமும் தலை சிறந்தனவாகக் கருதப்படுகின்றன. இதனைப் பாரதியாரின் "யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவன் போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" என்ற பாடல் வரிகள் உறுதி செய்கிறது.

இலக்கியம் செய்யுள் வடிவத்தில் இருந்ததற்கு இரண்டு முதன்மைக் காரணங்கள் உண்டு. ஒன்று ஒரு பொரு-ளைச் சுருக்கமாகச் சொல்வதற்கு செய்யுள் நடையே கைகொடுக்கும். இரண்டு ஓலைச்சுவடிகளில் எழுத்தாணியால் எழுதும் போது எதனையும் நீட்டி எழுத முடியாது. சங்கமருவிய காலத்திலே தோன்றிய உரைநடை இலக்கிய வடிவமானது பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டியர் காலத்திலும் பலவித வளர்ச்சிப் படிகளைத் தாண்டி இருபதாம் நூற்றாண்டிலும் உச்ச நிலையை அடைந்து பின்னர் உரைநடை இலக்கியத்துக்கு வழிவிட்டது.

மேலை நாட்டாரது வருகையை அடுத்து தமிழில் சிறுகதை, நாவல், கடிதம், தன்வரலாறு, வசனக் கவிதை, புதுக்கவிதை, முதலிய உரைநடை இலக்கிய வடிவங்கள் பிறப்பெடுத்தன. அவை ஏட்டில் அல்லாது பல்லாயிரம் பேர் படிக்குமாறு அச்சில் வெளிவந்தன. காரிகை கற்றுக் கவி பாட முடியாதவர்கள் உரைநடையில் எழுத வழி பிறந்தது. பாடல்கள் இருவகைப்படும். மரபுப் பாடல் என்பது தொன்று தொட்டு வருவது. இனிய ஓசை நயம் அமைந்த பாடல்களைக் கேட்டுப் பழகியவர், அதே ஓசையில் பாடல் புனைய முயன்று பிறர் படிக்கவும் இவ்வாறே புதியன படைக்கவும் 'பாடல் அமைப்பை' எழுத்து, அசை, சீர் என அமைத்து ஒழுங்குபடுத்தியிருத்தல் வேண்டும். இவ்வாறு யாப்பிலக்கணம் தோன்ற அடுத்தடுத்து வந்தவர் அம்மரபு மாறாமல் பாடல் படைக்கத் தொடங்கினர்.

பாடுபொருளும் உத்திகளும் புதியனவாயினும் மரபு இலக்கணத்தின்படி படைக்கப்படுதலின் இவை மரபுக்கவிதை எனப்படுகின்றன. புதுக்கவிதை, வழிவழியாக மரபு கெடாது யாப்பிலக்கணத்தோடு பொருந்தி வரும் கவிதைகளிலிருந்து மாறுபடும் கவிதைப் படைப்பு ஆகும். புதுக்கவிதைகள் உருவத்தால் மட்டுமன்றி, உள்ளடக்கம், உத்திமுறைகள் ஆகியவற்றாலும் புதுமையுடையனவாகும்.

கவிஞர் மேத்தா பின்வருமாறு புதுக்கவிதையின் இலக்கணத்தையும் இயல்பையும் வகுக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"இலக்கணச் செங்கோல்
யாப்புச் சிம்மாசனம்
எதுகைப் பல்லக்கு
மோனைத் தேர்கள்
தனிமொழிச் சேனை
பண்டித பவனி
இவையெதுவும் இல்லாத
கருத்துக்கள் தம்மைத்தாமே
ஆளக் கற்றுக்கொண்ட
புதிய மக்களாட்சி முறையே
புதுக்கவிதை (ஊர்வலம்)"**

இன்று செய்யுள் இலக்கியம் திரையுலகத்தில் எல்லோரையும் சுண்டியிழுக்கும் இலக்கிய வடிவமாக தலையெடுத்துள்ளது. பண்டைய வாழ்வியலைச் சங்க இலக்கியங்கள் எப்படிப் படம் பிடித்துக் காட்டினவோ அவ்வாறே இன்றைய மக்களினது வாழ்வியலை எல்லாக் கோணத்தில் இருந்தும் படம் பிடித்துக் காட்டும் புதுமை இலக்கியமாகத் திரையிசைப் பாடல்கள் இருக்கின்றன. தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தளவில் இது ஒரு புதிய வடிவமா-கும். செய்யுள், உரைநடை இலக்கியவடிவங்கள் யாவும் மக்கள் படித்து இன்புற்று பயன்பெறத் தக்கவகையில் அமைந்தவையே. சங்கால இலக்கியம் காதல், வீரம், மானம், விருந்தோம்பல், போர், வாழ்க்கை, தொழில், நில வகைகள் பாடுபொருளாகக் கொண்டிருந்தன. பின்னர் சங்கமருவிய காலத்தில் அறமும் பல்லவர் மற்றும் சோழர் காலத்தில் பக்தியும் பாடுபொருளாகின. இவை அனைத்தும் இன்றைய திரை இலக்கியத்தில் எதிரொலிக்கின்றன. செய்யுள் இலக்கியத்தில் புதுமை படைத்த பெருமை பாரதியாரையே சேரும். இதனால்தான் பாரதியைப் பாடாத கவிஞர் இல்லை. பாரதியைப் பாடாதவர் கவிஞரே இல்லை என்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியாரது பாடல்கள் திரைப் பாடல்களாக இடம்பெற்ற போது முன்னரை விட அவை பொதுமக்களைப் போய்ச் சேர்ந்தது. காரணம் அப்பாடல்களில் காணப்பட்ட சொல்லின்பம், பொருளின்பம் ஆகியவற்றோடு ஓசை இன்பத்தையும் காட்சி இன்பத்தையும் சேர்த்து அளித்தமையாகும். செந்தமிழ் நாடெனும் போதினிலே, காணி நிலம் வேண்டும், உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி, மங்கியதோர் நிலவினிலே, நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே நீங்களெல்லாம் சொற்பனந் தானா? போன்ற பாடல்கள் திரை மூலமே அமரத்துவம் பெற்றன.

பாரதி வழியில் பாரதிதாசன், கண்ணதாசன், வாலி, வைரமுத்து போன்றவர்கள் திரையுலகில் தங்கள் பாடல்கள் மூலம் தமிழுக்குப் பட்டாடை கட்டியுள்ளார்கள். இவர்களே தமிழ்த் திரைப்படப் பாடல்களுக்கு இலக்கியத் தகுதியை வழங்கிய ஒப்பற்ற கவிஞர்கள் ஆவர். காதல் இல்லாத இலக்கியங்களே இல்லை எனலாம். இலக்கியங்கள் யாவும் மனித வாழ்வைப் பின்னிப் பிணைத்துக் காட்டுகின்றன. சங்க கால இலக்கியங்களில் காதல், வீரம் இரண்டினாலும் நிறைந்திருக்கின்றன. பாரதி, பாரதிதாசன் வழியில் வந்த கவிஞர் கண்ணதாசன் சங்க இலக்கியப் பாடல்களை எளிய நடையில் இலகு தமிழில் பாமரரும் புரியும்படி அதே நேரம் சங்கப்பாடல்களில் இல்லாத ஓசை நயத்தோடு பாடியிருக்கிறார். குறுந்தொகைப் பாடல் ஒன்று இப்படி அமைகிறது.

**"யாயும், ஞாயும் யார் ஆகியரோ**
**எந்தையும் நுந்தையும் எம் முறை கேளீர்!**
**யானும் நீயும் எவ்வழி அறிதும்**
**செம்புலப் பெயல் நீர் போல**
**அன்புடை நெஞ்சம்தான் கலந்தனவே"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய தாயும் உன்னுடைய தாயும் எந்த வகையில் உறவினர் ஆவார்? என்னுடைய தந்தையும் உன்னுடைய தந்தையும் எந்த முறையிலே உறவினர்? இப்பொழுது ஒன்று சேர்ந்திருக்கும் நானும் நீயும் இதற்கு முன்னர் எந்த இடத்தில் ஒருவரையொருவர் பார்த்துப் பழகி அறிந்திருக்கிறோம்? செம்மண்ணில் பெய்த மழைத் தண்ணீரைப் போல அன்புள்ள நமது உள்ளம் தாமாக ஒன்றோடு ஒன்று கலந்து விட்டன. இந்தக் குறுந்தொகைப் பாடல் கண்ணதாசன் கைவண்ணத்தில் இப்படி உருவம் பெறுகிறது.

**"நேற்று வரை நீ யாரோ நான் யாரோ**
**இன்று முதல் நீ வேறோ நான் வேறோ**
**காணும் வரை நீ எங்கே நான் எங்கே**
**கண்டவுடன் நீ எங்கே நான் அங்கே......"**

இந்தப் பாடலில் கண்ணதாசன் வள்ளுவனின் குறள் தரும் இலக்கிய நயத்தையும் படைத்திருக்கிறார். "யான் நோக்கும் காலை நிலன் நோக்கும் நோக்காக் கால் தான் நோக்கி மெல்ல நகும் " என்றான் வள்ளுவன். காதலிற்கு மெருகூட்டுவது "நாணம்" என்ற பொருளாகும். காதல் வயப்பட்ட ஆணும், பெண்ணும் பேசிக் கொள்ளும் போது, ஆணானவன் நிமிர்ந்து பெண்ணின் முகம் பார்த்துப் பேசிக் கொள்வான். ஆனால் பெண்ணானவள் ஆண் தன்னைப் பார்க்கும் போது நிலம் பார்த்து காலால் கோலம் போட்டுக் கொள்வாள். அதேவேளை ஆண் தன்னைப் பாராத நேரம், அவனைப் பார்த்து மகிழ்ச்சி கொள்வாள். இது காதலில் பெண்மையின் சிறப்பு. இதையே கண்ணதாசன் இப்படிப் பாடுவார்.

**"உன்னை நான் பார்க்கும் போது மண்ணை நீ பார்க்கின்றாயே!**
**விண்ணை நான் பார்க்கும் போது என்னை நீ பார்க்கின்றாயே!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகியின் பாடலின் முதல் அடியையொற்றி இலக்கிய வார்த்தைகளை உபயோகித்து பெண்மையின் சிறப்பை பறைசாற்றும் வகையில் ரேவதி தாயான வேளையில் ஒலிப்பதாக அமைந்த பாடல் கவிஞரின் திறனுக்கு சான்று.

மாசறு பொன்னே வருக! திரிபுரம் அதை எரித்த ஈசனின் பங்கே வருக!! காய் என்னும் சொல்லைத் தாவர விளைவான காய் என்னும் பெயர்ச்சொல்லிலும் காய் என்னும் வினைச்சொல்லிலும் (வெம்மையுற வீசு, கோபம் கொள், கடிந்து பேசு) ஆய் என்னும் வேற்றுமை உருபாகவும் பல்பொருள்படப் பயன்படுத்திக் கவிஞர் ஆடிய சொற்சிலம்பம் வியப்பூட்டி இன்பம் பயக்கிறது.

**"அத்திக்காய் காய் காய்**
**ஆலங்காய் வெண்ணிலவே**
**இத்திக்காய் காயாதே**
**என்னுயிரும் நீயல்லவோ"**

அந்தத் திசையில் வெம்மையுற வீசு ஆலமரத்துக் காயைப் போன்று தூரத்தே இருந்து சிறிதாகத் தோன்றும் வெண்ணிலவே! இந்தத் திசையில் வெம்மையுற வீசாதே! ஏனென்றால் என் உயிராக உன்னைக் கருதும் நான் நின்றுகொண்டிருக்கிறேன். கன்னிக்காய் ஆசைக்காய்.................................. இப்படியே நீள்கிறது. தமிழும் பொருளும் ஓசையும் இசையும் கண்ணதாசன் பாடலில் சதிராடுகிறது! இசையின்றி அமையாதுலகு என்பதை அவர் மெய்ப்பிக்கிறார். மாவிலி மைந்தன் கவிதைத் தொகுப்பைப் படித்த போது எனது மனம் கவிதை பற்றி ஒரு இரை மீட்பை எனக்குள் செய்து கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கவிதை எழுதுபவன் கவியன்று. கவிதையே வாழ்க்கையாக உடையோன் வாழ்க்கையே கவிதையாகச் செய்தோன் அவனே கவி" என்பது பாரதியார் வகுத்த இலக்கணம். கவிஞன் பிறக்கிறான். பிறக்கும் போதே கவித்துவத்தோடு பிறக்கிறான். கவிஞன் என்ற பட்டத்தை எந்தப் பல்கலைக் கழகத்திலும் படித்துப் பெறமுடியாது! கல்வியில் பெரிய கம்பன் முன்னால் தமிழ் அன்னை கைகட்டி சேவகம் செய்யக் காத்திருப்பாள் எனச் சொல்லக் கேட்டிருக்கிறேன். கவிஞனுக்கு இலக்கண இலக்கியப் பயிற்சி வேண்டும். சொல்லாட்சி வேண்டும். ஆழ்ந்த புலமை வேண்டும். தேடுதல் வேண்டும். கம்பராமாயணம், சிலப்பதிகாரம், நாலாயிரபிரபந்தம், திருக்குறள் போன்ற நூல்களைக் கல்லாதார் கவிதை எழுதக் கூடாது என்று சொல்வார்கள்.

ஒரு கவிஞனுக்கு ஆழமான நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று, பகுத்தறிவு, சமூகப் பார்வை இருக்க வேண்டும். கவித்துவத்துக்கு உள்ள பல குணாம்சங்கள் மாவிலி மைந்தனிடம் நிறையவே இருக்கிறது. "இதயத்தின் சுமைதனை இறக்கியே வைக்க இறைவனே நான்கண்ட சுமைதாங்கி!. கூனிக் குறுகிக்கிடந்த ஒரு தேசிய இனத்தின் முதுகெலும்பை நிமிர்த்தி நேராக்கிய நெம்பு கோல்! புரட்சிப் புயல் மீண்டும் ஒரு நாள் வீசி அடிக்கும், இருள் மேகங்கள் கலைய, அன்று இளங்கதிரொளியில் ஈழம் மலரும்!" இவை கவிஞர் மாவிலி மைந்தனின் சத்திய வார்த்தைகள். அவை ஒரு நாள் பலிக்கும் என நம்புகிறேன். தமிழ் அன்னை அவரது எழுதுகோலுக்கு வலுச்சேர்க்க வேண்டும் என வாழ்த்துகிறேன்!

**நக்கீரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

மாவிலி மைந்தன் என்ற புனை பெயரில் தமிழ் மக்களுக்கு நன்கு அறிமுகமான திரு.சி.சண்முகராஜா அவர்களின் முதலாவது கவிதை நூலான 'வைகறை வானம்' கவிதைத் தொகுதிக்கு வாழ்த்துக் கூறுவது மனதுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. ஆரம்பத்தில் கவிதைகள் வாயிலாகவும், பின்னர் மருத்துவ மற்றும் உடல் நலம் பேணல் கட்டுரைகள் வாயிலாகவும் 'தமிழர் தகவல்' வாசகர்களிடையே நன்கு அறிமுகமானவர் இவர்.

கவிதை ஒரு தொடர்புச் சாதனம். அதன் மூலமாகக் கவிஞன் பிறருடன் அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறான். உணர்வுகளையும் பெற வாய்ப்பு உண்டாகிறது. உவமை, உருவகம் ஆகியன இதற்கு ஏதுக்களாக அமைகின்றன. தனது அனுபவத்தை இயன்றவரை நிறைவாகப் பிறருக்கு உணர்த்திவிடும் நிலையில் கவிஞனுக்கு திருப்தி உண்டாகிறது. இந்தக் கவிதை நூலின் ஊடாக மாவிலி மைந்தனுக்கு அந்தத் திருப்தி நிச்சயம் கிடைத்திருக்கும். தொகுதியின் முதலிரு பாகங்களும் அன்றாட வாழ்வியல் நிலைமையைச் சித்தரிக்கின்றன. கலைநயமும் நெகிழ்ச்சியும் மனிதாபிமான நோக்கும் இங்கு இழையோடுகின்றன.

மூன்றாம் பகுதியான 'விடுதலைக் காற்றில் விரிந்த மொட்டுக்கள்' ஈழத் தமிழரின் சமகால நிகழ்வுகளையும், அவர்களின் நீண்ட விடுதலைப் பயணத்தையும் நேசத்துடன் நோக்குபவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியத் தலைவரை வியந்து நோக்கி விழிக்கும் வரிகளும், அவரது பேராற்றலையும், போராற்றலையும், தலைமைப் பண்பையும், தளராத வீரத்தையும் எடுத்தியம்பும் பாங்கும் கவிஞரின் உள்ளத்து உண்மையை கொப்பளிக்க வைத்துள்ளது. "காலக்கண்ணாடியாக இருக்கும் ஒரு இலக்கியவாதி தனது

இலக்கியப் படைப்பில் தான் சார்ந்த இனத்தின் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்காது போனால் அவனது படைப்பு முழுமையடையாது என்பது என் கருத்து" என்ற மாவிலி மைந்தனின் முன்மொழிவை நான் வழிமொழிகிறேன்.

முள்ளிவாய்க்காலுக்குப் பின்னர் தங்களின் முன்னைய முகங்களுக்கு முக்காடு போடுபவர்களுக்கு மூன்றாம் பகுதி சமர்ப்பணமாகட்டும்.

"நாம் எல்லோரும் எதிர்பார்க்கும் ஈழம் என்றோ ஒரு நாள் வைகறை கடந்து விடியலில் பிரகாசிக்கும்' என்ற கவிஞர் மாவிலி மைந்தனின் நம்பிக்கை ஈடேறும் போது, அவரின் 'விடியலில் விரிந்த பூக்கள்' பல தொகுதிகளாக வெளிவரவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**திரு எஸ். திருச்செல்வம்**
**முதன்மை ஆசிரியர்**
**தமிழர் தகவல், கனடா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துப்பா

வைகறை வானம் வண்ணமாய்த் திகழும்
வான மெங்கும் வர்ணங்கள் ஆடும்
மேகக் கூட்டங்கள் மௌனமாய் ஓட
மேலே கிளம்பிப் பறவைகள் பாடும்
தாகம் தீர்த்த விலங்கினம் யாவும்
தாளம் போட்டே வயலுக் கேகும்
வேகமாய் வயலில் வேலைசெய் மாந்தர்
வைகறை வேளை வயலுக் கோடுவர்

காலை வேளையின் ஆனந்தக் களிப்பை
அள்ளிப் பருகுவர் அவனியில் மக்கள்
மேலை நாடாயினும் கீழை நாடாயினும்
மேலான இன்பம் இவ்வேளை தருமே
மாலை முழுதும் முடங்கிக் கிடந்தவன்
மேலே கிளம்புவன் மேற்கை நோக்கியே
கலையின் காவலர் கவிஞர் யாவரும்
காலை வேளயில் கவிதைகள் புனைவரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவகை யாவிலும் பாட வல்லவர்
பல்பொருட் பாடலை நூலாய் யாத்தவர்
'மாவிலி மைந்தன்' மண்ணின் கவிஞர்
மாண்புறத் தந்தார் 'வைகறை வானம்'
சாவிலாப் பாடல்கள் சந்தங்கள் சேரவே
மோனை எதுகைகள் முட்டி மோதிட
காவியப் படையல் கனதியாய்த் தந்த
கண்ணியக் கவிஞர் மாவிலி வாழ்க.

**சி.சிவநேசன் (துறையூரான் )**
**தலைவர், கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகவுரை

## கனம்கொண்டு கருத்தூன்றி மனம் தொட்டு வாழ்வது கவிதை, அது மலரட்டும் சண்ணின் கவிக்கமலத்தில் . .

கவிதைபற்றி பலர் பல்வேறு விதமான கருத்துக்களைக் கொண்டுள்ளனர். கவிதைப் பொருளை மிக இறுக்கமாகவும், அழகு நடையிலும் தருகின்றது. வாக்கியத்தில் சொல்லமுடியாதவற்றை கவிதையில் அழகாக வடித்துவைத்துள்ளனர். சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் பண்பு செய்யுளில் பலகாலமாகப் பேணப்பட்டு வந்துள்ளமையை நாம் உணர்ந்து கொள்ளத்தக்க தன்மையை செய்யுள் இயற்றியவர்கள் தந்துள்ளனர். திருக்குறளுக்கு பல்வேறு கோணங்களிலிருந்தும் பொருள் கொடுக்கப்பட்டுள்ளமை அதன் பொருட்ச் செறிவையும் நெகிழ்ச்சித் தன்மையையும் எடுத்துக்காட்டுகின்றது. பலபொருட் கிளவி மொழியின் சிறப்பிற்குக் காரணம். செய்யுள் அல்லது கவிதையில் புலவன் கையாளும் உள்ளடக்கம் அல்லது கருப்பொருளை மிக இறுக்கமாக தருவதனால் அது வடிவத்தில் சிறியதாக இருந்தாலும் உள்ளத்தால் பெருத்து விடுகின்றது.

கவிதை என்பது குறிப்பாக இனிமையானது, அழகானது, ரசனைக்கு ஏற்றது என்ற கருத்து பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. 'மிக்கயிலா' என்னும் ஆங்கிலக் கவிஞர் கவிதை பற்றிக் குறிப்பிடும்போது கவிதை ஒரு கலைவடிவம். அது ஓசையை அடிப்படையாகக் கொண்டது, ஏனெனில் அது உள்ளத்தின் வெளிப்பாடு, அத்தோடு கவிதை, ஓசையோடு தெளிவாக வெளிப்படுத்தப்படுவது. இக்காரணத்தினால் பல கவிதைகள் ஓசைநயத்தைத் தருபவை. ஆனால் ஓசைமட்டுந்தான் ஒலியின் ஒரே ஒரு சாதனமாக ஒரு கவிஞர் பயன்படுத்துவதாக அமையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு சாதனங்கள் ஒன்று அதன் அழுத்தம், மற்றது ஓசை வேறுபாடு. கலைஞர்கள் மற்றும் வாசகர்கள் நல்ல கவிதையை உரத்து வாசிக்கவோ அல்லது இதயத்தால் கேட்கவோ முடிவதாக இருப்பது அதன் உணர்வைப் பெற்றுக்கொள்ள வைக்கும். ஒருமித்த மனவெழுச்சியை அது ஏற்படுத்துகின்றது. கவிதையைக் கற்பவர்கள் எதுகை, மோனை பற்றிக் கற்றுக்கொள்கின்றோம். ஆனால் "மொத்தத்தில் ஒருங்கிணைந்து நோக்கும் எந்தக் கவிதையும் ஒரு கலைவடிவமே" எனக்குறிப்பிடுவது கருத்திற் கொள்ளத்தக்கது.

நண்பர் சண்முகராஜா தனது உள்ளத்தெழுந்த உணர்வுகளைக் கவிதையாக்கித் தந்துள்ளார். உள்ளத்து உணர்வுகளின் வெளிப்பாடே கவிதை என்பதற்கமைய அவரது உள்ளத்தை இங்கே கவிதைகளால் நூலுருவாக்கித் தந்துள்ளார். பாரதி இறைவனிடம் தனக்கு என்ன வேண்டும் என்பதனை எடுத்துரைக்கின்றார். கணபதியாம் முதற்கடவுளிடம் அவர்

"எனக்கு வேண்டும் வரங்களை
இசைப்பேன் கேளாய் கணபதி
மனத்திற் சலனமில்லாமல்,
மதியல் இருளே தோன்றாமல்
நினைக்கும் பொழுது நின்மௌன
நிலைவந் திடநீ செயவேண்டும்
கனக்குஞ் செல்வம் நூறுவயது,
இவையும் தரநீ கடவாயே.

என்பதுபோல் கவிஞர் இங்கே தனது வேதனைச் சுமையைச் சுமக்கவல்லவர் இறைவன்தான் என உணர்ந்து அவர்மீது தனது மனச்சுமையை சுமத்தித் தனது உளத்திற்கு விடுதலை பெற்றுக்கொள்ள முனைகின்றார். சப்த தீவுகள் எனப்படும் யாழ் தீபகற்பத்திற்கு அணித்தாய் அணிகலனாய் விளங்கும் தீவுகளுள் நெடியது நெடுந்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கேயர் காலத்தில் இங்கு காணப்பட்ட பசுமை நிறைந்த புல்வெளிகளால் அங்கு குதிரைகளை வளர்ப்புக்காக கொண்டுவந்து விட்டனர். அவை பல்கிப்பெருகி அது பசுந்தீவு என்னும் பெயரோடு குதிரைத்தீவு என்ற பெயரையும் அடைமொழியாகக் கொண்டுள்ளது.

தந்தை சின்னத்தம்பி, அன்னை நாகமுத்து இவரை ஈன்று புறந்தந்த பெற்றோர். கடைக்குட்டியாக வாய்த்தவர் அம்மாவின் செல்லப்பிள்ளையாகவே வளர்க்கப்பட்டார். அதற்குத் தந்தையின் இழப்பும் ஒரு காரணமாகும். நெடுந்தீவு மகாவித்தியாலயம், யாழ் மத்திய கல்லூரி ஆகியன இவருக்குப் பாடசாலைக்கல்வியையும் யாழ் தாதிகள் பயிற்சிக் கல்லூரி, கொழும்பு தாதிகள் பட்டமேற் படிப்புக் கல்லூரி தொழிற்கல்வியையும் கற்றுத்தந்தன.

தாதிகள் போதனாசிரியராக யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும், பின்னர் மத்திய கிழக்கில் மஸ்கட் (ஓமான்) ஆகிய இடங்களிலும் தனது வாண்மைத் தொழிலை மேற்கொண்டவர். கனடாவிற்குப் (1999) புலம்பெயர்ந்த இவர் ரொறன்ரோ கிழக்கு பொது மருத்துவமனையில் அவசர நோயாளர் பிரிவில் பணியாற்றும் அதே வேளை நேரம் கிடைக்கும் போதெல்லாம் தனது உள்ளத்தில் ஊற்றெடுக்கும் கவிதைகளை எழுதிவருவது குறிப்பிடத்தக்கது. 2006இல் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தினால் ஆரம்பிக்கப்பட்ட கவிதைக் கருத்தரங்குகளில் அவர் பங்குகொண்டு தனது கவிதையாற்றலை வெளிப்படுத்தி வந்துள்ளார். அதனைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்ட மரபுக்கவிதை வகுப்புக்களில் மிகுந்த அக்கறையோடு பங்குகொண்டு தனது கவிதை புனையும் ஆற்றலை வளர்த்துக்கொண்டு ஒரு சிறந்த கவிஞராக தன்னை ஆக்கிக்கொண்டதன் வெளிப்பாடாக “வைகறை வானம்” வெளிவருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவிலி மைந்தன் என்னும் பெயரில் மறைந்திருக்கும் சண்முகராஜா ஒரு தலை சிறந்த கவிஞராக வளர்வதற்கு கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் வழி வகுத்தது என்பதனை அவர் நன்றியோடு நினைவு கூர்வது பாராட்டப்படவேண்டியது.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகர்க்கு"

எனும் வள்ளுவரின் பொய்யாமொழியை நினைவிருத்தி, அதன் வண்ணம் செயற்படுவது அவரது பெருந்தன்மையைப் பறை சாற்றுகின்றது.

மாவிலித்துறை என அழைக்கப்படும் நெடுந்தீவின் வரலாற்றுச் சிறப்பு மிக்க இறங்கு துறைக்கு மிக அண்மையிலுள்ள மாவிலிப்பிட்டி என்ற இவரின் பிறந்த மண்ணை முன்னிலைப்படுத்தி மாவிலி மைந்தன் என்ற புனைபெயரில் இவர் பல கவிதைகள் , கட்டுரைகள் எழுதி வருகிறார். கனடாவில் இவரின் பல கவிதைகள் முழக்கம், உலகத் தமிழர், உதயன், தமிழர் செந்தாமரை, முரசொலி போன்ற வார இதழ்களிலும் பல மருத்துவக் கட்டுரைகள் தமிழர் தகவல் மாத இதழிலும் வெளிவந்துள்ளன. தமிழர் செந்தாமரை, உதயன் ஆகிய வார இதழ்கள் நடத்திய கவிதைப் போட்டிகளில் இவரின் கவிதைகள் பரிசுகள் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. கனடிய மண்ணில் கம்பன் விழா, புத்தாண்டு விழா போன்ற விழாக் கவியரங்கங்களை இவரின் கவிதைகள் அலங்கரித்திருக்கின்றன. அவரது படைப்புக்கள் கனடாவில் வெளிவரும் முக்கிய செய்தியிதழ்கள், மாதாந்த இதழ்களில் வெளிவந்துள்ளன.

கவிதைகள் எல்லா மொழிகளிலும் கையாளப்படுகின்றன எனினும் இலக்கணச் செறிவுள்ள கவிதைகளுள் தமிழில் உள்ள வெண்பாக்கள் உச்சநிலையில் உள்ளவை. அந்த வெண்பா யாக்கும் தன்மையைத் தன்னார்வத்தோடு வளர்த்து மிகச் சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்பாக்களை 'வைகறை வானம்' சுமந்து வருகின்றமை அவரின் கவிதை புனையும் ஆற்றலுக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

ஆங்கிலத்திலும் ஏனைய ஐரோப்பிய மொழிகளிலும் கவிதைகள், பாடல்கள் என்பன பயன்படுத்தப்படுகின்றன. கவிதை வரிகள் எதுகை, மோனை உடையன. ஓசை ஒழுங்கமைவு கவிதை, பாடல் வடிவங்களில் பொதுவானவையாகும். நவீன கவிதைகள் ஓசையமைதியைப் புறந்தள்ளுகின்றன. தமிழ் மொழியைப் போன்று கிரேக்க, இலத்தீன் செம்மொழிகள் கவிதையை ஓசை நயமுடையவையாகப் பயன்படுத்தவில்லை. மத்திய காலத்திலிருந்தே ஓசையமைதி பின்பற்றப்பட்டுள்ளன. செம்மொழியான தமிழ் இலக்கியத்தில் கையாளப்பட்ட வெண்பாக்கள் மிக உயர்ந்த ஓசையமைதியைப் பேணி நிற்கின்றன. அந்த மரபு வழியிலே கவிஞர் சண்முகராஜா (மாவிலி மைந்தன்) தனது கவிதைகளை ஆக்க முற்பட்டிருப்பது அவரது கவிதா ஞானத்தின் அறிகுறி எனத் துணிந்து கூறலாம்.

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தினால் ஆரம்பிக்கப்பட்ட கவிதை வகுப்புக்களில் கலந்துகொண்டு கவிஞர்களாகியவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கனடா தமிழ்க் கவிஞர் கழகத்தின் தலைவராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது அவர்மீது கொண்டுள்ள மதிப்பு, அவரின் கவிதை ஆற்றல் என்பனவற்றைப் புலப்படுத்துகின்றன. அவரது கவிபுனையும் ஆற்றலோடு அவரிடம் உள்ள சமூக உணர்வு தொடர வாழ்த்துகின்றேன்.

**த.சிவபாலு**
**முன்னைநாள் கொத்தணி அதிபரும்**
**கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவரும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

**வைகறை வானத்து வாசலில் உங்களுடன் ... ...**

நான் எழுதிய கவிதைகளைத் தொகுத்து ஒரு நூலாக்கி வெளியிட வேண்டுமென்று கவிஞர்களான சில நண்பர்களும் மற்றும் எனது மனைவியும், பிள்ளைகளும் அடிக்கடி என்னைத் தூண்டியதன் விளைவே இந்த 'வைகறை வானம்.'

கனடா மண்ணில் நான் கால் பதித்த 1999ம் ஆண்டிலிருந்து உலகத் தமிழர் வார இதழில் 'கவி அரும்பு' பகுதியில் எழுதிய பல சிறு கவிதைகளையும் வேறு இதழ்களில் வெளிவந்த சில கவிதைகளையும் தொகுத்து "எண்ணங்கள் எழுத்துக்களாய்" எனத் தலைப்பிட்டு 10 பிரதிகள் கொண்ட ஒரு அழகிய நூலைத் தயாரித்து 2005ம் ஆண்டு என் பிறந்த நாளுக்கு எனது மனைவியும் பிள்ளைகளும் பரிசளித்து என்னை வியப்பில் ஆழ்த்தியிருந்தார்கள். அதன் மூலம் அவர்கள் என்னை மகிழ்வித்ததற்கும் மேலாக என் எழுத்துக்களைக் கௌரவித்தார்கள் என்றே நான் கருதுகின்றேன்.

அவை சில பிரதிகளேயானதால் சிறு வட்டத்துக்குள் அடங்கிப் போயின. ஆதலின் 'வைகறை வானம்' மக்கள் பலரைச் சென்றடையவிருக்கும் எனது முழுமையான முதல் கவிதைத் தொகுப்பெனலாம். இந்த நூல் இன்று வெளிவருவதில் என்னை விட பெருமகிழ்ச்சி அடைபவர்கள் என் மனைவி மக்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் எழுத்தையே தொழிலாக வரித்த ஒரு முழு நேரக் கவிஞனல்ல. எப்போதாவது உணர்ச்சித் தீக்குச்சி என் உள்ளத்தை உரசும்போது என் எழுத்துக்களில் தீ பற்றி கவிதைச் சுடர்கள் ஏற்றப்படுகின்றன.

கனடா நாட்டில் நான் கால் பதிக்கும் முன்னால் என் கவிதைச் சுடர்கள் அத்தனையும் நெய்யின்றிக் காலக்காற்றில் அணைந்து போய்விட்டன. கனடாவில் நான் ஏற்றிய சுடர்களுக்கு நெய் வார்த்து ஒளி வீசச் செய்தவை, முழக்கம், உலகத் தமிழர், உதயன், தமிழர் செந்தாமரை, முரசொலி போன்ற வார இதழ்களும் எனது பல மருத்துவக் கட்டுரைகளை மக்களுக்கு எடுத்துச் சென்ற தமிழர் தகவல் மாத இதழும் தான். இத்தருணத்தில் எனது நெஞ்சம் கனிந்த நன்றியை அந்த ஊடக நண்பர்களுக்குப் பெருமகிழ்வுடன் பதிவு செய்கிறேன். எனது எண்ணங்களை எழுத்துக்களாக்கி அவற்றை நூல் வடிவில் உருவாக்குவதற்கான தளத்தை ஏற்படுத்தித் தந்த நான் வாழும் கனடிய மண்ணையும் நான் மனதாரப் போற்றுகிறேன்.

ஆரம்பத்தில் புதுக்கவிதைகளையும், யாப்பிலக்கண அறிவில்லாது சந்தத்துக்கேற்ப மரபுக் கவிதைகளையும் வடித்துக்கொண்டிருந்தது என் எழுது கோல். பண்டிதர் மா.செ.அலெக்ஸ்சாந்தர், கவிநாயகர் வி.கந்தவனம் ஆகியோரிடம் மரபுக் கவிதை யாப்பிலக்கணம் பயிலக் கிடைத்த வாய்ப்பைத் தொடர்ந்து என் மரபுக் கவிதைகள், அணி அலங்காரங்கள் புனைந்த புதுமணப் பெண்ணாக உருமாறத் தொடங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைச் செதுக்கிச் செப்பனிட்ட ஆசிரியர்கள் இருவருக்கும், அவர்களிடம் பயிலும் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த கனடாத் தமிழ் எழுத்தாளர் இணைய முன்னாள் தலைவர் திரு.சிவபாலு அவர்களுக்கும் இத்தருணத்தில் எனது மனமார்ந்த நன்றியைப் பெருமகிழ்வுடன் அறியத்தருகிறேன்.

வைகறை வானத்தை மேலும் மெருகூட்டி வனப்புற அச்சமைத்துத் தந்த Multi-smart Solution பதிப்பகத்தாருக்கும், கவிநயத்தோடு கூடிய அழகான அணிந்துரை வழங்கிய கவிநாயகர் கந்தவனம் அவர்களுக்கும், ஆழம் மிக்க மதிப்புரை வழங்கிய பண்டிதர் மா. செ. அலெக்ஸ்சாந்தர் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய கனடாத் தமிழ்ப் படைப்பாளிகள் கழகத்தலைவர் திரு. நக்கீரன், கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத் தலைவர் திரு. சி.சிவநேசன் (துறையூரான்), தமிழர் தகவல் முதன்மை ஆசிரியர் திரு எஸ்.திருச்செல்வம் அவர்களுக்கும், பதிப்புரை வழங்கிய கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத் துணைத் தலைவர் திருமதி.பவானி தர்மகுலசிங்கம், அறிமுகவுரை வழங்கிய எழுத்தாளர் திரு.த.சிவபாலு ஆகிய அறிஞர் பெருமக்களுக்கும், 'வைகறை வானத்தை' வரவழைக்கும் பணியில் துணையிருந்த கனடாத் தமிழ்க் கவிஞர் கழக நண்பர்களுக்கும், மற்றும் அனைத்துத் தமிழ் நெஞ்சங்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது குடும்பத்துக்காக நான் செலவளிக்க வேண்டிய நேரத்தில் பெரும் பகுதியைத் தமிழுக்கும் கவிதைக்கும் என் சமூகத்துக்கும் பங்கு வைக்க ஆதரவாயிருந்து ஊக்கமளித்ததுடன் இந்நூல் வெளியீட்டுக்கான அனைத்து உதவிகளையும் நல்கிய என் அன்பு மனையாளுக்கும், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் எல்லோருக்கும் எனது நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக நான் கவிதை எழுதத் தொடங்கிய காலங்களில் கணினியில் தமிழ்த் தட்டச்சு முறையைக் கையாள நான் பயிலுவதற்கு உதவி செய்ததுடன் இந்நூலுக்கு முகப்பு அட்டையை மிக அழகாக வடிவமைத்து உதவிய எனது மகள் சாலினிக்கும் எனது நன்றி.

இந்தக் கவிதை நூல் மூன்று பகுதிகளாக **மரபுக் கவிதைகள், கவியரங்கக் கவிதைகள், விடுதலைக் காற்றில் விரிந்த மொட்டுக்கள்** எனும் தலைப்புக்களில் தொகுக்கப்பட்டுள்ளது. இதில் மூன்றாவது பகுதியான விடுதலைக்காற்றில் விரிந்த மொட்டுக்கள் பற்றிச் சில வரிகள் குறிப்பிட்டாக வேண்டும். ஈழத்திலே என் இனம் பட்ட வலியும் அதனால் என் மனம் பட்ட வலியும் எத்தனையோ இரவுகளைத் தூக்கமின்றி நகர்த்த என் இதயம் வடித்த குருதி தோய்த்து எழுதிய கவிதைகளிற் சிலவே இங்கே தொகுக்கப்பட்டுள்ளன.

காலக்கண்ணாடியாய் இருக்கும் ஒரு இலக்கியவாதி தனது இலக்கியப் படைப்பில் தான் சார்ந்த இனத்தின் சம கால வரலாற்று நிகழ்வுகளைப் பிரதிபலிக்காது போனால் அவனது படைப்பு முழுமையடையாது என்பது எனது கருத்து. அந்தக் கருத்தை விடுதலைக் காற்றில் விரிந்த மொட்டுக்கள் சிறிய அளவிலாவது ஈடு செய்யும் என்று நான் நம்புகிறேன். நாம் எல்லோரும் எதிர்பார்க்கும் ஈழமும் என்றோ ஒருநாள் வைகறை கடந்து விடியலில் பிரகாசிக்கும் என்பதும் என் அசையாத நம்பிக்கை. இந்த நூலில் ‘வைகறை வானம்’ என்ற கவிதை இடம் பெற்றிருப்பது மட்டும் இந்தக் கவிதைத் தொகுதிக்கு நான் ‘வைகறை வானம்’ எனத் தலைப்பிட்டதற்கான காரணம் அல்ல. அனேகமாக ஒவ்வொருநாளும் வைகறையின் வனப்பை ஐம்புலன்களாலும் அனுபவித்து ரசிக்கிறவன் நான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகறையின் எளிமை மனதுக்கு அமைதியைத் தருகிறது. வைகறையில் விரியும் ஒளிக் கீற்றுகள் வாழ்க்கை தொடங்கும் அன்றைய நாள் மீது நம்பிக்கை ஒளியேற்றுகிறது. வருடிச்செல்லும் இளங்காற்று உள்ளத்துக்கு உற்சாகத்தை ஊட்டுகிறது. பனிதோய்ந்த பசுமை சிந்தனையைச் செம்மையாக்குகிறது. பறவைகள் எழுப்பும் மெல்லிய ஒலி இசையாக வந்து இதயத்தை இளகச் செய்கிறது. வைகறை வானம் போல் என் கவிதைகளும் சமுதாயத்தில் சிறி-தளவாவது இத்தகையதாக்கங்களை ஏற்படுத்த வேண்டும் என்பது என் அவா. ஈழத்திலும், புலம் பெயர்ந்த தேசங்களிலும் பரவிக் கிடக்கும், தமிழிலும் கவிதையிலும் பற்றுக்கொண்ட இனிய தமிழ் வாசக உள்ளங்களுக்கு வைகறை வானத்தை வரவழைத்துக் கொடுத்திருக்கிறேன். இந்த வைகறை வானம் எல்லோருக்கும் நல்லதொரு விடியலைக் கொண்டு வரட்டும். வாசகர்களாகிய நீங்கள் தருகின்ற ஆதரவு வைகறை வானத்தைத் தொடர்ந்து நான் தரவிருக்கும் விடியலுக்கான வழி சமைப்பதாக இருக்கும் என உறுதியாக நம்புகின்றேன்.

அன்புடன்,

**சி. சண்முகராஜா (மாவிலி மைந்தன்)**
மின் அஞ்சல் : shan275@yahoo.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி I

# மரபுக் கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமைதாங்கி (கீர்த்தனை)

**பல்லவி**

இதயத்தின் சுமைதனை இறக்கியே வைக்க
இறைவனே நான்கண்ட சுமைதாங்கி!

**அனுபல்லவி**


இதந்தரும் இனியதோர் சுமைதாங்கி - அவன்
எதையும் தாங்கும் சுமைதாங்கி

**சரணம்**

துயரம் நெஞ்சை நனைக்கையிலே - நான்
துவண்டு அவனை நினைக்கையிலே
உள்ளத்தின் பாரத்தை இறக்கிவைப்பான் - மன
உறுதியை அங்கே ஏற்றிவைப்பான்!
(இதயத்தின்)

இன்றைய பொழுது நலமாக - நாளை
இனிவரும் பொழுதும் இனிதாக
நன்றாய் அவனின் அருள்பொழியும் - என்ற
நம்பிக்கை தனிலென் நாள்கழியும்!
(இதயத்தின்)

நம்பினோர் என்றுமே கெட்டதில்லை - அவன்
நலிந்த வரைக்கை விட்டதில்லை
உழைப்பின் பயனாய் அவனிருப்பான் - தூய
உள்ளத்தில் தானவன் குடியிருப்பான்!
(இதயத்தின்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவனைத் தேடி (கீர்த்தனை)

**பல்லவி**

இறைவா உனையே அனுதினம் தேடி
இருட்டினில் அலைபவர் உலகிற்பல் கோடி

**அனுபல்லவி**

இறைவனின் கோயில்தம் இதயமென் றுணரார் - நீ
இறைந்தெங்கும் நிறைந்தவன் என்பதை அறியார்!

**சரணம்**

அணுவினுள் அணுவாய் அடங்கிய துளியே
அண்டமாய் விரிந்தபேர் ஆனந்த வெளியே
காற்றே விசும்பே கார்முகில் ஊற்றே
கனலே நிலமே கதிரொளிக் கீற்றே
(இறைவா)

அறிவுக்கும் எட்டா(த) அறிவியற் சுரங்கம்
அகண்ட பிரபஞ்சம் அசைந்திடும் அரங்கம்
அருவாய் உருவாய் அருவுரு வானாய்
அதிசய ஆற்றலின் கருவறை யானாய்!
(இறைவா)

இயற்கையின் இருப்பும் இயக்கமும் நீயே
இல்லாது இருக்கும் புதுமையும் நீயே
வியத்தகு விந்தைக் காட்சியின் பொதியே
விளங்கிட முடியாத் தத்துவ நிதியே!
(இறைவா)

அரிஅரன் அல்லா இயேசுவென் றோதும்
ஆயிரம் மதமிங்கு இருந்திட்ட போதும்
நெஞ்சினில் நிறைவது ஒருபரம் பொருளே
நிலமெங்கும் மானிடம் ஓங்கிட அருளே!
(இறைவா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயே தெய்வம்
## (நேரிசை வெண்பா)

இன்னுயிரை நெய்யாக்கி ஈரைந்து திங்களாய்
என்னுயிராம் தீபத்தை ஏற்றிவைத்தே - இந்நிலத்துக்
காற்றெந்தன் மூச்சிற் கலக்குமட்டும் தன்மூச்சை
ஏற்றி உயிர்கொடுத்த தாய்.

அன்பாய் அணைத்தெடுத்தே ஆரமுதம் ஆனதொரு
தன்பாலும் தேனாம் தமிழ்ப்பாலும் - முன்பெனக்கே
ஊட்டி உணர்வளித்து உள்ளம் ஒளிபரவத்
தீட்டித் துலங்கவைத்த தாய்.


அருளொழுகும் கண்கள் அமைதிதரு முள்ளம்
இருகரமும் நீக்கிவிடும் இன்னல் - பெருநதியாய்ப்
பொங்கிவரும் பேரன்பு போற்றும் பெருங்குணங்கள்
தங்கிவந்த தேவதையென் தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கம் தொலைத்தென்னைத் தூங்கவைத்துத் துன்பமெலாம்
போக்கப் பொழுதெல்லாம் போராடி - நீக்கமற
நெஞ்சில் எனைத்தாங்கி நித்தம் சுமந்தெனக்குத்
தஞ்சம் கொடுத்தவளே தாய்.

அன்னையோர் ஆலயம் ஆங்கவளே தெய்வமுமாம்
தன்னையே சோதியெனத் தந்தபெரும் - பொன்மனத்தாள்
பெற்றவளைப் பற்றிவெண் பாமாலை சூட்டியவள்
பொற்பாதம் போற்றுவதென் பேறு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அவள்
## (பதின்நான்குசீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்)

அன்னைக்குப் பின்னே அணைத்தேஎன் வாழ்விலே
அர்த்தமாய் வந்த தவளே!
அரனிலொரு பாதியாய் அமைந்தஉமை போலஎனை
அசைவிக்கும் விசையும் அவளே!
மன்மதன் அம்புகள் தைத்தவென் நெஞ்சுக்கு
மருந்தான மாயம் அவளே!
மஞ்சத்துக் கூடலில் நெஞ்சத்து ஊடலை
மறைவித்த மர்மம் அவளே!
இன்னலில் என்வாழ்வு இருளான போதெலாம்
ஒளிதந்த தீபம் அவளே!
இதயத்தின் ஒருபாதி இடமாகி என்னையே
இயக்கும் உயிர்நாடி அவளே!
மின்னலும் இடியுமென மோதிவரும் சோகமென்
மேல்வீழ நானும் அவளின்
மடிவீழ நம்பிக்கை மதுதந்து தளராத
மனம்தந்த சக்தி அவளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் முள்ளானால் இறகாகி இதமாக
உள்ளத்தை வருடு பவளே!
உணர்வாலே ஒன்றாகி உயிரோடு உறைகின்ற
உற்றதொரு தோழி யவளே!
திறமுடைய மாந்தராய்ப் பிள்ளைகள் திகழவே
திசைகாட்டி வைத்தது அவளே!
தித்திக்கும் அமுதோடு புத்திக்கு அறிவையும்
தினமூட்டி வளர்த்தது அவளே!
மறவாத பலநாட்கள் மனமெலாம் நறுமலர்
மணம்வீச வைத்தது அவளே!
மனைவியாய் அன்னையாய் மாமியாய்ப் பாட்டியாய்
மனைபூத்த மங்கை அவளே!
இறவாத வரம்வேண்டும் இருபேரும் பிரியாமல்
இறைவாஉன் அருள் வேண்டுமே!
இறந்தாலும் ஏழேழு பிறப்பேனும் அவளோடு
இணைகின்ற வரம் வேண்டுமே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ச்சனை
### (எண்சீர் விருத்தம்)

ஒருகலமாய் உனதுகரு வறையி னுள்ளே
ஒட்டியே உறைந்தஅக் கணமி ருந்தே
பெருவெளியின் வளியெனைத் தீண்டு மட்டும்
பெற்றவுன் மூச்சாலே உயர்த்த பேதை
உருவழிந்து உடல்சாய்ந்துன் கடைசி மூச்சும்
உறக்கத்தில் ஆழத்தியுனைப் பிரிந்த போது
தெருவீழ்ந்த கருவூலச் சிலையா யானேன்
திசைமறந்த திக்கற்ற பறவை யானேன்!

குருதியைக் குற்றால மாக்கி என்னைக்
குளிர்வித்தாய் கிளைவிட்டு விருட்ச மானேன்
உருகியே ஒளியுமிழ் மெழுகுத் தீயாய்
உனையுருக்கி எனக்காக ஒளியாய்த் தீய்ந்தாய்
பருகியதுன் பாலோடு பண்பும் சேர்த்தே
படிப்பில்லாப் பல்கலைக் கழகம் நீயே
கருமேக மழைகூடப் பொய்த்துப் போகும்
கனிந்தவுன் பாசமென்றும் பொய்த்த துண்டோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையிளங் கதிர்வீச்சின் சுகத்தை உந்தன்
  கையணைப்பில் அனுபவித்துக் களித்த துண்டு
மாலையிலே வருடுகின்ற தென்றல் காற்றின்
  மயக்கத்தைத் தாலாட்டில் உணர்ந்த துண்டு
சேலைபற்றி உன்பின்னே சென்ற நாட்கள்
  சுகமான நினைவாக நெஞ்சில் உண்டு
பாலையிலும் பசுமைவரும் பாதம் பட்டால்
  பாசமழை சொரியும்நீ பரிவின் ஊற்றே

படைத்தவன் கடவுளே என்பார் என்னைப்
  படைத்தவள் தாயேநீ கடவுள். கண்ணீர்
துடைப்பதே இறைவனின் கரங்கள் என்பார்
  துளிநீரென் விழிகண்டால் துவண்டே போவாய்!
நடைமெலிந் துடல்நலிந் தோய்ந்தும் எந்தன்
  நலம்வேண்டும் மனம்கொண்ட தாயே இந்தக்
கடையேனை வேறுதெய்வம் காத்த துண்டோ?
  கண்ணீரைப் பூவாக்கி அர்ச்சித் தேனே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவெல்லாம் நீயே!
## (எண்சீர் விருத்தம்)

கடலலைகள் தழுவவரக் காத்திருக்கும் கரைகள்
கரைதொட்ட நாணத்தால் கரையும்வெண் நுரைகள்
மடலவிழும் மலர்க்கொடிகள் மணம்பரப்பும் தரைகள்
மடிநிறையப் பால்சுமந்து மேயும்ஆ நிரைகள்
வடபருவ மழையினிலே வழியும்நீர் நிலைகள்
வான்வெளியிற் பறவையினம் வடிவமைக்கும் வரிகள்
விடலையென வெல்லையிலே விளையாடும் பரிகள்
வியப்பூட்டும் எழில்பூத்த அன்னைநெடுந் தீவே!

தெங்குபனை தென்றலிலே தோகையசைத் தாடும்
தோட்டத்து மரக்கிளையில் தேன்குயில்கள் பாடும்
தங்கத்தைக் குழைத்துமுகம் தடவியகீழ் வானம்
தனைவிட்டுக் கதிர்விலகத் தனிமையிலே வாடும்
பொங்குகடல் மீதினிலே மீனவரின் ஓடம்
பொன்மாலைப் போதினிலே பேரணியாய்ப் போகும்
அங்கமெலாம் அணிகலனாய் ஒளிரும்நற் கோலம்
அழகுறவே அமைந்ததெங்கள் அன்னைநெடுந் தீவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்நாளில் ஆண்டதமிழ் முடிமன்னர் தளங்கள்
முப்பதடி ஆளொருவன் பதித்தகாற் தடங்கள்
பின்நாளில் அந்நியர்கள் படைத்தகொத் தளங்கள்
பிணிதீர்க்க வல்லபல மூலிகையின் இனங்கள்
தென்னாழி ஆழமதிற் தேங்கியுள்ள வளங்கள்
தேடிவரும் பிறவூரின் மீனவர்தம் கலங்கள்
என்நாளும் விருந்தோம்ப எதிர்பார்க்கும் உளங்கள்
எனவிரியும் சிறப்புனக்கே அன்னைநெடுந் தீவே!

கல்லடுக்கிக் காத்திரமாய்க் கட்டிவைத்த "பகிர்"கள்
காக்கைபோல் பகிர்ந்துவாழ் எனவுரைக்கும் பதங்கள்
சொல்லடுக்கிப் பாவியற்றிச் சுவையூட்டும் கவிகள்
சொந்தபந்தம் போற்றுவதிற் சோர்வடையா மனங்கள்
பொல்லூன்றும் அகவையிலும் புலியாகும் குணங்கள்
பொங்கியெழும் படையாகித் தமிழ்காக்கும் கரங்கள்
பல்லாண்டாய் உயிர்வாழும் பைந்தமிழர் முறைகள்
பண்பாட்டின் விளைநிலமே அன்னைநெடுந் தீவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில்மா விலித்துறையோ களைகட்டிக் கிடக்கும்
கடல்தாண்டிப் போய்வருவோர் கதைபலவும் நடக்கும்
மாலைவரும் மௌனத்தை மாஅலைகள் கலைக்கும்
மாரியம்மன் மரிமாதா மணியோசை கலக்கும்
சாலையொன்று முக்குறிச்சிச் சனங்களையும் இணைக்கும்
சாறாப் பிட்டிநீரோ சர்க்கரைபோல் இனிக்கும்
ஓலைவேய் குடிசையிலும் ஒன்றாகிக் களிக்கும்
உள்ளங்கள் வாழ்வதிங்கே அன்னைநெடுந் தீவே!

மீண்டும்தாய் மண்மடியிற் தவழ்ந்திடவே ஆசை
மெல்லவரும் கடற்காற்று மேனிபட ஆசை
வேண்டுமட்டும் நுங்கிளநீர் விருந்துண்ண ஆசை
வேப்பமர மீதேறி விளையாட ஆசை
தாண்டிவரும் குழுமாட்டைத் தளைபோட ஆசை
தாளஇசை யோடுமாட்டு வண்டியோட்ட ஆசை
நீண்டகட லுள்ளிறங்கி நீச்சலிட ஆசை
நினைவெல்லாம் நீதானே அன்னைநெடுந் தீவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொருள் விளக்கம்**

வெல்லை - நெடுந்தீவின் தென்பகுதியிலுள்ள பரந்த புல்வெளி
மாவிலித்துறை - நெடுந்தீவின் சரித்திர முக்கியத்துவம் பெற்ற பிரதான இறங்கு துறை
பகிர் - முருகைக் கற்களால் அமைக்கப் பட்ட வேலி
முக்குறிச்சி - கிழக்கூர், மேற்கூர், நடுக்குறிச்சி என்ற நெடுந்தீவின் மூன்று பகுதிகள்
சாறாப்பிட்டி - நெடுந்தீவில் நன்நீர் நிலைகள் காணப்படும் இடம்

(கனடா - நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றத்தின் 2வது ஆண்டு விழா மலருக்காக எழுதப்பட்ட கவிதை - 2006)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (உளம்) புகுந்த மண்

### (தரவு கொச்சகக் கலிப்பா)

தவழ்ந்துவரும் மென்னலையால்
தாலாட்டும் இசைபாடிக்
கவிழ்ந்திருக்கும் அடிவானைக்
காவலரண் போலமைத்து
அவிழ்ந்துவரும் பூங்காற்றால்
அரவணைத்து உடல்வருடி
உவந்தேயென் உளம்புகுந்தாய்
உறவானாய் அனலைமண்ணே!

தெங்குபனைத் தோப்பழகும்
தேன்சொரிபூ வனத்தழகும்
தங்கநிற மாங்கனிகள்
தரைதொடுமா மரத்தழகும்
அங்கமதில் பசுஞ்சேலை
அணிந்திருக்கும் எழிலழகும்
பொங்கஇள மங்கையெனப்
பொலிந்திருக்கும் அனலைமண்ணே!

பனைமரத்தின் கிளியோசை
பாடிவரும் குயிலோசை
தினைப்புனத்துப் புள்ளினங்கள்
சிறகடிக்கும் அலையோசை
மனைசிறந்த மங்கையரின்
வளையொலிக்கும் இசையோசை
வினைதீர்க்கும் மணியோசை
விருந்தாக்கும் அனலைமண்ணே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அய்யனாருன் மடியமர்ந்து
அருள்சொரிந்தே வாழ்த்திவரச்
செய்யோனும் கணபதியும்
சேர்ந்தருள, வேண்டுவன
எய்தஅருள் பாலிக்கும்
ஏழுமங்கை நாச்சியரும்
உய்விக்கும் திசைகாட்ட
உனைச்சேர்ந்தார் அனலைமண்ணே!

ஒளிருமணித் தேரேறும்
ஓங்கார நாயகிக்கு
புளியந்தீ விருந்துசிவன்
புற்றரவைத் தூதாக
வளியனுப்பக் கடல்தாண்டும்
வாயிலது பூச்சுமந்தே.
விழியுயர்த்த வைக்கின்ற
விந்தையன்றோ அனலைமண்ணே! *

நிலம்வணங்கும் நெல்வயல்கள்
நிலத்தடிநன் நீர்வளங்கள்
நலம்காக்கும் மூலிகைகள்
நாவினிக்கும் தேன்கனிகள்
கலம்நிறைக்கும் கடல்வளங்கள்
கால்நடையின் பெரும்பயன்கள்
குலம்காக்கக் கொடுப்பவளே
குணக்குன்றே அனலைமண்ணே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றறிந்த பெரியோரைக்
கனிவுகொண்ட நெஞ்சினரை
உற்றவரைப் போற்றியுள்ளம்
உறவாடும் உத்தமரைப்
பொற்புடைய தமிழ்காக்கப்
போராடும் மறவர்களைப்
பெற்றவளே உனைவியந்து
போற்றுகிறேன் அனலைமண்ணே!

அனலைமண் - அனலைதீவு எனப்பொருள் கொள்க.

* நயினை நாகபூசணி அம்மன் தேர்த்திருவிழா நாளில் புளியந்தீவில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் தூதாக நாகபாம்பொன்று அங்கிருந்து பூச்சுமந்து கொண்டு கடல்தாண்டி நயினை நாகபூசணி அம்மன் கோயில் சென்றடைவதாக ஐதீகம்.

புளியந்தீவு - நயினாதீவை நோக்கி அமைந்திருக்கும் அனலைதீவின் ஒரு பகுதி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொங்குக இன்பம்
## (நேரிசை வெண்பா)

நெஞ்சிற் துயரம் நிறைந்த பொழுதினிலே
தஞ்சமென வந்தாளே தைப்பாவை - அஞ்சற்க
வீழ்வதுவோ மீண்டும் எழவென்றே நம்பிவிடு
வாழ்விற் பெறலாம் வளம்.

தைத்திரு நாளே தமிழ்த்திருநாள் வேறான
எத்திரு நாளும் எமதல்ல - வைத்திருக்கும்
மற்றத் திருநாட்கள் மாற்றார் வருகையினால்
உற்றதவை நீக்கி உயர்.

நிலம்நீர் நெருப்புவளி நீள்விசும்பும் மாந்தர்
குலம்வாழ வாரிக் கொடுத்தே - சலனமின்றிச்
சஞ்சரித்து வானில் தவழ்ந்துவரும் சூரியனை
நெஞ்சிருத்திப் போற்றுவதிந் நாள்.

நல்லதோர் நாளிதுவே நன்றியினைக் கூறும்நாள்
இல்லறத்தில் இன்பம் இழையும்நாள் - நல்லறமே
வீடெல்லாம் பொங்கி விடுதலை பெற்றெமது
நாடெல்லாம் பொங்கட்டும் நன்று.

உழுது தொழிலாற்றி உற்றாரைப் போற்றித்
தொழுதுண்ணும் வாழ்வைத் துறந்தே - பழுதற்றுப்
பண்பட் டுயர்ந்த பழந்தமிழர் வாழ்வதனைப்
பின்பற்றி வாழ்தல் பெரிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னற் கரும்பும் கனிமூன்றும் கற்கண்டும்
செந்நெல் லரிசியையும் சேர்த்திட்டு - இன்னல்
ஒழிந்தென்றும் இன்ப ஒளிவெள்ளம் பாய்ந்து
வழிந்தோடப் பொங்கல் வனப்பு.

புத்தாடை பொன்னணிகள் பூட்டி அலங்கரித்து
மத்தாப்பாய்ச் சித்தம் மலர்கையிலே - பித்தரைப்போல்
மண்ணில் அவலமுடன் வாழும் மனிதரையும்
எண்ணி ஒருகால் இரங்கு.

பொங்கல் திருநாளில் பூக்கட்டும் பொற்காலம்
எங்கள் நிலத்தவலம் நீங்கட்டும் - எங்கும்
மனிதம் மலர்ந்துலகில் மானுடமே வென்று
புனிதம் பெறட்டும் புவி.

(முழக்கம் 13. 01. 2006)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தையில் தீட்டிய சித்திரம்
## (கட்டளைக் கலித்துறை)

அன்ன நடையோ அரளி நிறத்து அழகமைந்த
கன்னக் கதுப்பில் களிக்கும் கருவண்டோ கண்ணிரண்டும்
மின்னல் இழைத்தவுன் செவ்வாய் தெளிதேன் மதுக்குடமோ
தென்னங் கிளியோ தேயா முழுமதியோ தேனமுதே!

இன்னெழில் பொங்க இதழ்விரிக் கின்ற இளமலருன்
பொன்னுடல் என்மேல் பொருந்த அணைத்திடும் போதினிலே
என்மனம் வான்வெளி ஏறி உலாவரும் தேரினிலே
கன்னற் கரும்பின் சுவையே களிகூர் கனியமுதே!

தாள்களோ செந்நிறத் தாமரை என்கையிற் தாங்கலின்பம்
தோள்தனில் நீவிழத் தூயபொன் மேனி தொடுதலின்பம்
நாள்வரும் போது நயமாய் அணைத்தே நடத்தலின்பம்
நீள்வது நாளும் கனவோ நனவதோ உன்நினைப்பே!

விழிகள் துயிலும் அழகை ரசித்தே விழித்திருப்பேன்
மொழிகள் பயிலும் விதங்கள் நயந்தே மகிழ்ந்திருப்பேன்
குழிவிழும் கன்னமோ என்னிதழ் சேரக் குளிர்ந்திருப்பேன்
சுழிவிழும் வாழ்வை உனக்கே வரித்தேன் சுடரொளியே!

சுந்தரப் பாடலில் சந்தன வாசத்துச் சாந்தெடுத்து
சிந்தை தனிலே அழகுறத் தீட்டினேன் சித்திரமே!
சிந்தும் மழலை அமுது சுரக்கும் சிறுமலரே
வந்துதாய் மார்மேலே சாய்ந்து உறங்காய் வளர்மதியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய சபதம்
### (அறுசீர் விருத்தம்)

தைத்திரு நாளே என்றும்
 தமிழர்கள் போற்றி வாழ்ந்த
புத்தாண்டு என்ற உண்மை
 புதையுண்டு போக லாமோ?
பொய்த்திரு நாட்கள் தம்மைப்
 புறந்தள்ளிப் பொய்மை போக்கித்
தைமகள் தமிழர்க் கான
 தலைமகள் என்ப தேற்போம்!

ஆழியால் இழந்து போன
 அருங்கலைச் செல்வம் பாதி
சூழ்பகை வைத்த தீயில்
 சுட்டெரிந் தவைகள் மீதி
வீரியம் இழந்து எங்கள்
 விழுமியம் மரபு எல்லாம்
ஆரிய மாயைச் சேற்றில்
 ஆழ்ந்ததாற் தொலைந்தே போனோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தாண்டின் உதயம் தன்னில்
புதியதாய்ச் சபதம் ஏற்போம்
செத்தாரைப் போலே வாழும்
சத்தற்ற வாழ்வைப் போக்கி
முத்தான விழுமி யங்கள்
முழுமையும் மீட்டுக் கொள்வோம்
வித்தாகி வீழ்வோம் வீழில்
விளைவமே விருட்ச மாக!

இழந்ததை மீட்க வேண்டும்
இருப்பதைக் காக்க வேண்டும்
பழந்தமிழ் மரபு மீண்டும்
பல்கிட வைத்தல் வேண்டும்!
குழந்தைகள் தொட்டு மூத்த
குடுகுடு கிழவர் ஈறாய்
விழுமியம் மரபு பற்றி
விழிப்பினை ஊட்ட வேண்டும்!

தடுமாற்றம் இன்றி வாழ்ந்த
தன்மையை உணர வேண்டும்!
புதுமாற்றம் பிறக்க வேண்டும்
புதுமைகள் சிறக்க வேண்டும்!
அடையாளம் அற்று நிற்கும்
அவலங்கள் தீர வேண்டும்!
விடைபெற்ற ஆண்டே நல்ல
விடைதந்து போக வேண்டும்!

(முழக்கம் 17. 01.2003)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புறப்படுங்கள் புதுமைகள் படைக்க!
## (எழுசீர் விருத்தம்)

இளந்தலை முறையே இனியுமேன் உறக்கம்
இருளினிற் கிடந்தது போதும்
களமுனைக் காணக் காத்து நிற்கிறதே
காக்குமோ உனக்கெனக் காலம்?
உளமதில் திடமும் உடலினில் உரமும்
ஓங்கிட எழுந்திடு புயலாய்
பழந்தமிழ்ப் பெருமை பாரெலாம் பரவப்
புறப்படு புதுமைகள் படைப்போம்!

அண்டமே துளைத்து அணுவெலாம் பிளந்து
அறிவியல் அகிலமே ஆள
மண்ணினுள் புழுவாய் மடமையின் மடியில்
மாக்களாய் வாழ்ந்திடல் முறையோ?
கண்ணினை மறைத்துக் காலத்தைக் கெடுக்கும்
கருத்திலா வழக்கினைக் களைந்து
திண்ணமாய்த் தெளிவாய் திறமையை வளர்நம்
தேசமே புகழொடு சிறக்கும்!

விலையையும் கொடுத்து விற்பனை யாக்கும்
விசித்திரப் பண்டமாய்ப் பெண்ணின்
நிலையினைத் தாழ்த்தும் நியதியை ஒழித்து
நீதியை நிலைத்திட வைப்போம்.
கலைந்திடும் கனவாய்க் கன்னியர் வாழ்வைக்
கரைத்திடும் கட்டுக்கள் உடைத்து
உலைநெருப் பிட்டே ஒழித்திடு. உண்மை
உறவினை உளமதில் வளர்ப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதியிலா மக்கள் கரங்களைப் பற்றிக்
கரையினில் சேர்த்தவர் வாழ்வில்
விதியினை வென்று விரக்தியைக் கொன்று
வீழ்ந்தவர் எழுந்திட வைப்போம்!
புதியதாய் ஆடை அணிகலன் புனைதல்
போலவே பழைய பஞ்சாங்கப்
பொதியினைக் களைந்து பகுத்தறிந் துணர்ந்து
புதியதோர் பாதையை அமைப்போம்!

இனித்திடும் பெயர்கள் இருக்குதே தமிழில்
இழிபொருள் தரும்அயற் பெயர்கள்
நனிதென எண்ணிச் சூட்டுதல் நன்றோ
நமக்கெது நல்லடை யாளம்?
இனிவரும் காலம் இவர்களே தமிழர்
எனவொரு முகவரி காட்ட
தனித்துவம் பேணித் தமிழ்மொழி காத்துத்
தரணியில் தலைநிமிர்ந் திடுவோம்.

வாழ்நில மெங்கும் அடிமைக ளாய்நாம்
வாழ்ந்திடும் நிலையிலும் ஏற்றத்
தாழ்வுகள் என்னும் தளைகளைப் பூண்டோம்
தணலென எரியுதே நெஞ்சு!
வீழ்ந்தது நாம்இவ் வேற்றுமை கொண்டே
வேறெதும் காரணம் உண்டோ?
சூழ்ந்தவெம் பகையை சுட்டெரி ஒன்றாய்ச்
சேர்ந்துநில் பேதங்கள் அகற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறியது பணத்தில் கொண்டதே நோக்காய்க்
கோயில்கள் இருப்பதே கொடுமை
வறியவர் வாழ்வில் வசதிகள் அற்றோர்
வகுத்தோனைத் தொழுவதற் கிலையோ?
நெறியிலார் தம்மை நேர்வழி செலுத்தி
நேயத்தை நெஞ்சினுள் வளர்த்து
அறிவொளி பெருக்கி அமைதியைத் தரவே
ஆலயம் அமைவதாய்ச் செய்வோம்!

சிறப்பொடு வாழ்ந்த செந்தமிழ் இனமே
சிரித்திட வாழ்ந்திடல் தகுமோ?
மறத்தமிழ் மரபு மறுபடி மலர
மனத்தினில் உறுதிகொண் டெழுக!
திறக்கும் உன்கூண்டு திசையெலாம் உனக்கே
தொலைவில்லை உன்தொடு வானம்
புறப்படு தமிழா புதுமைகள் படைக்க
புதியதாய் விரியும் உன்பாதை!

(தமிழர் செந்தாமரை வார இதழ் பத்தாவது ஆண்டுவிழா கவிதைப் போட்டியில் முதற் பரிசாகத் தங்கப்பதக்கம் பெற்ற கவிதை 07. 05. 2005)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நிலத்துக் காதல்
## (நேரிசை வெண்பா)

நோயாகி நோய்க்கு மருந்தாகி நோய்மனத்தைத்
தீயாகித் தீய்த்து வதைத்தாலும் - காயாத
சந்திரனின் தண்ணொளியாய் தானே தணிந்துவரும்
இந்நிலத்துக் காதல் இயல்பு.

கொள்ளலும் கொண்டு கொடுத்தலும் நெஞ்சிருத்தி
உள்ளலும் காதலில் இன்பமன்றோ! - கள்ளமில்லாக்
காதல் வயப்பட்டோர் கண்துயிலும் வேளையிலும்
போதவிழும் பொன்நெஞ்சிற் பூ.

கல்லாதார் தானும் கவிஞராய் மாறிடுவர்
பல்லா யிரம்பாப் பிறந்துவரும் - சொல்லடங்காக்
கற்பனையும் ஆறாய்க் கரைபுரண்டே ஓடிவரும்
பொற்படையும் காதல் பொலிந்து.

மோதலற்று நெஞ்சம் முகிழ்ந்திருவர் ஒன்றாகிப்
பேதமெலாம் வெட்டிப் பிளந்தன்புக் - காதலெனும்
தீக்குள் தினம்காய்ந்து தேசொளிரும் உள்ளமதில்
பூக்காமற் போகுமோ பூ.

கண்ணிலே காணும் கவர்ச்சியெலாம் காதலல்ல
எண்ணம் ஒருமித் திணைந்தக்கால் - வண்ண
நறுமலராய்க் காதலெல்லா நாளும் மணந்தே
இறுதிவரை வாழும் இனிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைதாண்டி வந்த கடலே
## (நேரிசை ஆசிரியப்பா)

அன்னைக் கீடு அகிலத் தில்லை
உன்னைத் தாயென உவந்து போற்றினோம்!
கொட்டும் அருவி குளிர்நீர் நிலைகள்
கட்டுக் கடங்காக் கரைபுரள் நதிகள்
சொரியும் வானம் சுழலும் காற்றென
விரியும் இயற்கையின் விளைவிடம் நீயே!
செங்கதிர் எழுவதும் சென்றுபின் விழுவதும்
மங்கையுன் மடிதனில் மனங்கவர் காட்சி!
உன்னைக் கதிரோன் உருக்கும் வேளை
நன்னீ ராக ஞாலத்திற் பொழிவாய்!
முக்காற் பூமி முழுவதும் மூடி
எக்கா லமுமதன் இயல்பினைக் காத்தாய்!
மண்ணுல குள்ள மன்னுயிர்க் கெல்லாம்
எண்ணரும் பயன்கள் ஏற்புடைத் தருளினாய்!
வியர்வை நீரை விதைத்தவர் உடலின்
அயர்வை நீக்கும் அருமருந் தானாய்!
காதற் கிளிகள் கூடிக் களித்திடக்
கீத மிசைத்து கிளுகிளுப் பூட்டுவாய்!
மாசுற்ற நகர மக்களின் மூச்சிலே
தூசு துடைத்து தூய்மையைத் தந்தாய்!
கூடிக் களிக்கும் குழந்தைகள் உன்கரை
நாடியே வந்தால் நாளையே மறப்பார்!
இத்தனை பெருமைக் கிருப்பிட மானவள்
மொத்தமாய் அனைத்தையும் மூழ்கடித் தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் கனிவும் தர்மமும் மறந்து
பேயாய் ஏனோ பேருருக் கொண்டாய்?
சிலமணித் துளிக்குள் சிவக்கூத் தாடி
நிலமகள் வனப்பை நீசமாய் ஆக்கினை!
நிர்மல மான நெய்தல் நிலத்தைத்
துர்மணம் வீசும் துயர்நில மாக்கினை!
மணல்வீ டமைத்து மகிழ்ந்தவெம் மக்களைத்
தணலுக் கிரையெனத் தாரை வார்த்தாயே!
உள்ளம் பிரியா இல்லத் துறவினை
வெள்ளத் துள்ளே வீழ்த்திப் பிரித்தனை!
ஏய்த்துப் பிழைப்போர் இன்புற் றிருக்க
வாய்க்கென உழைத்தோர் வாழ்வைப் பறித்தனை!
கண்ணின் முன்னே கதறித் துடித்திட
எண்ணில் அடங்கா உயிர்களை மாய்த்தனை!
பெற்றவர் தொலைத்த பிள்ளைகள் எத்தனை?
உற்றவர் இழந்த உறவுகள் எத்தனை?
ஓடி உழைத்துத் தேடிய தனைத்தும்
ஆடி அடங்கிய உன்னுள் அழிந்ததே!
வெந்த புண்ணில் வேலையேன் நுழைத்தாய்
நொந்தவர் மேலும் நோகவேன் செய்தாய்?
மீண்டும் ஓர்முறை மதம்கொள் ளாதே!
தாண்டி இனிமேல் தரையே றாதே!
நாளும் நலிந்தே நடைப்பிண மாக
வாழும் மக்கள் விழிநீர் துடைக்க,
கரைதாண்டி வந்த கடலே
விரைவாய்த் தாயாய் வருவாய் நீயே!
(உதயன் 2005 கவிதைப் போட்டியில் தங்கப்பதக்கம் பரிசு பெற்ற கவிதை மே. 2005)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருக புத்தாண்டே!
## (எண்சீர் விருத்தம்)

மலர்ந்திடுக புத்தாண்டே மகிழ்ச்சி யென்னும்
  மணம்வீசி மனமெலாம் மயங்கி நிற்க
புலர்ந்திடுக பொற்காலை புனிதம் பொங்க
  பூபாளம் இசைத்திடுக புவன மெல்லாம்
உலர்ந்திடுக பனிநீராய் உள்ள மெங்கும்
  உறைந்துள்ள துன்பத்தின் சுமைக ளெல்லாம்
கலந்திடுக மூச்சினிலே காதற் காற்று
  கவலையெல்லாம் களைந்துவிடு புதிய ஆண்டே!

முற்றத்து வேப்பமர நிழலும், வானின்
  முழுநிலவின் பால்வண்ண ஒளியும், நன்றாய்
முற்றிப் பழுத்தமுக் கனிகள், காற்றில்
  மூழ்கிவரும் கோயில்மணி ஓசை, எங்கள்
சுற்றமெல்லாம் சூழவந்து சொரியும் அன்பு
  சுகமான கனவல்ல நனவென் றாக
வெற்றிதரும் ஆண்டாக வருவாய் மக்கள்
  வேதனைகள் தீர்த்துவிடு புதிய ஆண்டே!

கொஞ்சிடுக பசுமைநெல் வயல்கள் தோறும்
  குலுங்கிடுக குலைகுலையாய்த் தென்னந் தோப்பு
விஞ்சிடுக தொழிற்துறைகள் மேலை நாட்டோர்
  வியந்திடுக விஞ்ஞான வளர்ச்சி கண்டே
துஞ்சுகின்ற பொழுதில்லை யார்க்கும் என்றும்
  துன்பமில்லைத் தோன்றவரும் ஈழம் தன்னில்
அஞ்சுவதே அறியாத மறவர் வெற்றி
  அடைந்திடுக புத்தாண்டே அருள்வாய் நீயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செழித்திடுக சீரோடு சிறப்பு நாளும்
செந்தாரை தோய்ந்ததமிழ் ஈழம் தன்னில்!
கொழித்திடுக கல்வியொடு செல்வ மெல்லாம்
கொடுத்திடுக வள்ளல்கள் குறைவில் லாது
விழித்திடுக துயில்கின்ற வேளை இல்லை
விடிகின்ற புத்தாண்டை விரும்பி வாழ்த்திக்
களித்திடுவோம் கனிந்துவரும் தேசம் கண்டே
கார்கால மயில்கள்போ லாவோம் நாமே!

(முழக்கம் 02.01.2007 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதிடப் புரட்டு
## (எண்சீர் விருத்தம்)

வஞ்சகமாய் வடதிசையால் வந்தோர் அன்று
 வளமாகத் தமிழகத்தில் வாழ்ந்தோர் தங்கள்
நெஞ்சத்தில் தெய்வபயம் நாட்டிக் கோள்கள்
 நீசமென்றும் தோசமென்றும் நம்ப வைத்தே
சஞ்சலத்தை நீக்குதற்குச் சாந்தி யென்றும்
 சடங்கென்றும் ஏமாற்றிச் சுரண்டி வாழப்
பஞ்சாங்கப் புரட்டுக்கள் பொலிந்த மூடப்
 பழக்கத்தைப் பண்பாடாய்ப் பதிய வைத்தார்!

சோதிடத்தை அறிவியலின் சொத்து என்றும்
 சோதிடர்கள் சொல்வதெல்லாம் உண்மை என்றும்
வாதிடுவார் வாக்கினிலே வாய்மை இல்லை
 வன்மையாய் ஆதாரம் வைப்ப தில்லை
சோதியொளிக் கதிரவனைச் சுற்றும் கோள்கள்
 சுழலுகின்ற பான்மைதனைக் கணித்து வைத்து
பாதியிலே பொய்புரட்டைப் புகுத்தித் தெய்வப்
 பற்றென்னும் தேன்கலந்து பருக வைத்தார்!

ஆண்டொன்றில் ஈராறு திங்கள் என்றால்
 அதில்நான்கு எதற்குமே ஆகா தென்பார்
தீண்டாத நாள்மூன்று கிழமைக் குள்ளே
 தேங்கியதில் கரிநாள் தேய்பிறைநா ளென்றும்
மூண்டெரியும் தீபோலே மரண யோகம்
 முற்றிலுமே ஒவ்வாத ராகு காலம்
வேண்டாத அட்டமி பஞ்சமியும் என்றே
 விழலுக்காய்ப் பொற்காலம் விரையம் செய்தோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலிக்கும் உள்ளத்திற் பொருத்த மில்லை
கல்வியிலும் கருத்தினிலும் பொருத்த மில்லை
சாதகத்துப் பொருத்த மொன்றாய்க் கூடிவிட்டால்
சகலதுமே பொருந்தும் சம்சார வாழ்வில்
பாதகமாய் இருக்கின்ற பலன்கள் கூடப்
பரிகாரம் செய்துவிட்டால் பலிக்கா தென்பார்
வேதனையில் வாழ்விழந்து போவார் பெண்கள்
விளங்காத செவ்வாய்க்குள் வீழ்ந்த தாலே!

மெய்யான அறிவியலால் மேலை நாட்டார்
மின்னுகின்ற கோளனைத்தும் ஆயும் காலம்
செய்மதியிற் சென்றொவ்வோர் கிரகம் தங்கிச்
செவ்வாயிற் குடியேறச் செல்லும் காலம்
வையத்து நாடெல்லாம் புதுமை கண்டு
வளம்பெற்று வாழ்வாங்கு வாழ நாமோ
பொய்யான சாத்திரத்துப் புரட்டை நம்பிப்
பொழுதெல்லாம் பழமையிலே புரளல் நன்றோ?

உலகத்துக் கோடியிலே ஒருகோ டிக்குள்
உறைகின்ற இனமொன்றே உணர்வு அற்றுப்
பலனேதும் இல்லாத பஞ்சாங் கத்தின்
பக்கங்கள் புரட்டியே பாழாய்ப் போனோம்
நிலவினிலே கால்வைத்த போதும் நீண்ட
நெடுவெளியில் சஞ்சரித்து நடந்த போதும்
விலக்கில்லா சுபநேர முகூர்த்தம் பார்த்தோ
வெற்றியைக் கண்டார்கள் வேற்று நாட்டார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளன்ன கோளென்ன செய்யு மென்றே
நற்கந்தர் அலங்காரம் நவிலக் கேட்டோம்
கோளெல்லாம் நல்லனவே அடியார்க் கென்றே
கோளாற்றுப் பதிகமும் கூறக் கேட்டோம்
கேளாத செவியினிலே ஊதும் சங்காய்க்
கேட்டமொழி பகுத்தறியத் தெரியா தோரின்
தாளாத நம்பிக்கை தன்னை விற்றே
தைரியமாய்ச் சோதிடர்கள் தழைக்கின் றார்கள்!

விந்தைபல அறிவியலால் விளைதல் கண்டும்
வியன்மிகுந்த தொழில்நுட்ப வெற்றி கண்டும்
சிந்தையிலே பேய்பில்லி மாந்த ரீகம்
சிலைதனிலே எழுத்தாகிப் போன தாலே
மந்தையொடு மந்தையென மாறிப் போனோம்
மண்டியிட்டு வீழ்ந்தநாம் எழவே யில்லை
தந்தைபெரி யார்தந்த மாற்ற மெல்லாம்
தண்ணீரில் எழுத்தாகிப் போக லாமோ?

நக்கீரன் பெரியாரின் வழியில் நின்றே
நல்லறிவை நயமாக எழுதி வைத்தார்
அக்குவே றாணிவே றெனவே ஆய்ந்தே
ஆரியத்தின் புரட்டுகளை அலசி வைத்தார்
எக்கூற்றை யார்யார்வாய்க் கேட்ட போதும்
அக்கூற்றை ஆராய்தல் அறிவாம் என்றே
முக்காலம் அறிந்ததமிழ் முனிவன் சொன்னான்
முழுமையாய்ச் சாத்திரத்தை மூடி வைப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிப்பொறிக்குள் உலகத்தைச் சுருக்கி மாந்தர்
காலத்தின் ஓட்டத்தோ டோடும் போது
மணித்துளிகள் ஒவ்வொன்றும் மணியா மன்றோ!
மானுடத்தை மூடுமறி யாமை என்னும்
பிணித்துயரைப் போக்கவந்த மருந்தாய்த் தந்தை
பெரியாரின் பகுத்தறிவுப் பாதை செல்லும்
பணித்துறைக்கு அறிஞர்நக் கீரன் போன்றே
பாரெல்லாம் சான்றோர்கள் தோன்ற வேண்டும்!

(திரு. நக்கீரன் அவர்களின் சோதிடப் புரட்டு வெளியீட்டு விழாவிலே வாசிக்கப்பட்ட கவிதை 08. 09. 2007)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழுவது மீண்டும் எழுவதற்கே
### (அறுசீர் விருத்தம்)

போர்மேகம் பொழிந்தே ஓயப்
பொறுக்காத வானம் மீண்டும்
கார்மேகம் கூட்டி வந்து
கடலாகக் கொட்டித் தீர்க்க
ஊர்மனை யெல்லாம் தண்ணீர்
உறவுகள் வாழ்விற் கண்ணீர்
வேர்விழு தறுந்து சாய்ந்த
விருட்சமாய் ஆனார் மக்கள்!

போரினாற் பெற்ற துன்பம்
போக்கிட முன்னே வந்த
மாரியாற் கண்ட சோகம்
மறைந்திட வில்லை இன்று
பாரிய அலையே கொண்டு
பாழ்கடல் தமிழர் வாழ்வை
வாரியே அள்ளிச் செல்ல
வரலாறு காணாச் சோகம்!

எண்ணியா இருந்தார் மக்கள்
எமனுருக் கொண்டு ஆழி
எண்ணிலா உயிரைக் காவு
எடுத்திடும் என்று தங்கள்
கண்முனே தாயும் சேயும்
கணவனும் மனைவி என்றும்
விண்ணெழும் அலைவாய் தன்னில்
வீழ்ந்திடத் தவித்து நின்றார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்கடற் கோளே உன்னால்
அழிந்தது குமரிக் கண்டம்
ஊழ்வினை என்றே உன்னுள்
உறைந்தது பூம்பு காரும்
சூழ்பகை கண்டும் வீழா
ஈழமும் வீழ்ந்த துன்னால்
வீழ்வதெம் விதியா கட்டும்
வீறுபெற் றெழுவோம் நாங்கள்!

தாயாகி வாழ்வு தந்து
தமிழினம் தன்னைக் காத்தாய்
பேயாக உருவம் கொண்டு
பெரும் பழியேற்ற தேனோ?
நீயல்லத் துயரின் ஊற்று
நெடுந்தொலை வதிர்ந்த பூமி!
தூயமா கடலே மீண்டும்
துணையிரு வாழ்வோம் தாயே!

(2004ம் ஆண்டு டிசம்பர் 26ல் ஏற்பட்ட கடற்கோள் அனர்த்தத்தையொட்டி எழுதிய கவிதை.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றாகி உயர்வோம்
## (எண்சீர் விருத்தம்)

மண்ணுலகின் உதயத்தில் உதயம் கண்டோம்
மானுடத்தின் நாகரிகத் தோற்றம் கண்டோம்
பண்பட்ட சமுதாய நெறிகள் சாற்றும்
பார்போற்றும் இலக்கியங்கள் படைத்து வைத்தோம்
எண்திசையும் கடந்துபெரு வணிகம் செய்தோம்
ஏற்றமிகு பேரரசாய் ஆட்சி செய்தோம்
எண்ணற்ற பெருமைகொள் இனத்தில் வந்தோம்
ஏதிலிக ளாயிழிந்த நிலையின் றேனோ?

கலையையோர் கண்ணாக இன்னோர் கண்ணாய்
கலாசாரம் பண்பாட்டைக் கட்டிக் காத்தோம்
விலைமதிக்க வேயொண்ணா விழுமி யங்கள்
வேர்கொள்ள விருட்சமெனத் தழைத்து நின்றோம்
தலைநிமிர்ந்து மார்தட்டித் தமிழ ரென்றே
தன்மானமே யுயிராய்ப் போற்றி வாழ்ந்தோம்
நிலையழிந்து நிலமிழந்து நாடற் றோராய்
நிம்மதியும் இழந்தஇன மான தேனோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிதான மொழியைத்தாய் மொழியாய்க் கொண்டோம்
இன்னரும்செம் மொழியென்றே ஏற்றம் கண்டோம்
கனிதரும் இன்சுவையாய்த் தித்திக் கின்ற
கன்னித்தமிழ்ப் பேச்சொலியின் இனிமை கேட்டோம்
பனிநீரில் குளிக்குமிளந் தென்ற லாகப்
பழந்தமிழர் பண்பாட்டில் நனைந்த போதும்
தனிநாடு தனியரசு அனைத்தும் கெட்டே
தனித்தன்மை தனையிழந்தும் தவிப்ப தேனோ?

வடக்கிருந்தும் மேற்கிருந்தும் சுரண்ட வந்தார்
வந்தவரை வாழ்வித்தே வரண்டோம் நாங்கள்
முடக்கியே போட்டார்கள் முழுதாய் எங்கள்
முன்னோர்கள் தந்தநல் நெறிக ளெல்லாம்
கிடப்பிலே போட்டுவிட்டுக் கீழே வீழ்ந்தே
கேள்வியின்றி யவர்மரபைத் தலையாலேற்றே
நடப்பதெல்லாம் நல்லாக நடக்கு மென்றே
நம்பியே கிடந்ததால் நலிந்தோ மன்றோ?

எந்தஇனம் தன்மொழியை இழிவாய் நோக்கும்
எந்தஇனம் தானழிந்த நாள்கொண் டாடும்
எந்தஇனம் தன்மொழியைத் தெய்வம் தீண்ட
ஏற்காத மொழியென்றே எட்டி நிற்கும்
எந்தஇனம் அயல்மொழியிற் பெயரைச் சூட்டி
அடையாளம் இழந்ததொரு அவல மெய்தும்
அந்தஇனம் இவ்வுலகில் வேறொன் றில்லை
ஆதிமொழி வந்ததமிழ் இனமே பாராய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னியரின் நாட்டில்கால் பதித்தோர்க் கெல்லாம்
அவர்மொழியே வாழ்வுக் காதாரம் உண்மை
என்றாலும் தாய்மொழியைத் தம்பண் பாட்டை
ஏளனமாய் நோக்கிடுவோர் இழிந்த மாக்கள்
அன்னையினைப் புறந்தள்ளி அயலான் தாயை
அரவணைத்தல் போலாகும் அன்னார் செய்கை
பொன்னாலும் புகழாலும் பொலிந்த போதும்
பொருளற்ற வாழ்வானாற் போலி வாழ்வே!

குயிலினிமைக் குரலிழந்தே கூவு மானால்
கோட்டானின் கூக்குரலாய்ப் போகு மன்றோ!
மயில்வண்ணத் தோகையினை இழந்தே போனால்
மதிப்பிழந்து வான்கோழி வடிவா காதோ?
இயலிசையும் கூத்துமென இனிமை கொண்ட
இன்னுயிராம் முத்தமிழை இழந்தோ மென்றால்
இயல்பிழந்த குயிலைப்போல் மயிலைப் போலே
இருந்தென்ன இறந்தென்ன இரண்டும் ஒன்றே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னியரின் படைவலியால் ஆழிக் கோளால்
அழியாத தமிழ்நாளை அழிந்தா போகும்?
கன்னியாம் தமிழ்காக்கக் களத்தி லாடிக்
கந்தகத்துக் காற்றோடு கலந்தே போன
எண்ணரிய மாவீரர் ஈகை கண்டே
எழிச்சியுற்ற தமிழுக்கா இழிவு சேரும்?
முன்னைக்கு முன்னான மொழிகட் கெல்லாம்
மூத்ததமிழ் வரும்நாளை முடிந்தா போகும்?

ஒன்றுபட்டால் வாழ்வுண்டு உணர்ந்தோ மானால்
ஒளிந்தழிக்கும் உட்பகைவர் அழிந்தே போனால்
கொன்றழிக்கும் கொடுநோயாய் இனத்தைச் சூழ்ந்த
குலபேதம் மதபேதம் ஒழிந்தே போனால்
நன்றாய்நம் மொழிவளர்த்து மரபைக் காத்து
நல்லதமிழ்ச் சமுதாயம் அமைப்போ மானால்
வென்றிடலாம் வரும்பகையை வெட்டி வீழ்த்தி
வெறும்சொல்லாய் மாற்றிடலாம் விதியைத் தானே!

(தைத்திங்கள் தமிழ் மரபுத் திங்களாகக் கொண்டாடப்பட்டதை யொட்டி எழுதப்பட்ட கவிதை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த நாள்
## (நாலிருசீரிரட்டை வியனிலைச் சிந்து)

ஞாயிறைப் போற்றியே பொங்கலிட் டோமிந்த
ஞாலம் செழித்திடவே! - எல்லாம்
போயின காலத்தின் கோலமாய் இப்போது
பொங்கலும் போலியாச்சே!

உழுது பயிரிட்டு ஊரும் உறவுமாய்
உணர்வுடன் பொங்கலிட்டோம் - இன்று
தொழுது பிறதேசம் தோறும் அலைகிறோம்
தொன்மைச் சிறப்பிழந்தோம்!

வானத்தில் ஞாயிறு வாசலில் மாக்கோலம்
வண்ணமாய்த் தோரணங்கள் - புதுப்
பானையில் பொங்கல் பலகாரம் எல்லாமே
பார்க்காத பொங்கலிங்கே!

கோதையர் காலையில் முற்றம் பெருக்கிமாக்
கோலம் இடுவதெல்லாம் - பழங்
காதையி லேவரும் காட்சிக ளானதக்
காலமெப் போதிரும்பும்?

புத்தம் புதுக்காலை பூம்புனல் நீராடிப்
புத்தாடை தானணிந்தே - வெடி
மத்தாப்புத் தின்பண்டம் என்றே சிறார்கள்
மகிழ்ந்தஅக் காலமெங்கே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றத் திலேபுதுப் பானையில் மாவிலை
  மஞ்சளோ டிஞ்சியிலை - கட்டிச்
சுற்றங்கள் சூழவே பொங்கிப் படைத்துச்
  சுவைத்தஅக் காலமெங்கே?

தித்திக்கும் சர்க்கரை செந்நெல் லரிசியும்
  தீம்பாலும் தேன்கரும்பும் - சேர்த்து
எத்திக்கும் வாசனை ஏறிடப் பொங்கியே
  இன்புற்ற காலமெங்கே?

தையோடு நல்லதோர் காலம்வரு மெங்கும்
  தங்குக இன்பமென்றே - நம்பிக்
கையோடு பொங்கலில் வாழ்த்தி மகிழ்ந்தே
  களித்தஅக் காலமெங்கே?

கீழ்த்திசை வானிலே தோன்றும் கதிரொளிக்
  கீற்றில் நிலம்வெளுக்க - வாய்
வாழ்த்திடும் பொங்கலோ பொங்கலென்று அந்தநாள்
  வாராது போய்விடுமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலவெண்பா

நன்றாக வேயுண்டு நாளும் உடல்வளர்த்தால்
கொன்றே ஒழிக்கும் கொடுநோய்கள் - இன்றேநீ
செய்வாய் உடற்பயிற்சி சீராக அஃதொன்றே
உய்யும் வழியாம் உணர்.

சக்கரை நோய்தன்னைச் சரிசெய்யா விட்டுவிட்டால்
சிக்கலால் நல்வாழ்வு சீரழியும் - எக்குறையும்
வாராது சக்கரையை வைத்தாலே கட்டுக்குள்
தீராது போமோ துயர்.

எண்சாண் உடம்பில் எழிலாய் முகம்துலங்க
கண்கவரும் ஒப்பனைகள் காட்டுகிறோம் - மண்ணிலெமைத்
தாங்கும் இருகால் தனைநன்கு பேணுவதால்
நீங்கும் நெருங்கிவரும் நோய்.

தித்திக்கும் தீனிகளும் தேன்சுவைமாப் பண்டமதும்
சித்திக்கும் பேருடலாய் சிந்தித்தே - புத்தியுடன்
நல்ல உணவுண்டு நாளுமுடல் வேர்த்துழைத்தால்
இல்லைப் பெருநோய் இனி.

நீரிழிவு நோய்க்கு நிரந்தரமாய்த் தீர்வில்லைச்
சீரழிவே யென்றுமனம் சோர்ந்தாலே - பேரிழப்பே
உண்டி உடற்பயிற்சி கொண்டு உடல்மெலிந்தால்
கண்டு வருமே குணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்பாச் சரம்

**காலம் பொன்**

நாள்பார்த்து நட்சத் திரம்பார்த்து நட்பான
கோள்பார்த்துக் காலத்தைக் கொல்லாதே - ஆழ்ந்து
வகுத்தறிந்த நம்முன்னோர் வாழ்வதனைக் கொஞ்சம்
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்.

**ஏமாற்றம்**

கொஞ்சும் பருவமகள் கோல மயில்போன்ற
வஞ்சிதனை வாழ்விப்பேன் என்றவனை - நெஞ்சிருத்திக்
கோத்த கவிமாலை கோல மிழந்ததுவே
காத்துக் கசங்கலுற்றாள் காண்.

**பாபம் தீருமோ**

அன்பில்லை நெஞ்சில் அறனில்லை வாழ்வுதனில்
துன்புற்ற ஏழைதுயர் தீர்ப்பதில்லை - இன்புடனே
கொண்டோடிக் கோயிலிலே கொட்டிடுவார் கோடிகளாய்க்
கண்டாயோ இந்தக் கதி!

**போலித் துறவு**

காயத்தைப் பொய்யென்று காவியுடுத் தில்வாழ்வை
மாயமென விட்டு மடமுறைந்தோர் - நேயமற்றுச்
செய்வதோ கொள்ளைகொலை கற்பழிப்புச் சொல்வதுவோ
பொய்யடா பொய்யடா பொய்!

**நம்பிக்கை**

நாளை உலகம் நலமாய் விடியும்நல்
வேளைவரும் தோல்விகண்டு வெம்பாதே - சூளையிற்செங்
கல்லும் உரம்பெறுமே காற்றைத் திசைமாற்று
வெல்லும் வரம்பெறுமே வாழ்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகறை வானம்
## (நிலைமண்டில ஆசிரியப்பா)

பூம்புன லாடிப் புதுப்பொலி வேறிய
மாம்பழ வதனம் மயக்கிடக் காந்தள்
விரல்களால் கோதி விரிந்த குழலைப்
பரல்கள் ஒலிக்கப் பாங்காய் முடித்தே
கரைதனில் மெதுவாய்க் கால்பதித் தேறத்
திரைவில கிடவே தேசென ஒளிரும்
பேரெழிற் பருவப் பெண்ணவள் போலக்
காரிருள் அகலக் கதிரொளி பரவ
வைகறை வானம் வனப்புடன் விரியப்
பொய்யகல் புனிதம் பொலிவது அழகே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவிப்பு
### (நிலைமண்டில ஆசிரியப்பா)

நீலக் கடலோன் நெய்தற் பெண்ணின்
கோல அழகிற் கொள்ளை போனவன்
தன்நிலை மறந்து தாபம் மேலிட
மென்னலைக் கரங்களால் மெதுவாய் வருடித்
தழுவித் தழுவி முத்தமிட் டாலும்
நழுவவும் இல்லைத் தழுவவும் இல்லை!
உள்ளக் கதவினுள் உணர்ச்சியை மறைத்தே
கள்ளமாய்த் தூக்கம் காட்டி ஏமாற்றும்
பெண்ணவள் நெய்தலாள் பொன்னெழில் மேனியில்
வெண்நுரை அள்ளி வீசி அடித்தே
கண்ணவள் திறந்தே காதல்சொல் வாளென
மன்னவன் கடலோன் மனம்படும் பாடே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகின் பரிசு
### (நிலைமண்டில ஆசிரியப்பா)

வண்ணம் கலந்து வடித்த உடலில்
எண்ணம் சிதைக்கும் ஏகாந்த ஒளியும்
தென்றலாய் வருடித் தீண்டும் நளினமும்
மின்னெனத் தெறிக்கும் மென்னொளி நகையும்
அசைந்து மறையும் ஆதவ நடையும்
சிதைந்து சிரிக்கும் செவ்வானக் கன்னமும்
மனதை மயக்கும் மந்தாரத் தோற்றமும்
கனவில் விரியும் காட்சியு மாகவே
துல்லிய அழகோடு துலங்கும் மேனியை
மெல்லிய கார்த்துகில் மூடியே மறைக்க
அத்தனை அழகும் அள்ளித் தெளித்தென்
சித்தம் கலங்கச் சிரித்தே தழுவிய
அந்திப் பெண்ணின் அணைப்பிற் கிடந்தபின்
சிந்தை தெளிந்து சிலிர்த்து விழிக்க,
மாலைக் கன்னியோ மறைவில் கருமைச்
சேலை மாற்றிடச் சேரிடம் சேர்ந்தாள்.
பேரெதிர் பார்ப்பில் பேதைநா னிருந்தேன்,
காரிருள் சூழ்ந்தது கலைந்தது கனவே!

(முரசொலி - பெப்ரவரி 29, 2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி 2

# கவியரங்கக் கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசந்தம்

முன்னை மொழிக்கெல்லாம்
மூத்தமொழி யானாலும்
மூவாமை கொண்டதமிழே!

முக்கண் முதல்வன்பெற
மூவேந்தர் மடிதவழ
முச்சங்கம் வளர்த்தமகளே!

தன்னையே தானமாய்த்
தந்துனைக் காத்திடும்
தனையரைப் பெற்றஅணங்கே

தரணிதனி லென்றுமே
தழைத்தோங்கி வாழுவாய்
தனித்துவ மானதமிழே!

என்னையிப் பெருமன்றில்
ஏற்றியே இன்கவிதை
எடுத்துவர வைத்ததமிழே!

என்னுயிர்க் குயிரான
உன்னையே போற்றினேன்
உய்விப்பாய் அன்னைதமிழே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பரிய தமிழாய்ந்த
செந்தமிழ்ப் பேராசான்
சிந்தனைச் சிற்பியாவான்

சொல்லிலும் செயலிலும்
சோர்விலான் எப்போதும்
சிவநேச னென்னுமாசான்

ஒப்பரிய தலைமைக்கு
இக்கவிதை அரங்கிலே
ஏற்றினேன் அன்புவணக்கம்!

ஒளியேற்றி அறியாமை
இருள்போக்கும் தீபமாய்
ஒளிர்ந்திடக் காக்கதமிழே!

எண்ணத்து ஊற்றிருந்து
எழுகின்ற உணர்ச்சிகளை
எழுத்தாக வடித்துவைத்தே

ஏற்றமிகு கவிவெள்ளத்
தேக்கமென வீற்றிருக்கும்
எனதருமைக் கவிவாணரே!

வண்டமிழ்ச் சொல்லடுக்கி
வளமார்ந்த கற்பனையும்
வார்த்துநற் சரம்தொடுத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்தத் தையும்தமிழர்
வாழ்விய லையும்பாட
வாழ்த்தியே வணங்குகின்றேன்!

கன்னலின் சாற்றில்முக்
கனிச்சாறு சேர்ந்தாலும்
கன்னித்தமிழ் இன்னும்சுவையே

கவிமேகம் பொழியுமிக்
கனமழையில் நனைந்திடக்
கானமயி லானசபையே!

பொன்னான காலமதைப்
பொருளாக எண்ணாமல்
பொங்குகவி கேட்கவந்தீர்

போற்றினேன் உங்களது
பேரார்வம் தன்னையே
பெரியோரே அன்புவணக்கம்!

வேறு

வந்தது வசந்தம் இன்று
வெண்பனிக் காலம் நீங்க
தந்தது மக்கள் நெஞ்சில்
தாழாத மகிழ்ச்சி வெள்ளம்
மங்கலம் இழந்து நின்ற
மரங்களும் மண்ணும் மீண்டும்
தங்களை அழகு செய்து
திருமணக் கோலம் பூணும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமகள் தாய்மை கொள்வாள்
நீலவான் மகளும் நல்ல
குலமகள் ஒளிர்தல் போலே
குளிர்ந்திடச் செய்வாள் கண்ணை
விலங்கொடு புள்ளி னங்கள்
விடுதலைக் கீதம் பாடும்
துலங்கிடும் இயற்கை பொன்னாய்த்
துய்த்திடும் வசந்தம் வந்தால்!

குன்றிருந் தவிழ்ந்து வீழும்
குளிர்நய கராவி லாடி
அன்றலர் மலர்கள் தொட்டு
அவைதரும் வாசம் சேர்த்து
தென்றலாய் காற்று வந்தெம்
தேகத்தைத் தழுவ வீட்டு
முன்றில் நிலவு காய
முழுமையாய் வசந்தம் தோன்றும்!

வெண்பனி நீங்கிற் றென்றால்
விழாக்களுக் கெல்லை இல்லை
மண்வழிப் பெயரால் எங்கும்
மகிழ்ந்திடும் ஒன்று கூடல்!
எண்ணிலாத் திருவி ழாக்கள்
எங்கணும் மணவி ழாக்கள்
வெண்திரைத் தார கைகள்
வெளிச்சத்தில் கலைவி ழாக்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுலாப் போவோ ரென்ன!
சிற்றுலாப் போவோ ரென்ன!
பற்றினை அறுக்க வென்றே
பலதலம் போவோ ரென்ன!
மற்றுமிங் கிளைஞர் கூடும்
மகிழ்களி யாட்ட மென்ன!
முற்றிலும் கொண்டாட் டங்கள்
முகிழ்ந்திடும் வசந்தம் என்றால்!

சொந்தமண் விட்டு நல்ல
சுகபோகம் தேடி இங்கே
வந்தவர் நமக்கு என்றும்
வளமான வசந்த காலம்
இந்த மண்மீது வாழ்வு
இனிமையே எனினும் எங்கள்
சொந்தமண் துயரில் தோய்ந்த
சோகத்தை மறக்க லாமோ?

பேரின வாதப் பேய்கள்
பெருமத வெறியர் கொண்ட
போரினால் ஈழ வானிற்
பெருகிய குருதி மேகம்
மாரியாய்க் கொட்டி மண்ணை
மறைத்திட மக்கள் அங்கே
வேரொடு சாய்ந்தார் அன்னார்
விழைந்திடும் வசந்தம் எங்கே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறைவிடம் இழந்து நின்றோர்
உறுதுணை இழந்தோர் வாழும்
உரிமைகள் இழந்து மண்ணில்
ஊர்ந்திடும் புழுக்க ளானோர்
சிறைதனில் வதைக்கப் பட்டோர்
சீரெலாம் சிதைக்கப் பட்டோர்
வறுமையே வாழ்வாய்ப் போனோர்
வாழ்விலே வசந்தம் எப்போ?

கல்வியும் தொழிலும் மேன்மைக்
கலைகளும் சிறந்த நாட்டில்
"செல்"லடி குண்டு வீச்சால்
சிதிலமாய்ச் சிதறிப் போன
மெல்லிய மனத்திற் போரின்
கொடுமையே வடுக்க ளாகிக்
கல்லுக்குள் முளைய விழ்த்தோர்
கனவிலும் வசந்தம் உண்டோ?

கந்தக அமிலக் காற்றால்
கதிரனல் சொரியும் வீச்சால்
அந்தக ராகி அங்கம்
அறுந்தவ ராகி நோயால்
பொந்தினுள் பதுங்கிப் பாம்பு
பூச்சியோ டுறைந்து வாழும்
ஜந்துக்க ளாகிப் போனோர்
யாசிக்கும் வசந்தம் எங்கே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையைத் தாயைச் சேயைத்
தன்னுடன் பிறந்தோர் சுற்றம்
முந்தையர் கொடுத்த செல்வம்
முழுமையும் இழந்து இன்று
சொந்த மண்மீதே மிக்க
சோகத்தில் அகதி யானோர்
நொந்தவர் நொடிந்தார் தம்மை
நோக்குமோ வசந்த காலம்?

மானுட அவலம் நீங்கி
மனமகிழ் வெய்தும் காலம்
வானொடு கடலும் மண்ணும்
வசமாகிக் கொள்ளும் காலம்
தேனினும் இனிய ஈழத்
தனியரசு அமையும் காலம்
நானிலத் தமிழர்க் கன்றே
நலம்தரும் வசந்த காலம்!

எத்திரைக் கடல்க டந்து
எக்கண்டம் தாவி னாலும்
முத்திரை தமிழ னென்று
முகத்திலே பதித்தே யுள்ளோம்
சித்திரைத் திருநாள் இன்று
சிந்தையி லதனைக் கொள்வோம்
நித்திரை போக்கி நெஞ்சில்
நிறுவுவோம் உறுதி யொன்று!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றேநாம் தமிழ ரெல்லாம்
இணைவமே பாதை ஒன்றில்
வென்றுநாம் பெறலாம் மீண்டும்
விடுதலை விரைவில் அன்றே
குன்றென அசையாக் கொள்கைக்
கொடியின் கீழ்அரசு மீளும்
அன்றுதான் தமிழர்க் கெல்லாம்
அமைந்திடும் வசந்த காலம்!

வேறு

வாழ்க நந்தாய்மொழி வாழ்க நந்தமிழ்
வாழ்க நந்தாயகம் வாழ்க நல்லறம்
வாழ்க நந்தலைமகன் வாழ்க நம்மினம்
வாழ்க நம்முறவுகள் வாழ்க வாழ்கவே!

(திரு.சின்னையா சிவனேசன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற சித்திரைத் திருநாள் விழாக் கவியரங்கில் இடம்பெற்ற கவிதை - ஏப்ரல் 13. 2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுகின்ற தேசம்

அரசவையில் கவிதையரங் கேற்றம் செய்தார்
அந்தநாள் புலவர்கள் அவர்கள் கொண்ட
மரபதனைப் போற்றியவர் வழியே சென்று
மாகவிஞர் சொல்வேந்தர் கவிஞர்க் கெல்லாம்
அரசர்இங் கமர்ந்திருக்கும் அவையின் கண்ணே
அரங்கேற்றக் கவிதையொடு வந்தோம் நாங்கள்
சிரம்தாழ்ந்த வணக்கம் இச்சபையோர்க் கெல்லாம்
செந்தமிழே உன்பாதம் பணிந்தேன் காப்பாய்!

நெருப்பாகக் கனல்பறக்கும் கவிதை தந்தாய்
நீராகத் தணிய வைக்கும் கவிதை தந்தாய்
பருவத்துக் காதலர்க்கு கவிதை தந்தாய்
பாரிலுள்ளோர் அனைவருக்கும் கவிதை தந்தாய்
திரைப்பாட்டில் இலக்கியத்தைத் தேக்கி வைத்தாய்
தேனொழுகும் தமிழாலே தேசம் வென்றாய்
கருப்பான வைரமாய் ஒளிரும் முத்தே
கவியெழுதும் பாவலர்க்குன் கவிதான் வித்தே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுகின்ற தேசம் என்றே தலைப்புத் தந்தார்
எடுத்திட்ட உலகவரை படத்தை நோக்க
விழுகின்ற தேசமே கண்டேன் அன்றி
வேறேதும் காணாது வியர்த்து நிற்க
முழுவதுமாய் எழுந்து நிற்ப தெமதுதேசம்
முற்றிலுமே மறந்தீரோ என்றாள் என்னை
விழுதாகத் தாங்குமன்பு மனையாள் நல்ல
விதையொன்று கவிதைக்குத் தந்தாள் வாழ்க!

இசைவேந்தன் இராவணனார் ஆண்ட தேசம்!
இதிகாசக் காலமுன்பே எங்கள் தேசம்!
அசைவின்றித் தமிழ்மன்னர் ஆட்சி செய்த
அழகு தமிழீழமே எங்கள் தேசம்!
திசைமாறி வந்தபெரும் திருடர் கூட்டம்
தேசத்தைத் தமதாக்கிக் கொண்டே எம்மை
வசைபாடி வந்தேறு குடிகள் என்றே
வாழ்வுரிமை அனைத்தையுமே பறித்தார் வீழ்ந்தோம்!

வீழ்ச்சியுற்ற தேசத்தை விலங்கிற் பூட்டி
விடியாத இரவுனக்கு விதியே என்றார்!
தாழ்ச்சியுற்ற இனமாகத் தவறிக் கெட்டு
தலைநிமிர வழியின்றி நின்ற வேளை
மாட்சியுறு மாவீரன் மலர்ந்து வந்தான்
மறத்தமிழர் வரலாற்றைப் புவனம் மீண்டும்
காட்சிபெறக் களம் கண்டான் எமதுதேசம்
கட்டுக்கள் உடைத்து மேலெழுதல் கண்டோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிமத பேதமெலாம் சரியக் கண்டோம்!
  சமதர்மப் பாதையங்கு விரியக் கண்டோம்!
பாதியிலே பகைவர்கள் பற்ற வைத்த
  பண்பாட்டுச் சரிவுமெல்ல நிமிரக் கண்டோம்!
மோதிநின்ற பகைசிதறி ஓடக் கண்டோம்!
  முழம்போட்ட வெறுங்கையின் விந்தை கண்டோம்!
நாதியற்ற தமிழனென்ற நிலையே மாறி
  நம்தேசம் நமக்கென்றே எழுதல் கண்டோம்!

நாற்குணமும் நாற்படையாய்க் கொண்டே இந்த
  நாட்டினிலே நலிவுற்று வாழ்ந்த பெண்கள்
நாற்படையே நடத்திப் பகைஅழித்து வெற்றி
  நாட்டிவைத்த வரலாறு அங்கே உண்டு
நேற்றுஅந்த முண்டாசுக் கவிஞன் நெஞ்சில்
  நிழலான புதுமைப்பெண் நிஜமாய் வந்தாள்!
போற்றிடுவோம் எழுகின்ற புதிய தேசம்
  பெண்ணடிமை போக்கியதோர் புரட்சித் தேசம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மண்ணை மீட்டுநல் லினிய தேசம்
  எழுந்துவர எண்ணற்றோர் விதையாய் வீழ்ந்தார்!
செம்மண்ணாய் மாறியதே ஈழம் அன்னார்
  சிந்திய செங்குருதி மண்ணிற் பாய்ந்ததாலே
நம்பிக்கை கொண்டேஓர் தலைவன் பின்னால்
  நாடெல்லாம் திரண்டதனால் வலிமை பெற்றோம்!
தம்பிபிர பாகரனின் தவத்தின் பேற்றால்
  தமிழீழம் மலரும்நாள் தொலைவில் இல்லை!

எழுகின்ற தேசத்தை ஏந்தி நிற்போம்!
  எம்தலைவன் கரங்களுக்கு வலிமை சேர்ப்போம்!
பழுதற்றுப் பலசுகங்கள் துய்க்கும் நாங்கள்
  பாதியதில் ஒருபங்கைப் புலத்தில் துன்பப்
புழுதியிலே புரள்வோர்க்காய் போக வைப்போம்!
  பொன்நாடாய் நம்நாட்டைப் புலர வைப்போம்!
எழுதிவைத்த விதியிதென்ற எண்ணம் போக்கி
  எதுவு மெம்மால் முடியுமென்ற விதியமைப்போம்!

(கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் முன்னிலையில் தமிழோசை சார்பாக நடைபெற்ற கவியரங்கில் இடம் பெற்ற கவிதை. 2005)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரட்டும் மனித நேயம்

தன்னையே உருக்கியத் தணலிலெனைப் புடம்போட்டு
மண்ணிலே நல்லவண்ணம் மனிதனாய் ஆக்கிவைத்து
விண்ணிருந்தே நித்தமெனை வாழ்த்தும் எனைப்பெற்ற
அன்னையேயுன் காலடிக்கென் அன்பு வணக்கங்கள்!

தாயே தமிழே தக்கோர் அவையினிலே
நீயே எனைநிறுத்திப் நீங்காப் புகழ்கொடுத்தாய்!
தூயவுன் பாதங்கள் தொட்டுத் துதிக்கின்றேன்
தீயாகித் தீமைகளைத் தீய்க்கும் கவிதருவாய்!

பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும் சிறப்புச் சிலவுயிர்க்கே
இறப்பில்லாக் கல்வியினால் இமயம் எனவுயர்ந்து
திறத்திலும் தேர்ந்தவராம் திருநட ராசாஎமைச்
சிறப்பிக்க வந்துள்ளார் சிரம்தாழ்ந்த என்வணக்கம்

சிறகடித்துத் திசையெங்கும் சிதறிப் பறந்தாலும்
பறவையினம் தம்கூடு பற்றித் திரும்புதல்போல்
உறவுகளே ஊராரே உற்சாகம் பொங்கஇங்கு
வரவுதந்தீர் எல்லோர்க்கும் வளமான நல்வணக்கம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத் தமிழ்வளர்க்கும் சான்ற அறிஞர்களை
பொங்கும் தமிழ்க்கவிதை புனையும் புலவர்களை
தங்கத் தமிழ்த்தாய்க்குத் தத்தெடுத்துத் தந்ததனால்
எங்கள் நெடுந்தீவு அன்னைக்கு அரும்சிறப்பே!

மானிட நேயத்தை மலரவைப்போம் நாமென்றே
தேனின் சுவையான தெள்ளுதமிழ்ச் சொல்லெடுத்து
ஊனில் உணர்ச்சிதனை ஊட்டும் கவிதொடுத்து
வானின் சிகரத்தை வளைக்கவல்ல இளங்கவிகள்

வந்துள்ளார் இச்சபையில் வளமான புதுக்கவிதை
தந்துலகில் தரங்கெட்டுத் தறிகெட்டுத் திரிவோரின்
சிந்தனையைச் சீராக்கிச் சிறப்பான சமுதாயம்
வந்துயரக் கவிகொணர்ந்தார் வாழ்க வளருகவே!

பெண்ணுரிமை வேண்டிப் போராடு வதென்கவிதை
முன்னுரிமை அன்னவர்க்கே கொடுத்தல் முறையன்றோ
அன்னதனால் செல்வி ஜெபகலா வேமுன்னால்
வண்ணக்கவி படைக்க வருகின்றார் வாழ்த்திடுவீர்.

சுட்டெரிக்கும் சூரியனின் சுடரும் கதிரொளியாய்ப்
பட்டுத் தெறிக்கின்ற பலகருத்தைப் பாட்டிலிட்டு
சிட்டுக் குருவியெனச் சிறகடிக்கும் உணர்வோடு
கொட்டவரும் பால்ராஜ் இளம்கவிஞர் வாழ்த்திடுவீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

மனிதரிலே மலரட்டும் நேயம் என்று
  மலர்மாலை தொடுத்தாற்போல் மனதை மாற்றும்
கனிவான சொல்லடுக்கிக் களத்தில் நின்று
  கவிதையிலே கணைதொடுத்த கவிஞர் வாழ்க!
மனிதனை மனிதனாய் வைக்க வென்றே
  மாபெரும் மதங்கள்பல மலர்ந்த தன்றோ?
புனிதமாய் பூக்கவந்த மதங்கள் பேரால்
  பூமியிலே பேரழிவுப் போர்கள் நாளும்!

மாதாவின் கோயிலிலும் உடையும் மண்டை
  மசூதியின் வாசலிலும் மரண ஓலம்!
வேதஒலி யோடு வரும் விநாயகனின்
  விழாவின் ஊர்வலத்தில் குருதி வெள்ளம்
போதிமரப் புத்தனது புனித சீடர்
  போர்க்கொடியோ டலைகின்றார் பேய்கள் போலே
போதனைக்கு மதங்கள் தந்த நெறிகளெல்லாம்
  போதைமருந் தானதுவே புரிந்து கொள்வீர்!

தாய்தன்னைக் கொலைசெய்த தனையன் உண்டு
  தந்தையவன் தலையுடைத்த பிள்ளை உண்டு
சேய்தன்னின் சிரம்கொய்து பொதியில் இட்ட
  சிற்றன்னை கதையும் நாம்கேட்ட துண்டு
நாயாக அடித்துத் தன்மனைவி தன்னை
  நடுத்தெருவே எறிந்தபல கணவருண்டு
நோய்பிடித்து அலைகின்ற மனிதர் கூட்டம்
  நிறைந்துவிட்ட பூமிகண்டு நெஞ்சு வேகும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கோளால் கலங்கி மக்கள் நின்றவேளை
காமத்தோ டலைந்ததோர் கயவர் கூட்டம்!
உடற்கூற்றின் இச்சைக்கே உளத்தை போக்கும்
உலுத்தர்கள் உறவாடிக் கெடுப்போர் கொள்ளை
நடத்தியே பிறர்உழைப்பில் நலமாய் வாழ்வோர்
நலிந்தோரை வருத்திடுவோர் மனிதரென்பார்
விடம்கொண்ட விலங்குகளோ இவரின் மேலாம்
விளைந்திட்ட களையகற்ற மருந்து காண்போம்!

மனவுறுதி கொண்டிளைஞர் எழுந்து வந்து
மனிதமெனப் புதியமதம் படைக்க வேண்டும்!
இனத்தாலே மதத்தாலே சாதி யாலே
இன்னுயிர்கள் பலியாதல் நீக்க வேண்டும்!
தினமுமொரு கையளவு சோற்றுக் காக
திசைதெரியா திருப்போரின் விதியை மாற்றத்
தினவெடுக்கும் இளைஞர் தோள்சேர வேண்டும்
தீமைகளைத் தீயிலிட்டுப் பொசுக்க வேண்டும்!

கனிகொடுக்கும் மரங்கள்போல் மனங்கள் வேண்டும்!
காற்றுப்போல் கலக்கின்ற உள்ளம் வேண்டும்!
பனிவீழும் மலர்வனமாய்ப் பாசம் நெஞ்சில்
படர்ந்துவரும் பண்பான உறவு வேண்டும்!
இனிதான அன்பையே விதைக்க வேண்டும்!
இல்லறத்தில் நல்லறத்தை இணைக்க வேண்டும்!
குனிந்துடலம் குறுகிக்கீழ் நிலையில் உள்ளோர்
குறைநீக்கித் தலைநிமிரச் செய்தல் வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலரவரும் தமிழீழ மண்ணில் நாளை
  மறுமலர்ச்சி சமுதாயம் பெறுவ துண்மை!
புலருமொரு பொதுவுடமை மக்க ளாட்சி
  போதைதரும் பேதமெலாம் பொசுங்கிப் போகும்!
பலருழைப்பில் சிலர்வாழும் பாதை மாறும்!
  பாடுபட்டு உழைப்போர்கை ஓங்கி நிற்கும்!
மலருமங்கு மணம்பரப்பும் மனித நீதி
  மலரட்டும் மலரட்டும் மனித நேயம்!

கவியரங்கம் - மலரட்டும் மனித நேயம்
இடம் - ரொரன்ரோ
நாள் - 28. 05. 2005
தலைமை - மாவிலிமைந்தன் சி. சண்முகராஜா
நிகழ்வு - நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்ற ஆண்டு விழா
பாடியோர் - நா. ஜெபகலா, பே. பால்ராஜ்

(நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்ற ஆண்டு விழாவில் மலரட்டும் மனித நேயம் என்னும் தலைப்பில் நடைபெற்ற கவியரங்கில் தலைமை தாங்கிப்பாடியது. 28. 05. 2005)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பன் கண்ட கற்பு நெறி

ஈன்றேபுறந் தந்தேயெனை இனிதாய்வளர்த் தெடுத்தே
ஆன்றோரமர் அவைமீதினில் அரியாசனம் தந்தாய்
மூன்றாம்பிறை முழுதாயொரு மதியாகிடச் செய்தாய்
தோன்றும்புகழ் உனக்கேயென் தாயேதாள் பணிந்தேன்!

முன்னைப்பழ மொழியேயெனும் இன்னுமிள வண்ணம்
அன்னைபல மொழிக்காகியும் கன்னித்திருக் கோலம்
பின்னைபுதுப் பொலிவும்நிறை அன்னைத்தமிழ்த் தாயே
உன்னைத்தொழு திருந்தேனுட னிருந்தேயெனைக் காப்பாய்!

நெருங்காதொரு துயரேயெமை நித்தம்அருள் சொரிந்தே
அருங்காவலாய் வருமன்னையள் உறையாலயம் தனிலே
பெருங்காவியப் புகழ்நாயகன் கம்பன்கவி யரங்கின்
நறும்பாவனக் கவிநாயகன் தலைமைக்குமென் வணக்கம்!

கரும்பின்சுவை கனியின்சுவை கவிதைச்சுவை தருமே
விருந்தாய்த்தமிழ்க் கவிதைரசம் வடிக்கும்புல வோர்க்கும்
அரும்பும்மலர் ததும்பும்மது சுவைவண்டின மெனவே
இருந்தேகவி அருந்தும்சபை யோர்க்குமென் வணக்கம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

மான்மீதும் சேய்மீதும் மாதர் கொண்ட
  மயக்கத்தால் விழைந்தகதை யுரைக்க வந்தே
தேன்சொட்டும் தெள்ளுதமிழ்க் கவிக ளாலே
  தேசொளிரத் தமிழன்னைக் கணிகள் பூட்டி
வான்முட்டும் புகழ்கா வியத்தை யாக்கி
  வண்டமிழ்த்தாய் பெற்றெடுத்த கவிஞர்க் கெல்லாம்
கோன்ஆனான் கொற்றவனக் கம்பன் தந்த
  கோட்டினிலே தொடரட்டும் கவிதை என்றே!

அன்பான ஆணையெனக் களித்தார் அன்பர்
  அறிஞர் சிவபா லவரை வாழ்த்து கின்றேன்
முந்நாளிற் பயின்றசுந் தரகாண் டத்தில்
  மூழ்கியே மனம்திழைத்த நினைவி னிக்கும்
இந்நாளில் என்கவிதைக் கதுவே வித்தாம்
  இருக்கின்ற கவிஞர்க்கும் அவனே சொத்தாம்
எந்நாளும் கம்பனைப்போற் கவிஞ ரில்லை
  எவர்கவியும் அவன்கவிக்கு ஈடே இல்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கு வீடின்றோர் கவிஞன் உண்டு
வீழ்ந்தாலும் காலிடறி கவிஞன் மேலே
பாட்டென்பார் புதுக்கவிதை இதுவே என்பார்
பலவாறே வசனத்தை நறுக்கிப் போட்டே
தீட்டுகிறோம் கவிதையென்பார் கற்பனையே இல்லை
தீந்தமிழின் சொல்நயமோ சுவையோ இல்லை
கூட்டிவரும் எதுகையில்லை மோனை இல்லை
கொடுமையிவை கவிதையெனக் கூறக் கேட்டால்!

என்றும்நான் புதுக்கவிதைக் கெதிரி யல்ல
எழுத்தசைசீர் தளைதொடையோ டடியென்றாறும்
பின்னிவரும் பாவிலக் கணம்போ னாலும்
பிறந்துவரும் சிந்தனையை உணர்ச்சி தன்னை
குன்றாத சொற்சுவை கற்பனையும் சேர்த்தே
கொடுத்திட்டால் புதுக்கவிதை அதுவே என்பேன்
என்றாலும் அதன்மேலும் கம்பன் தந்த
எழிலான கவிதைநயம் இருக்கக் காண்பீர்

கற்றறிந்தோன் கம்பனவன் தொடரில் இந்தக்
கவியரங்கத் தலைப்பாகக் கம்பன் கண்ட
நற்றமிழர் நன்நெறியாம் கற்பு என்ற
நல்லதோர் தலைப்பினிலே பாட வந்தேன்
கற்புநெறி என்பதுபெண் ஒருவர்க் கல்ல
கன்னிக்கும் காளைக்கும் பொதுவே என்றான்
பொற்புடைய பாவலன்பா ரதியும் அன்று
போற்றியதைக் காப்பதுவே தமிழர் பண்பாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயரதனின் மனைவியர் மூவ ரோடே
 தரைப்படையில் மகளிரணி யிதுவோ என்றே
வியக்கவே அறுபதா யிரமாய்ப் பெண்கள்
 விரும்பி யவர்நாயகிகள் ஆனார் என்றார்
தயக்கமின்றி அவன்மகனாம் இராம னுக்கும்
 தந்தைவழி யேமகளிர் அணியைக் கூட்டி
நயக்கின்ற நாயகிகள் நான்கு கோடி
 நாளெல்லாம் சேரத்தடை இருந்த தில்லை!

வேறு

என்றா லும்குணக் குன்றான நாயகன்
அன்ற லர்ந்தசெந் தாமரை மேனியான்
கொன்று நின்றனன் கோதைய ராசையை
வென்று நின்றனன் வேல்விழி வீச்சையே!

இந்த விப்பிற விக்கிரு மாதரைச்
சிந்தை யாலுந் தொடேனென்ற செவ்வரம்
தந்த வார்த்தையே தாரக மந்திரம்
நந்த மிழ்நெறி யின்வழி யோம்பினான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

பிறன்மனை நோக்கல் பாவம்
என்பதே குறளின் நீதி
பிறன்மனை விழைந்தோ ராலே
பிறந்ததே இராம காதை
பிறன்மனை நயந்த வேந்தன்
போக்கினான் மௌலி பத்தும்
பிறன்மனை கவர்ந்த வாலி
பாழ்பட்டு அழிந்தே போனான்!

கற்பெனப் படுவ தொன்றே
கன்னியர்க்கு அணியென் றாகும்
கற்பினிற் சிறந்த சீதை
கற்பினுக்கு அணியாய் ஆனாள்
கற்பினைக் காப்ப தொன்றே
நற்பெருந் தவத்தின் மேலாம்
கற்புத்தீ கனன்ற தீயைக்
காய்த்ததும் அதனா லன்றோ!

சிறையினி லிருந்த சீதை
சித்திரம் குலைந்த போதும்
கறையிலாச் சிந்தை யாலே
கற்பெனும் பெயராய் ஆனாள்
மறைவினில் இருந்தே தூதன்
மைதிலி திண்மை கண்டு
பொறையினில் கற்பு அங்கே
புரிந்ததே நடமே என்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நங்கையர் கற்பைக் காத்தால்
நற்பெயர் அவர்க்குண் டாகும்
அங்கவர் இல்லம் சேர்ந்தான்
அவன்குலம் பெருமை சேர்க்கும்
தங்களின் இனமும் தாளாத்
தனிப்பெரும் சிறப்புக் கொள்ளும்
மங்கையர் கற்பின் மாண்பால்
மாநிலம் மலரு மன்றோ!

காதலும் கற்பும் மூச்சுக்
காற்றிவை இல்லை யென்னில்
சாதலே மேலாம் என்றே
சாற்றிடும் தமிழர் நீதி
போதையாய் காதல் மாறிப்
புனிதத்தை இழந்து காம
மோதலில் மாந்தர் மூழ்கித்
திணறுவ திந்தக் காலம்!

ஆடையை மாற்றி னாற்போல்
அடிக்கடி மணந்து கொள்ளும்
மேடையை மாற்றும் மேலை
நாட்டவர் மரபிற் சென்று
கோடையில் வற்றிப் போன
குளமாகக் குடும்ப வாழ்வு
பாடையில் பவனி போகும்
பாதையில் பலரும் இப்போ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணலும் அவளை நோக்க
அவளுமே அவனை நோக்கக்
கண்ணியக் காத லங்கே
கனிந்ததைக் கம்பன் சொன்னான்
கண்டதும் கவர்ச்சி கொண்டு
கால்வழி தவறி வீழ்ந்து
கொண்டதே கோல மாகக்
கண்டது காதல் அல்ல!

ஒருவனுக் கொருத்தி யென்ற
உயர்தமிழ் நீதி ஆண்பெண்
இருவரும் போற்றி வாழ்ந்தால்
இல்லறம் சிறக்கு மன்றோ
தருமமும் தவமும் தானம்
தனியென இயற்ற வேண்டாம்
பெருகிடும் இன்பம் என்றும்
பெருமையில் சிறக்கும் வாழ்வே!

(கவிநாயகர் திரு. வி. கந்தவனம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கம்பன் விழாக் கவியரங்கத்தில் இடம் பெற்ற கவிதை. 03. 05. 2008 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தை வென்ற கவிஞன்

விழுதென வாகி ஆணி
வேரென வாகி யென்னை
விருட்சமாய் விரிய வைத்து
வீழாது காத்து நின்றாய்!

மெழுகென உயிரை யாக்கி
மேனியைத் திரியா யாக்கி
மேதினி மீதென் வாழ்வை
மின்னொளி வீசச் செய்தாய்!

உழுதுஎன் உள்ளம் தன்னில்
உயர்பண்பை விதைத்த தாலே
உலகத்தில் மனித னென்றே
உலவிட முடிந்த தம்மா!

பொழுதென வாகி வீழ்ந்த
பூவென வான தாயே
பொற்றிருப் பாதம் போற்றிப்
பூசித்தேன் வாழ்த்து வாயே!

வீழ்த்திட நினைத்த வீணர்
வீழ்வது உறுதி யென்றும்
வீழ்ந்தபின் எழுந்து வீறாய்
வென்றதே தமிழர் மாட்சி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்ந்திடும் இருள்மே கத்தால்
சூரியன் தேய்ந்தா போகும்
சூழ்ச்சிசெய் பகைவ ராலே
சுடர்தமிழ் செத்தா போகும்?

ஆழ்கடல் அள்ளிச் சென்றும்
ஆரியம் அபக ரித்தும்
ஆயிரம் சூது கவ்வி
அழிவுதான் வந்த போதும்,

வாழ்கின்றாய் தமிழே என்றும்
வற்றாத நதிநீ யம்மா
வாழ்த்துவாய் வணங்கு கின்றேன்
வரமாக உனையே கேட்பேன்!

நிலத்தொடு நீரும் காற்றும்
நெருப்புநீள் விசும்பும் என்றே
நிலைமாறும் சக்திக் கெல்லாம்
நிலைதந்த சக்தி நீயே!

நலத்தையே வேண்டி நாளும்
நாடிடும் அடியோர்க் கெல்லாம்
நன்மையை அருள்வாய் நல்ல
நம்பிக்கை தருவாய் நீயே!

புலத்தில்நீ கோயில் கொண்ட
புனிதசந் நிதியின் கண்ணே
புலமையில் பெரியோன் கம்பன்
புகழினைப் பாடு தற்கே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலத்தினை வேண்டி நின்றே
பாமலர் சூட்டி யுந்தன்
பாதங்கள் பணிந்தே னெந்தன்
பக்கத்தி லிருப்பாய் தாயே!

வேறு

முப்பாலில் மூழ்கிவந்து
முத்தெடுத்த செந்தமிழை
செப்பால் சிலைவடித்து
செம்பொன் அணியிழைத்து
எப்போதும் தேசொளிரும்
எழில்மங்கை ஆக்கியவன்
இப்புவிமேல் இணையற்ற
இன்கவிஞன் கம்பனவன்!

ஓவியமாய்ப் பதிந்தெங்கும்
ஒளிர்கின்ற இராமகதை
காவியத்தின் சிறப்பாலே
காலமெலாம் வாழ்ந்தாலும்
காவியத்தால் மட்டும்கவி
கம்பன் புகழெய்தவில்லை
கூவும்குயில் ஓர்நாளும்
குரலிரவல் கேட்டதில்லை!

வார்த்தைச் சிலம்பத்தால்
வண்ண மவன்கவிதை!
காட்சிக் குகந்தாற்போல்
கலந்திருக்கும் சொல்லாட்சி
மூச்சாய் உயிரூட்டும்
முறைமாறா இலக்கணங்கள்
காட்டா றெனப்பெருகும்
கருத்தான கற்பனைகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீட்டுகின்ற வீணையொலி
 மேனி வருடுதல்போல்
கூட்டிவரும் இன்பம்
 கம்பன் கவிநயத்தில்
பாட்டிற் கொருபுலவன்
 பாரதியும் அந்நாளில்
நாட்டிவைத்தான் கம்பனைப்போல்
 நாமறிந்தோர் இல்லையென்றே!

"பஞ்சியொளி விஞ்சுகுளிர்
 அஞ்சொல் இளமஞ்ஞை"யென
வஞ்சிதனை வர்ணிக்கும்
 மென்சொல் தான்என்னே?
மஞ்சுதவழ் வானினையும்
 மிஞ்சிநிற்கும் வண்ணம்
கொஞ்சுதமிழ்க் கற்பனையால்
 நெஞ்சில் நிறைகின்றான்!

வில்லை உடைத்தெறிந்து
 வென்று சுயம்வரத்தில்
முல்லைப்பூ மைதிலியை
 மணமுடித்த காதையிலே
இல்லையே காதல்
 இதனால் தமிழரிதைக்
கொல்லையிலே போட்டுக்
 குப்பையிலே சேர்த்திடுவார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் இலக்கியத்திற்
கலந்தாலே சுவையூறும்
காதலில்லா மாந்தர்வெறும்
கல்லாவார் ஆதலினால்
போதவிழ்ந்த செவ்விதழாள்
பூவையுடன் இராமனையே
மோதவிட்டுக் கண்களினால்
மோகக் கனல்மூட்டி,

அண்ணலும் நோக்க
அவளவனை நோக்கிநிற்க
கண்ணொடு கண்நோக்க
வாய்ச்சொல் பயனிழக்கும்
கண்ணியமாய் காதல்வைத்துக்
காவியத்தை தந்தகம்பன்
மண்ணுள்ள வரையுமெல்லோர்
மனமெல்லாம் நிலைத்திருப்பான்!

உறவுக்குப் பொருள்சொன்னான்
உயிரான மகவுதன்னை
துறவுகொள் என்றேசொன்ன
தந்தையும் உயிரைநீத்தார்
மறந்துமென் மூத்தோன்விட்டு
மணிமுடி தரியேனென்றே
திறந்தருபரதன் அண்ணன்
திருவடி தலைமேற்கொண்டான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணன் தவறுகண்டே
ஆற்றாத கும்பகர்ணன்
எண்ணித் திருந்தென்று
இடித்துரைத்தும் ஏற்காத
அண்ணனை விட்டே
அகலாது அவனுக்காய்
இன்னுயிரை ஈந்தே
உறவுக்கு உயிர்கொடுத்தான்!

அண்ணன் எப்போசாவான்
அவன்செத்தால் தான்படுக்க
திண்ணையெப்போ சேருமென்றே
திருடர்போல் காத்திருக்கும்
எண்ணம் படைத்தே
உடன்பிறந்தோர் வாழுகையில்
அண்ணன் தம்பியுறவை
அழகாகச் சொல்லிவைத்தான்!

இல்லத் துறவுக்கு
இலக்கணமே இராமகதை
வில்லுடைத்த நாயகனும்
வேல்விழியாள் சானகியும்
சொல்லடங்காத் துன்பச்
சுமையினிலும் சோர்வின்றி
நல்லறத்தைக் காத்தார்கள்
நல்நெறியில் வாழ்ந்தார்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன் மனைவிக்குள்
கலந்த உறவுதனை
பணமே அளவெடுத்துப்
பங்குவைக்கும் காலமிது
துணைவன் பிரிவைவிடச்
சுடுமோ இக்காடென்றே
கணவனுடன் காடுசென்ற
காவியத்து சீதையவள்,

வெற்பெடுத்த வேந்தன்
விலங்கிட்ட வனத்தினிலும்
கற்புக் கணிகலனாய்
கடைசிவரை காத்திருந்தாள்!
நற்குணத்தான் வேறொருத்தி
நாடாதான் ராமனென
கற்பைப் பொதுவெனவே
கம்பன் உரைத்துவைத்தான்!

வானுயர்ந்த வனத்திடையே
வந்தவரின் இனம்நோக்கா(து)
ஊன்தின்னும் வேடனையும்
ஊர்நகைக்கும் குரங்கினையும்
தான்பிறந்த பிறப்பென்று
தம்பியராய்ச் சேர்த்தெடுத்து
மானுடத்தை வாழவைத்த
மன்னன் திருவுருவில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிஇன பேதம்
சாத்திரங்கள் மானிடரை
மோதி மிதிக்கவைக்கும்
முற்றாய் அழிக்குமெனச்
சேதிசொன்னான் தூயநட்பே
சேர்க்கும் வலிமையென்றான்
வேதம் புதிதுதந்தான்
வியனுலகில் வாழ்ந்திருப்பான்!

மந்தரை சூழ்ச்சியாலே
மன்னவன் காடுசென்றான்!
வந்ததோர் சூழ்ச்சியாலே
வன்னியும் வீழ்ந்ததன்றோ
முந்தியோன் காலைவாரி
முடிசூடிக் கொண்டான்தம்பி
மந்திரி யானாரிங்கே
மக்களைக் காட்டித்தந்தே!

அன்றைக்குக் கம்பன்சொன்ன
அரசியல் அநீதியெல்லாம்
இன்றைக்கு எங்கள்வாழ்வில்
இரண்டறக் கலந்தசோகம்
வென்றிடக் காத்திருக்கும்
விடுதலை வேள்விதன்னைக்
கொன்றிடா திருக்கநீதி
கோலோச்ச வேண்டுமம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னல் இழையாலே
  மெருகொளிரும் நவமணிகள்
பின்னித் தொடுத்தாற்போல்
  பற்பலவாய்ப் பாவணிகள்
அன்னைத் தமிழுக்கு
  அழகாகச் சூட்டிவைத்து
முன்னைக்கும் மூத்த
  முத்தமிழின் தேன்சுவையை,

கன்னித் தமிழமுதைக்
  கரைகாணாக் கற்பனையை
அள்ளிப் பருகவென
  அவனிக்குத் தந்துவிட்டு
தன்னைத் தமிழுக்காய்
  தானமாய்த் தந்தகம்பன்
என்றும் நிலைத்திருப்பான்
  எம்மிடையே வாழ்ந்திருப்பான்!

(கவிநாயகர் திரு. வி. கந்தவனம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கம்பன் விழா கவியரங்கத்தில் இடம் பெற்ற கவிதை 30. 05. 2010)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொங்கல் நாள்

மண்ணிலெனை நல்லவண்ணம் மனதார வாழவைத்து
விண்ணுறைந்த தெய்வமென்தாய் மலரடி முன்தொழுதேன்!
செந்தமிழ்த் தெய்வமாம் சேயோனைத் துதித்துஅவன்
செல்வச் சந்நிதியின் சிருங்கார மண்டபத்தில்,
இன்தமிழ் எழுத்தாளர் இணையத்தின் பொங்கல்விழா
இனிதே நிகழுகின்ற இன்பத் தருணமிதே!
இணையத் தலைவருக்கும் இங்குள்ள பெரியோர்க்கும்,
இன்றுஎமை இனியதமிழ் மன்றத்தில் ஏற்றிவைத்து
ஏணியெனக் கீழே எளிமையுடன் அமர்ந்திருக்கும்
எங்கள் குருமார் கவிஞருக்கும் பண்டிதர்க்கும்,
ஆய்வுரைக்கு வந்திருக்கும் அறிஞர்பெரு மக்களுக்கும்,
ஆடற் கலைஞர்கள் அனைவர்க்கும் மற்றிங்கே
முத்தமிழ்ப் பொங்கலினை முழுதாய்ச் சுவைக்கவென
சித்தம் கொண்டிருந்து சிறப்பிக்கும் அவையோர்க்கும்,
அத்தனை மனங்களுக்கும் அன்பு வணக்கங்கள்!
புத்தாண்டு வாழ்த்துக்கள் புதுப்பொங்கல் வாழ்த்துக்கள்!

இன்று எங்கள் பொங்கல்நாள் இனியதமிழ்ப் பண்டிகைநாள்.
நன்றாக நற்பொருள்கள் நாற்றிசையும் பொங்கும்நாள்.
உள்ளமெல்லாம் நிறைந்து உவகையிலே பொங்கும்நாள்
இல்லத்தோர் இணைந்து இன்பத்தில் பொங்கும்நாள்.
பெற்றார்கள் வாழ்த்தினிலே பிள்ளைமனம் பொங்கும்நாள்.
உற்றார்கள் ஒன்றாகி உறவினிலிலே பொங்கும்நாள்.
ஊரெங்கும் திருவிழா உணர்வாகிப் பொங்கும்நாள்.
பாரெங்கும் பாராட்டப் பைந்தமிழர் பொங்கும்நாள்.
நண்பரெலாம் கூடி நட்பினிலே பொங்கும்நாள்.
விண்படரும் கதிரவனின் விடியலிலே பொங்கும்நாள்.
கழனியிலே விளைந்த கதிரறுத்துப் பொங்கும்நாள்.
இளநீர் கரும்போடு இன்சுவையாய்ப் பொங்கும்நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசலிலே மாக்கோல வடிவமைத்துப் பொங்கும்நாள்.
வாசப்பூ மங்கையர்கள் வனப்பினிலே பொங்கும்நாள்.
மத்தாப்பு வெடிக்களிப்பில் மழலையர்கள் பொங்கும்நாள்.
தித்திப்புப் பணியாரம் தீஞ்சுவையிற் பொங்கும்நாள்.
மஞ்சளிஞ்சி இலையோடே மங்கலமாய்ப் பொங்கும்நாள்.
நெஞ்சிருக்கும் வேதனைபோய் நிம்மதியில் பொங்கும்நாள்.
மாடேநற் செல்வமென மனம்நிறைந்து பொங்கும்நாள்.
வீடே நிறைவாக விழுமியங்கள் பொங்கும்நாள்.
மஞ்சடக்கி வீரத்தில் மறவர்கள் பொங்கும்நாள்.
கொஞ்சுமிள வஞ்சியவர் காதலிலே பொங்கும்நாள்.
புத்தாண்டை வரவேற்றுப் பூரிப்பில் பொங்கும்நாள்.
முத்தமிழின் மரபினிலே முப்பாலும் பொங்கும்நாள்.
தைமகளை வாழ்த்தித் தமிழர்நாம் பொங்கும்நாள்.
தைமகளே எமைவாழ்த்தத் தலைவணங்கிப் பொங்கும்நாள்.
இத்தனை இன்பமெலாம் இங்கில்லை யேயென்று
மெத்தவே எங்கள்மன மேங்கித் தவித்தாலும்
வாழவைத்த இம்மண்ணில் வளமாக எத்தனையோ
சூழ இருக்கிறது சுகமாய் அனுபவிக்கப்
போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்தெனல்போல்
யாது கிடைக்கிறதோ அதிலே திருப்திகொள்வோம்!

இப்பெருமை கொண்ட இனிய இந்நாளினிலே
செப்பரிய கவிதைமழை பொழியவரும் கவிஞர்களை,
அழைக்கின்ற நேரமிது யாரைமுன் அழைப்பதென்ற
குழப்பத்தைத் தீர்க்கத் தமிழ்மரபைக் கையெடுத்தேன்.
தாய்நாடு தாய்மொழி தாய்மண்ணெனன் றெப்போதும்
தாய்க்குலத்தை முன்வைக்கும் தமிழர் மரபினிலே
நாவன்மைப் பேச்சாளர் நல்லதமிழ் எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவன்மை மிக்க பாவாணர், மேடையிலே
நடிப்பும் இவருக்கு நன்றாக வந்தகலை!
துடிப்பாய் இணையத்தில் தொழிலாற்றும் செயலாளர்
பண்பாடு மீறார் பழந்தமிழர் நெறிமீறார்
பெண்பாவை மீரா பொங்கல் எனும்தலைப்பில்
தங்கத் தமிழ்க்கவிதை தருகவென அழைக்கின்றேன்
உங்கள் கரங்களினால் ஒலித்து வரவேற்பீர்!

இராகவன் முன்செல்லச் சீதையவள் பின்தொடரும்
இராமாயணக் காலம் இதுவல்ல யாமறிவோம்.
பிராண நாயகியின் பின்னாலே செல்வதுதான்
பிராண நாயகர்கள் பெற்ற பெரும்பெறு.
இங்கிருக்கும் ஆடவரும் இக்கூற்றை ஆதரிப்பார்
பொங்கல் திருநாளில் பொய்கூறமாட்டார்கள்!
உற்றதொன்று வேறில்லைக் கள்வர்களும் காடையரும்
கற்றவர்கள் போல்உலவும் கலிகாலம் இதுவய்யா
காவல் அரணாகக் காத்திடவே என்றேதம்
காதல் மனையாளின் கால்தொடர்வர் காளையர்கள்!
இனிய மனையாளின் இதமான தடம்பார்த்து
கனியும் நடந்து கவிபடைக்கும் முன்னாலே
ஊரறிந்த இவருக்கு உரிமையாய்ச் சிலவார்த்தை!
பேரிருந்த சொல்லுக்குப் பொருந்தும் மனமுடையார்
அறிவியற் கடல்கடைந்து அறிவமுதம் பருகியவர்
பொறியியல் பொருள்கூட்டிப் புதுநூல்கள் ஆக்கியவர்.
கவிதைமேற் காதல்கொண்டு கவிஞராய் ஆகியவர்
செவிக்கினிதாய்ப் பாடும் சிறந்த இசைக்கலைஞர்!
வழிபிறக்கும் எனும்தலைப்பில் வரமாய்க் கவிகொணர்ந்தார்
விழிதிறக்கும் அவர்கவிதை வாழ்த்தி வரவேற்பீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து,
கொட்டும் பனிமழையாய்க் குவியுமிவர் சிந்தனைகள்
பட்டங்கள் தத்துவத்தில் பெற்றபெரும் வித்தகராம்
முரசம் எனவே முரசொலியில் முழங்குபவர்
சிரசில் முடியாகச் செந்தமிழைச் சூடியவர்
தைத்திருநாள் இன்று தமிழர் வரலாற்றை
முத்தாய்ப்பாய் வைத்து முத்தான தமிழாலே
பெரும்புலவர் கன்சீர் விருந்தாய்த் தரும்கவிதை
அருந்திக் களித்திடவே அவரை வரவேற்பீர்!

இவரையடுத்து,
காவல்துறையில் முன்னாள் கனத்த அலுவலகர்
காதல் கவிதையின்மேல் கொண்ட புலவரிவர்
வாட்ட, சாட்டமாய் வாலிபனாய்த் தோன்றமிவர்
பாட்டால் அசத்துகையில் பருவஇள வாலிபன்தான்
ஆனாலும் ஆன்மீகப் பற்றுமிகக் கொண்டவர்க்கு
ஞான கணேசனெனும் நாமம் வெகுபொருத்தம்!
வானலையை இவர்பாடல் வசப்படுத்தல் பார்த்திருப்பீர்
தேனிசையில் அருட்பாடல் தேடிவரக் கேட்டிருப்பீர்
அருட்கவியாய் பெயர்பெற்றார் அரும்பொங்கல் தலைப்பினிலே
பொருட்கவியும் தரவந்தார் பேரொலியால் வரவேற்பீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து வருபவர்,
அகணி எனத்தன் அன்னைபெயர் எழுத்துக்களில்
முகத்தை அறியத்தரும் முகவரியை கொண்டஇவர்
படைத்த பலநூல்கள் பாராட்டைப் பெற்றவைகள்
துடைத்துச் சமுதாயம் தூய்மைபெற வைத்தவைகள்!
சூழுமேற் பரப்பினிலே சலனமற்ற அமைதிகொண்ட
ஆழநீர்த் தேக்கமிவர் அறிவில் மிகஆழம்
தமிழிவரை இயக்க இவர்தமிழை இயக்குபவர்
தமிழீழச் சங்கத்தை இயக்கும் பொறுப்பாளர்
தரமான புலமையிலும் தன்னடக்கம் மிக்கவரை
வருகவென அழைக்கின்றேன் வாழ்த்திடுவீர் கரமொலித்தே!

இறுதியாக,
உருவிலும் காந்தம் உளத்திலும் காந்தம்
கவியிலும் காந்தம் அதன்கருவிலும் காந்தம்
பெயரிலும் காந்தமாய் வருகிறார் காந்தரூபன்
உயரிய கவிதைகள் தருகிறார் வாழ்த்துவீர்!

முடிவாக
சிந்தும் கவிதைத்தேன் சேரவே அள்ளிவைத்து
சீரான கவியரங்க கிண்ணத்தில் சேர்த்தெடுத்து,
வந்தளம் கவிஞர்கள் வார்த்துவைத்தார் பருகவென
வாய்நிறையா விட்டாலும் மனம்நிறையும் நம்புகிறேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

பொங்கல் நாளின்று பூக்கும் பொற்காலம்
பொழுதின்று விடிந்தது நமக்காய்
உங்கள் எல்லோர்க்கும் உயரட்டும் வாழ்வு
உழைப்பிலே உறுதியாய் இருப்போம்
தங்கட்டும் இன்பம் தளைக்கட்டும் அறிவு
தமிழராய் தலைநிமிர்ந் திடுவோம்
எங்கெலாம் பரந்து ஏற்றம் பெற்றாலும்
அங்கெலாம் தமிழராய் வாழ்வோம்!

(15. 01. 2012ல் கனடா செல்வச் சந்நிதி முருகன் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற பொங்கல் விழாக் கவியரங்கத்தில் தலைமைவகித்துப் பாடியது.)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி 3

# விடுதலைக் காற்றில் விரிந்த மொட்டுக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியத் தலைவன்

தலைவன் பெயர் தனிமனிதன் பெயரல்ல
தமிழர் நாவெல்லாம் உச்சரிக்கும்
ஆறெழுத்து மந்திரம்!

அகிலமெங்கும் அறியப்பட்ட பெயர்
அகிலமெங்கும் தமிழையும் தமிழினத்தையும்
அறிய வைத்த பெயர்!

ஈழத்தின் இதயத்துடிப்பை இன்றைக்கும் என்றைக்கும்
இயக்கி நிற்கும் இயந்திர சக்தி!

தமிழர்தம் வீரவரலாற்றின்
புதிய பதிப்பு! புரட்சிப் படைப்பு!

இலட்சியத்தின் மேலான உறுதிக்கும் அர்ப்பணிப்புக்கும்
இன்னொரு பெயர்!

தமிழினத்தின் எந்தத் தலைமுறையும் பெறற்கரிய
தனிப் பெரும் சொத்து!

இப்பூமிப் பந்தையே புரட்டிப் போட்ட
புரட்சிப் புயல்!

கூனிக் குறுகிக்கிடந்த ஒரு தேசிய இனத்தின்
முதுகெலும்பை நிமிர்த்தி நேராக்கிய
நெம்புகோல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழினத்தைப் பலியெடுத்த பேய்களெல்லாம்
கிலிபிடித்து ஓட வைத்த இறை சக்தி!

வள்ளுவன் வகுத்த அரசியல் வழியில்
கோலோச்சிய கொற்றவன்!

உலகத் தமிழர்கள் உள்ளமெலாம் குடியிருக்கும்
உண்மைத் தலைவன் உன்னதத் தலைவன்!

ஒற்றையாய் நின்று போராடிய அந்த மாவீரனை
உலகத்தைத் திரட்டி வந்தே
வீழ்த்த முடிந்தது எதிரியினால்!
சத்தியமும் நீதியுமாய் நின்ற தலைவனைச்
சதியும் சூழ்ச்சியுமே சரிய வைத்தது!

ஈழத்து அடிவானில் அவன் வரவழைத்த
இளங்கதிரை இருள் மேகங்கள் இன்று
இறுக மூடியிருக்கலாம்
இன்றில்லா விட்டாலும் என்றோ ஒரு நாள்
இருள் மேகங்கள் மெல்லக் கலையும்
இளங்கதிரொளியில் ஈழம் மலரும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லாண்டு நீவாழ்க!

இருள்கவிந்து போயிருந்த ஈழத்து வான்பரப்பில்
ஒளிதுலங்க உதித்தஇள ஞாயிறே நீவாழ்க!

பேரினவாதப் பெருஞ் சுழியிற் சிக்கியநம்
சீரழிந்த நிலைமாற்றிச் சிறக்கவைத்தோய் நீவாழ்க!

தெய்வந்தான் இனித்துணை யென்றேங்கி யிருந்தார்க்கு
தெய்வமாய் வந்துதிசை காட்டினாய் நீவாழ்க!

மெய்யொடுங்கி அஞ்சியுளம் சோர்ந்து கிடந்தவர்க்கு
கைவேற் படைகொடுத்துக் களமமைத்தாய் நீவாழ்க!

இலட்சியத்தில் தளராவுன் உள்ளத் துறுதிகண்டே
லட்சோப மாய்த்தமிழர் உன்வழியே அணிநின்றார்!

தடுமாறி விலைபோன தலைவர்கள் வந்துசென்றார்
தடுமாற்ற மென்றுமிலாத் தலைவனாய் நீநிலைத்தாய்!

இன்னலிருள் சுட்டெரிக்க எழுந்துவந்த சூரியன்நீ
மின்மினிகள் உனையெரிக்க விழைந்ததுவே வேடிக்கை!

உள்ளத்தின் பலம்தான் உன்படையின் பலமதனால்
கள்ளத்தில் பகைவளர்த்தோர் களம்வீழ்ந்தார் கண்டவுண்மை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணின் விடுதலையும் மானமுறு நல்வாழ்வும்
பெண்ணின் விடுதலையும் பெற்றிடுவோம் உன்நாளில்!

தரணியெலாம் வியந்த தமிழ்க்குலத்தின் தலைவன்நீ!
தரணியெலாம் தமிழின் தடம்பதியச் செய்தவன்நீ

புறநா னூறுகூடப் புகலாப்போர் வரலாற்றை
புதுநா னூறொன்றில் பதியவைத்த பெருந்தலைவா!

அகவை ஐம்பதினுள் அடியெடுத்து வைக்குமுனை
அகவை பல்லாண்டு அடைந்திடநாம் வாழ்த்துகிறோம்!

எமதினத்தின் உயிர்நீயே! எமதினத்தின் உடல்நீயே!
எமதுஇனம் வாழ்ந்திடநீ பல்லாண்டு வாழியவே!

(தமிழீழத் தேசியத் தலைவரின் 50வது அகவையையொட்டி எழுதிய கவிதை முழக்கம் - 17. 12. 2004)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க பல்லாண்டு!

எந்தையர் தாயர்தம் முந்தையர் யாவரும்
இன்புற வாழ்ந்த நன்நாட்டில்
வந்தெமை ஆண்டவர் வைத்தசெந் தீயிலே
வெந்து நீறான தெம்வாழ்வே!
சிந்தை கலங்கிநாம் நொந்து துயரிலே
சீரிழந்து நின்ற வேளை
விந்தைக் கதிர்வட வானிலே தோன்றினான்
விடிவு அவனால்தான் நாளை!

நெஞ்சிற் கனவைச் சுமக்கும் வயதிலே
நஞ்சைக் கழுத்திற் சுமந்தான்!
அஞ்சிப் பகைகண்டு அடங்கிக் கிடந்தவர்
அச்சம் தவிர்ந்தெழ வைத்தான்!
கெஞ்சிப் பகைவனின் காலைப் பிடிப்பது
கேடுற்ற பேடிகள் வேலை!
வெஞ்சின வேங்கையாய் மாறுங்கள் வாருங்கள்
வீழ்த்துவோம் வெம்பகை என்றான்!

கார்த்திகைப் பூவாய் மலர்ந்தவன் ஈழத்தைக்
காக்கும் புலியாய் எழுந்தான்!
மூர்க்க விலங்கென மோதி மிதித்தவர்
மூச்சிழந்து மண்ணில் வீழ்ந்தார்!
பார்வியக் கும்படை கொண்டு நம்தேசப்
பகையறுக் கும்பலந் தந்தான்!
தீர்க்க தரிசனம் கொண்ட தலைவனைத்
தீந்தமிழ்த் தாய்இன்று தந்தாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூழுக்கும் கூறைக்கும் கொள்கையை விற்றவர்
  கோடரிக் காம்புகள் ஆனார்!
கோழை களாய்இன மானமிழந் தெங்கள்
  கொற்ற வனைக்குறி வைத்தார்!
நாளைச் சரித்திர ஏட்டில் இவ்வீனர்கள்
  நாயிலும் கீழென ஆவார்!
வாழும்தமிழ் இனம்வாழும் திசையெலாம்
  வாழும் தலைவன் பெயர்தான்!

மலர்ந்தது ஐம்பது கார்த்திகைப் பூக்களெம்
  மன்னனே வாழ்க பல்லாண்டு!
புலர்ந்திடும் மண்ணிலே புத்தொளி யேற்றும்
  பரிதியே வாழ்க பல்லாண்டு!
விலங்கு ஒடித்துநல் வாழ்வு தரவந்த
  வேந்தனே வாழ்க பல்லாண்டு!
நலம்பல பெற்றென்றும் வாழ்க தலைவனே
  நன்றேநீ வாழ்க பல்லாண்டு!

(தாய்நாடு பத்திரிகையால் வெளியிடப்பட்ட புதுநானூற்றின் பரணி கவிதை நூல் தொகுப்பில் இடம்பெற்ற கவிதை மார்ச் 2005)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கு தமிழ்

பொங்கியது எங்கள் தமிழ்
புகலிடத்துப் புற்தரையில்!
வெறும் பொங்கலா அது?
வெடித்த எரிமலையிருந்து
வீசியடித்த தீக்குழம்பு!
பூங்காத் திடலுக்கும்
புதுப்பொலிவு அன்றேதான்!
நயாகராவீழ்ச்சி அங்கே
நகர்ந்து வந்ததுவா?
உணர்ச்சிப் பிரவாகம்
உடைப் பெடுத்துப்
பாய்ந்தது பார்!
வேற்று நாட்டினிலே
விழுது விட்டவர்கள்
வேரறுக்கவில்லை எனப்
பொங்கியது பொங்குதமிழ்!
ஒருலட்சம் கரங்களிலும்
உத்தமத் தலைவனவன்
உதயக் கதிரவனாய்
ஒளிவீசிக் கொண்டிருந்தான்!
சிகப்பும் மஞ்சளுமாய்ச்
சிரித்தது பச்சைநிலம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கு தமிழ் இனியென்றும்
பொங்காது காண் என்று
சங்காரம் செய்தவர்க்கும்
சிங்கத்தின் உறுமலெனச்
சீறிச் சினந்தோர்க்கும்
அடிவயிற்றில் அன்று
அனலே விழுந்திருக்கும்!

தலைமையையும் தன்னாட்சித்
தாயகத்தின் உரிமையையும்
முழக்கும் முரசங்களாய்
முழங்கியது பொங்கு தமிழ்!
எத்தனை முறையாக
எத்தனை வழியாக
எங்கள் உரிமைக்காய்
கதவுகளைத் தட்டிநின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் கதவுகளும்
உள்நாட்டின் கதவுகளும்
திறக்க மனமின்றி
இறுகிக் கிடக்கின்றன!
புகலிடத்து மண்ணிலன்று
பொங்கி எழுந்த தமிழ்
அந்தக் கதவுகளில்
அதிர ஒலித்திருக்கும்!
இனியும் இக்கதவுகள்
இளகா திருக்குமெனில்
பொங்கு தமிழ் இன்னுமின்னும்
உலகெங்கும் பொங்கியெழும்
இறுகிய கதவுகளை
இளகித் திறக்கவைக்கும்!

(உலகத்தமிழர் 01. 10. 2004 ரொரன்ரோ மாநகரில் நடந்த பொங்கு தமிழ் நிகழ்வின் பின்பு எழுதிய கவிதை.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீள்துயிலில் நித்திலப் புன்னகை

நித்திலப் புன்னகை சொத்தெனக் கொண்டவன்
நீள்துயில் ஆழ்ந்துவிட்டான் - எனும்
சித்தம் கலங்கிடச் செய்தஅவ் வைகறைச்
சேதியில் நாமுறைந்தோம்!
பித்துப் பிடித்திட்ட பேரின வாதிகள்
போடும் எலும்புகட்காய் - இனம்
விற்றுப் பிழைக்கின்ற வீணர்கள் உங்களை
வீழ்த்தி மகிழ்ந்தனரோ?

சின்ன வயதினில் உன்னை விடுதலைச்
சேனையிலே இணைத்தாய் - தமிழ்
அன்னை விலங்கை அறுக்கும் பணியிலுன்
ஆவியை அர்ப்பணித்தாய்!
மின்ன லெனக்களம் மீதிற் பகைவரை
மோதி மிதித்தவனே - மக்கள்
இன்னல்கள் தீருமென் றெண்ணி இருக்கையில்
எம்மைவிட் டேன்பிரிந்தாய்?

பேசியே தீர்வினைக் காண விழைந்திட்ட
தேச அரங்கினிலே - ஈழத்
தேசியத் தின்குர லோடுஉன் வாதத்
திறனை அறியவைத்தாய்!
பாசிசச் சிங்கள ஆட்சிக் கயவரின்
போலிமுகம் கிழித்தாய் - அவர்
கூசி உடலம் குறுகிடக் குற்றத்தைக்
கூண்டில் நிறுத்திவைத்தாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுண்மதி கொண்டமா மன்னனின் தம்பியாய்
வன்னி அரசமைத்தாய் - செயல்
வன்மையும் சொல்லதன் மென்மையும் கூடியே
வல்லவனாய்த் திகழ்ந்தாய்!
பன்னெடுந் தேசத்துத் தூதர் பலருந்தன்
பாசறை தேடிவந்தார் - அங்கே
இன்னரும் ஆட்சியில் ஈழத்தைக் கண்டவர்
ஏற்றி வியந்துநின்றார்!

சிந்தைக் கினிய தலைவனே செந்தமிழ்ச்
செல்வனே உன்னிழப்பால் - உள்ளம்
நொந்து நொடிந்து நிலைதளர்ந் தாலுமெம்
நீண்ட பயணத்திலே
வந்த பெருமிழப் பொன்றோ பல்லாயிரம்
வாடித் துவண்டுவிடோம் - உயிர்
தந்து விடுதலைக் காயுர மூட்டினீர்
தாள்கள் வணங்குகிறோம்!

(பிரிகேடியர் சுப.தமிழ்ச்செல்வன் அவர்களின் மறைவுகேட்டு எழுதப்பட்டது நவம்பர் 2007)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசத்தின் குரல்!

மேகமாய்த் துயரமென் விழிகளை மூடிநீர்
முத்து முத்தாய்க் கோர்த்திட
சோகமே தோய்ந்தஎன் கரம்பட்ட எழுதுகோல்
சிரம்தாழ்ந் ததுனைப் பாடிட!
தாகமாய்த் தமிழீழத் தாயகம் வரித்திட்ட
தமிழன்னை தந்த மகனின்
பாகமாய் வாழ்ந்த வெம்பரிதியே எமைவிட்டுப்
பாதியில் மறைந்த தேனோ?

தாய்மண்ணின் வாசனைத் தமிழிலே அரங்கினைத்
தளைபோடும் வித்தை கண்டாய்!
தேய்பிறை யாயுடல் தேய்ந்திட்ட போதிலும்
தேயாத உள்ளம் கொண்டாய்!
வாய்மொழி யாலுனை வாதத்தில் வென்றிட
வையத் தெவரு மில்லை!
நோய்வென்று சென்றதேன் நோயோடு ஒப்பந்தம்
நேசமா யென்று செய்தாய்?

பாராளு மன்றத்துப் பதவியால் நீஇன்று
பேர்பெற்ற தலைவ னல்ல!
போராளி யாய்க்கள மாடியே அரசியல்
புரிந்ததால் தலைவ னானாய்!
கூரான மதிநுட்பம் குன்றாத தத்துவக்
கொள்கையால் ஞானி ஆனாய்!
தேரோட்டியாய் வந்து கீதை மொழிந்ததால்
தேசத்தின் குரலு மானாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூபத்து ஆண்டுகள் முழுமையும் மிடிமையின்
முடிவுக்காய் வாழ்ந்து வந்தாய்!
தீபத்தின் ஒளியாகத் திசைகாட்டி இருள்போக்கித்
திரியாகத் தீய்ந்த தேனோ?
சாபத்தின் கேடாகச் சலுகைக்காய்த் தமிழினம்
சாய்ந்துகால் வீழ லாமோ?
தீபற்றி எரிகின்ற தேசத்தை ஒன்றாகத்
திரண்டுநாம் வெல்வோம் என்றாய்!

மாபெரும் தலைவனின் மாவீரர் உரைக்குஉன்
மதியுரை கேட்ப தெங்கே?
சாவிலும் தளராத நெஞ்சமே இனியுந்தன்
சாணக்கியம் காண்ப தெங்கே?
பூவினும் மெல்லிய புன்னகை யோடொரு
நகைச்சுவை பூப்ப தெங்கே
நாவசைந் திடும்போது உலகமே அசையாத
நாவன்மை காண்ப தெங்கே?


குலையாத உளங்கொண்ட வேங்கைகள் உயிர்மூச்சுக்
காற்றானாய் பாலா அண்ணா!
விலைபோகாக் கொள்கையின் குன்றான தலைவனின்
வலமானாய் பாலா அண்ணா!
முலையூட்டும் மழலைக்கும் முதிர்ந்திட்ட இளைஞர்க்கும்
முதியோர்க்கும் பாலா அண்ணா!
சிலையிலே எழுத்தாயெம் சிந்தையில் பதிந்தநற்
சித்திரம் பாலா அண்ணா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றினோம் அன்னையும் அப்பனும் எனவாகி
பொழுதெலாம் காத்து வந்தீர்
போற்றினோம் அடேலன்னை பாதங்கள் அன்னவர்
பொன்மனம் அமைதி காண
போற்றினோம் அண்ணனின் புகழுடல் மீதெங்கள்
பாமாலை சூட்டி வைத்தோம்
போற்றினோம் ஓய்ந்திட்ட தேசத்தின் குரலினை
போற்றினோம் போற்றி போற்றி!

(தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின் மறைவையொட்டி எழுதிய கவிதை. உதயன் 22. 12. 2006)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைக் குரல்

சமாதான நீறு பூத்திருக்க அதனுள்ளே
தகித்துக்கொண்டிருக்கிறது இனவாத நெருப்பு!
அனும அவதாரங்கள் அவ்வப்போது அந்நெருப்பெடுத்து
ஈழத்து நகரங்களை எரியூட்டிக் களிக்கின்றன!

இன அழிப்பு தின அழிப்பாய் அரங்கேற
போரியல் பண்பாடு புரியாத வெறிப்படைக்குப்
பெண்கள் குழந்தைகள் முதியோர் எனும்
பேதமின்றிப் பலியாகின்றன அப்பாவி உயிர்கள்!

இச்சைவெறி கொண்ட இருகால் விலங்குகள்
பச்சைக் கொடிகளைக் கசக்கியெறிகின்றன!
ஐம்பதுகளில் ஆரம்பித்த அராஜகப் பயணம்
அல்லைப்பிட்டியூடாக வங்காலை தாண்டிப்
பயணித்துக்கொண்டிருக்கிறது அடுத்த இலக்குத் தேடி!

உறவுகளின் இதயக்குழிகள் அடைத்துக்கொள்ள
கைதாகிக் காணாமற்போகும் தமிழரின் உடலங்கள்
மனிதப் புதைகுழிகளினூடே தலை காட்டுகின்றன!

தமிழ்க் குருதி வற்றிப்போன ஒட்டுக்குழு அட்டைகள்
தமிழ்க் குருதி பருகித் தாகம் தணிந்தபின்
எதிரியின் குட்டையில் வீழ்ந்து ஓய்வெடுத்துக் கொள்கின்றன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள அரசின் கண்காணிப்புக் கூண்டுக்குள்
சிறைப்பட்ட நிலையில் கண்காணிப்புப் பறவைகள்!
சனநாயகக் காவல்தெய்வங்களாய் காட்சி தந்த நாடுகள்
கல்லாய்ச் சமைந்து கண்மூடிக் கிடக்கின்றன!

மனித உரிமைக்காய் குரலெழுப்பும் உலக நிறுவனங்கள்
மகாத்மாவின் குரங்குகளாய் கண் காது வாய் மூடி
உணர்வுநிலை இழந்து ஒடுங்கிக் கிடக்கின்றன!

அகிலத்து அரசத் திரைஅரங்குகளில்
விடுதலை எழுச்சிக்குப் பயங்கரவாதக் கத்தரிப்பு!
அரச பயங்கரவாதத்துக்கு சனநாயகச் சித்தரிப்பு!

எங்கள் பூனைகள் ஆடுவது எலிவேட்டையல்ல
புலிவேட்டை என்னும் படைத்தலைமை அறிக்கையை
ஆமாம் சாமிபோட்டு ஆமோதிக்கின்றன உலக நாடுகள்!

ஏமாற்று ஒப்பந்தப் பெருந்தொடர் நாடகங்கள்
அரங்கேறும் திரையின் பின்னே
அழிந்து கொண்டிருக்கிறது தமிழினம்!

ஆனாலும் இந்த அவலங்களையும் அழிவுகளையும் மீறிப்
பீனிக்ஸ் பறவைகளாகப் பிறப்பெடுக்கும் வல்லமை
தாயக மக்களிடம் ததும்பி நிற்கிறது!

தடைக் கற்களை வெற்றிப் படிக்கற்களாக்கும்
பரிணாம யுத்தி கொண்ட வேங்கைகள் நெஞ்சில்
விடுதலை வேட்கை மேலும் வீறுகொண்டு தெரிகிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனஆழத்தை அசைக்கும் அதிர்வலைகள்
சுனாமியாய்ப் பொங்கியெழப் பொழுது பார்த்து நிற்கின்றன!

இந்நிலையில் இங்குள்ள தமிழர்நாம் என்செய்யப்போகிறோம்?
இனவாதத் தீநாக்குகளின் தீண்டலுக்குத் தப்பிவிட்ட
இன்பப்பூரிப்பில் இறுமாந்து கிடப்போமா?

திண்டாடும் உறவுகளின் நிலையெண்ணிப்பார்க்காமல்
கொண்டாட்டம் போட்டுக் குதூகலித்துக் கிடப்போமா?

கோடம்பாக்கத்துக் கோடிகளில் வலைவிரித்து
சிக்கிய பறவைகளை சிரமமின்றிக் கொண்டு வந்து
கோடியாய்க் கொட்டிக் குளிரவைத்துப் பார்ப்போமா?

உள்ளம் திறந்தொருக்கால் உண்மைநிலை தேருங்கள்!
உறவுகளின் வாழ்வோங்க ஒன்றுபட்டு வாருங்கள்!
ஒருமுறை இங்கொலித்த உரிமைக்குரல் போதாது!
உரிமை கிடைக்கும்வரை ஓயாதொலிக்கட்டும்!

இங்கொலிக்கும் எங்கள் உரிமைக் குரல்தான்
ஈழத்துக்கு நாம் வழங்கும் ஊக்க மாத்திரை!
உலகை உசுப்பவல்ல ஊட்ட மாத்திரை!
பேரினவாதிகளைக் கலக்கும் பேதி மாத்திரை!

(முழக்கம் 21. 07. 2006 - தாயகத்து அவலங்களுக்காகக் குரல் கொடுத்து கனடா மண்ணில் நடத்தப்பட்ட உரிமைக் குரல் நிகழ்ச்சியை ஆதரித்து எழுதப்பட்டது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்களும் நீங்களும்

ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் நாங்கள்!
அவலமும் அவதியும் அனுதினமாய் அனுபவிக்கும்
அதிட்டமற்ற ஆன்மாக்களுக்காய் அழுதுவடிய
அவகாசமும் அவசரமும் எமக்கெங்கே?

பணக்காரன் வீட்டுத் தோட்டத்திலே
பதியம் வைக்கப்பட்ட
பட்டுரோசாக் கன்றுகள் நாங்கள்!
பாலைவனத்துப் பரட்டைச் செடிகளுக்காய்ப்
பரிதாபப்பட நமக்கென்ன தலையெழுத்து?

பசியென்ற சொல்லெங்கள் அகராதி காணாத
பாக்கியவான்கள் நாங்கள்!
பாலின்றிப் பரிதவிக்கும் கன்றுகளுக்கும்
பசியால் வயிறொட்டிய பசுக்களுக்குமெனப்
பச்சாதாபப்பட்டுப் பலனென்ன எங்களுக்கு?

சந்தனத் தென்றல் வீசும்
சமாதானப் பூங்கா எங்கள் வாழ்விடம்!
சாக்காட்டில் நடுவினிலே திக்குத் தெரியாமல்
சிதறியோடும் சீவன்களுக்காய்ச்
சிந்தைகலங்கச் சித்தமில்லை எங்களுக்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடேற்றியின் தகிப்பிலும் குளிரூட்டியின் தணிப்பிலும்
சொகுசில் திளைக்கும் சுகவாசிகள் நாங்கள்!
கொட்டும் மழையும் கொளுத்தும் வெயிலும்
வாட்டும் பனியும் வாழ்வின் அங்கமாகி
வானக் கூரையின் கீழ் வாழ்விடம் கொண்டோர்க்காய்
வருந்தமாட்டோம் நாங்கள் விட்டுவிட்டோம்
வகுத்தோன் வகுத்த வழி அதுவென்றே!

விதைக்கப்பட்ட மண்ணிலிருந்து
வேரறுத்து வந்து விருட்சமானவர்கள் நாங்கள்!
விதைக்கு உயிர் கொடுத்து உரமூட்டிய
விளைநிலம் வெம்பாலையானது அதன்
விதியெனவே விட்டுவிட்டோம்!

வாழ்விழந்த போதும்
வாரிக் கொடுக்க உயிரையும்
வலிந்தபகையறுக்க உறுதியையும்
வரித்துக் கொண்ட வேங்கைகள் உங்கள் வசம்
வீரவரலாற்றை அவர்கள் வசப்படுத்தும் போதும்
விடுதலை ஒளி உங்கள் முன் விரியும்போதும்
வானலையையிங்கே நாங்கள் வசப்படுத்துவோம்
ஏனெனில்
வாழ்த்தவும் தூற்றவும் வாய் படைத்த
வல்லமை வேறொன்றுமில்லா வாய்வீரர் நாங்கள்!

(சிறிலங்கா இராணுவத்தின் இனஅழிப்பு வெறியினால் இடம் பெயர்ந்து அல்லலுறும் வன்னிமண் உறவுகளுக்காக எழுதப்பட்டது. முழக்கம் 12. 09. 2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை நமதே!

கவிதை வடிக்கக் கைபிடித்த எழுதுகோலும்
கண்ணீர் வடித்துக் கதறி அழுகிறுது!
பாதக அரசு பலிகொள்ளும் மக்கள்தொகை
பத்தாகி நூறாகிப் பல்லா யிரமாயாச்சு!
கவிதையாய் வாழ்ந்த ஈழத்து மக்கள்படும்
கற்பனைக்கும் எட்டாத பேரவலம் எத்தனைநாள்?
மலர்ந்து மணம் பரப்பிய மலர்வனமின்று
மயான பூமியாய் மண்டிக் கிடக்கிறது!
நாற்றிசையும் பரந்த நஞ்சையிலும் புஞ்சையிலும்
நரபலிப் பேய்களன்றோ நடமாடித் திரிகின்றன!
பஞ்சமும் பட்டினியும் பரம்பரைக்கும் பாராதோர்
பஞ்சைகளாய் இன்று பரிதவித்து மாளுகின்றார்!
செந்நெல் மணிகளாற் செழித்துக் கிடந்தநிலம்
செங்குருதி பாய்ந்து சேறாகிப் போயிற்று!

முக்கனிகள் கொட்டிக் கிடந்தஅம் முற்றத்தில்
முற்றும் சிதைந்த மனித உடலங்கள்!
கொத்துக் குண்டுகளால் கொழுந்தும் குருத்துமெனக்
கொத்துக் கொத்தாகக் கொய்படுதல் தாங்கவில்லை!
சிறார்கள் படையிலென்று சீறிய உலகமெலாம்
சின்னஞ் சிறுசுகளின் சிதறுமுடல் காணலையோ?
ஆவி பிரிந்த அன்னையிடம் பால்குடிக்கும்
அரும்புகள் பற்றியிந்த அகிலம் அறியலையோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழியும் விலங்குகட்காய் ஆற்றாது அழுமுலகம்
அழிந்துபடும் தமிழினத்தை ஆதரித்தல் வேண்டாமோ?
ஆற்றொணாத் துயரத்தை அனுபவித்து மீட்சியிலா
அவலத்தில் வீழ்ந்து அழிந்துபடல் தீர்ப்பாமோ?

இறையாண்மை வேலிக்குள் இயற்றும் இனக்கொலைக்கு
இருகை கொடுத்துதவும் இதயமற்ற நாடுகளே!
பயங்கர வாத ஒழிப்பென்னும் போர்வையிலே
படுகொலை செய்வோர்க்குப் பால்வார்க்கும் அரசுகளே!
புலிகளை எதிர்கொள்ள வலுவற்றுத் தமிழினத்தைப்
பலிகொள்ளும் பாதகர்க்கு பலம்சேர்க்கும் பாரதமே!

உள்ளத்தில் வலியேற்றி உயிரைப் பறித்தெடுத்து
ஓடவிரட்டி விட்டால் ஓய்ந்திடுமோ உரிமைப்போர்!
உணவு உடையுறையுள் உரிமை யெலாமிழந்தும்
உதயத்தின் ஒளிக்காக உயிர்சுமக்கும் தமிழர்நாம்!
வீழப் பிறக்கவில்லை வாழப் பிறந்தவர்நாம்
வீழ்ந்ததிலிருந்து மீண்டு எழுந்ததே எங்கள் இனம்!
ஆயிரமாய் விதைபுதைந்து அதிசயமாய் முளைவிட்டு
அழகாக விழுதுவிட்ட ஆல விருட்சமிது!
ஆடிக் காற்றடித்து இவ்வாலமரம் வீழ்ந்திடுமோ
அசைந்தாடும் காற்றாலே அகல்விளக்கு அணைந்திடுமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எம்தலைவன் ஏற்றிவைத்த ஈழ விடுதலைத்தீ
எட்டுத்திசை பரவி எரிகிறது கொழுந்துவிட்டு!
நாளை பிறந்துவரும் நமது மழலைகளும்
நம்தலைவன் பெயரை நாவினிலே வைத்திருக்கும்!
தமிழ்வாழும் நாடெல்லாம் தமிழீழப் பேரெழிச்சி
தலைமுறை மாறிஇளந் தலைமுறையின் கைகளிலே!
அறமோர்நாள் வெல்லுமென்பது அகிலத்து நியதியெனில்
அறம்பிழைத்த ஆட்சியர்க்கு அதுகொடுக்கும் தீர்ப்பென்ன?
அல்லற் பட்டாற்றாது அழுதவர்கள் கண்ணீரில்
ஆனந்தம் கொண்டோர்க்கு அறமொருநாள் பதில்கூறும்!
மனித அவலத்தை மண்ணில் பயிரிட்டோர்
மாறிக் கதிரறுக்கும் மாற்றமொன்று நாளைவரும்!
வான்வெளியில் வட்டமிட்டு எச்சமிடும் வல்லூறின்
வன்சிறகுகள் ஒடிந்து வீழும்நாள் நாளைவரும்!

கந்தத் தீயுமிழும் கணைவெடிகள் காவிவந்த
காற்றும் ஒருநாள் கட்டாயம் திசைமாறும்!
உரிமைப் போர்வேளையிலே உயரத்தில் பறக்கும்கொடி
உலகத்து மன்றங்களில் ஒளிவீசும் நாள்பிறக்கும்!
உள்ளத்தால் உணர்வாலே ஒன்றாகி உலகமெல்லாம்
உரிமை முழக்கத்தை ஓயாது ஒலித்திடுவோம்!
தமிழர்கள் தாகமாம் தமிழீழம் தளையறுத்து
தனிநாடாய் மலர்ந்துவரும் தளராது போரிடுவோம்!

(2009 மே மாத நடுப்பகுதியில் சிறீலங்கா அரசு இன அழிப்பிப்பின் உச்சத்தில் நின்று அகோரத் தாண்டவமாடியபோது இதயம் நொருங்கிப்போய் அதிலிருந்து வடிந்த இரத்தக் கசிவு இது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இத்தொகுதிக் கவிதைகளிலுள்ள
உணர்வோட்டமும் கற்பனை வளமும்
சொற்சுவையும் பொருள் நயமும் மாவிலி
மைந்தனை ஒரு நல்ல கவிஞனாகக்
காட்டுகின்றன.
- கவிநாயகர் வி. கந்தவனம்

கவிஞர்கள் இவர் கூறும் உத்திகளையும்
அணிகளையும் இரசிப்பர். புறநானூற்றின்
இயற்கைக் கொள்கையும் வீரமும் செறிந்த
இந்நூல் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு
நல்ல தமிழ் விருந்தாகும்.
- பண்டிதர் மா. செ. அலெக்ஸ்சாந்தர்

மிகச் சிறந்த வெண்பாக்களை "வைகறை
வானம்" சுமந்து வருகின்றமை
ஆசிரியரின் கவிதை புனையும்
ஆற்றலுக்கு எடுத்துக்காட்டு.
- த. சிவபாலு

'வைகறை வானம்' சாவிலாப் பாடல்கள்
சந்தங்கள் சேரவே மோனை எதுகை முட்டி
மோதிடும் காவியப் படையல்...
- துறையூரான்

கவித்துவத்துக்கு உள்ள பல
குணாம்சங்கள் மாவிலி மைந்தனிடம்
நிறையவே இருக்கின்றன.
- நக்கீரன்

கலைநயமும் நெகிழ்ச்சியும் மனிதாபிமான
நோக்கும் இங்கு இழையோடுகின்றன.
- திரு எஸ். திருச்செல்வம்

இத்தொகுப்பானது நுகர்வோர்
நெஞ்சங்களைத் தன்வயப்படுத்தும்.
- பவானி தர்மகுலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org